மதுரை சீடு குழந்தைகள் பேரவை வெளியிடும்

# புதுயுகம்

தனிச்சுற்று சிற்றிதழ்

மதுரை சீடு கல்வி மையங்களின் 10ஆம் ஆண்டு கொண்டாட்டங்களையொட்டி குழந்தைகளுக்கு இலவசமாக வழங்க பிரசுரிக்கப்படும் சிறுகதை சிறப்பிதழ்

உலகு2
ஆகஸ்ட் - நவம்பர் 2008
பனிமடல் - 9

## குழந்தைகளின் எண்ணங்களை, ஏக்கங்களை, கனவுகளை, உலகங்களை எழுத்துகளாக்கும் சமூக சிற்பிகளுக்கு மதுரை சீடு அறக்கட்டளையின் வணக்கங்களும், நன்றிகளும் !

உள்ளே...

- கி.இராஜநாராயணன்
- கு.அழகிரிசாமி
- சுந்தரராமசாமி
- வண்ணதாசன்
- இமையம்
- மாலன்
- ச.தமிழ்ச்செல்வன்
- திருவையாறு எஸ்.பாலகுமார்
- திருவாழித்தான்
- சரஸன்

---

மதுரை சீடு அறக்கட்டளை நலிவுற்ற குழந்தைகள், இளைஞர்கள் மேம்பாடு மற்றும் குழந்தைகள் உரிமைக்காகவும், வளமைக் கல்விக்காகவும் பணி செய்யும் ஓர் தன்னார்வ தொண்டு நிறுவனமாகும்.

# எழுத்துக்களை ஏந்தி....

அன்புள்ள வாசக நெஞ்சங்களே

புதுயுகம், குழந்தைகளே குழந்தைகளுக்காக நடத்தும் ஒரு தனிச் சுற்று இதழ், மதுரை சீடு அமைப்பின் 10 ஆம் ஆண்டு கொண்டாட்டங்களையொட்டி புதுயுகம் இதழ் குழு தன் பங்குக்கு காரியமாற்ற சிந்தித்ததன் விளைவாக ஏதேனும், சிறப்பிதழ் வெளியிடலாம் என சீடு நிர்வாகக் குழுவிடம் விண்ணப்பித்தது. எதிர்பார்த்தது போலவே சீடு நிர்வாக குழுவும் சரியென தலையசைக்க, குழந்தைகளிடமும், இளைஞர்களிடமும் விவாதம் பின்வருமாறு எழுந்தது என்னென்ன கதைகளைப் போடலாம் ? குழந்தைகள் குழந்தைகளுக்காக எழுதிய கதைகளைப் போடலாமா ? பெரியவர்கள் குழந்தைகளைப்பற்றி எழுதிய கதைகளைப் போடலாமா ? என்ற கலந்துரையாடலுக்குப் பிறகு பெரியவர்கள் குழந்தைகளைப் பற்றி எழுதிய கதைகளைப் பிரசுரிக்கலாம் என்று முடிவெடுத்தனர். சீடு இளைஞர்கள் கதைத் தேர்வில் புதுயுகம் இதழ் குழுவிற்கு உற்ற துணையாய் இருந்தனர்.

குழந்தைகளின் படைப்பார்வத்தை பெருக்கிக் கொள்ளவும், சக குழந்தைகளின் வாழ்முறைகளையும் அறிந்து கொள்ளுதலும் நம் கதைத் தொகுப்பின் நோக்கமாகும்.

சீடு மற்றும் அண்ணன் கார்த்திக் பாரதி கற்பித்த இலக்கியக் கல்வியின் மூலம் செழுமை பெற்ற சீடு இளைஞர்கள் தாம் படித்து விவாதித்ததை நினைவு கூர்ந்தார்கள். புதுயுகம் இதழ் குழு இக்கதைகள் யாவும் 12 முதல் 18 வயது வரையுள்ள எல்லாக் குழந்தைகளும் வாசிக்கத் தகுந்தது என்று முடிவு செய்தனர். குழந்தைகளுக்கு கொண்டு செல்லும் ஆசை, செயல் வடிவும் பெற்றது. தற்போது தங்களது கரங்களில் சிறப்பிதழ், நாங்கள் முறையாக படைப்பாளர்களிடம் அனுமதி பெறவில்லை. அது எங்களால் இயலாத காரியம் என்று தெரிந்தது. நாங்கள் வாசித்து புத்துணர்வுப் பெற்ற கதைகளை சக குழந்தைகளிடம் கொண்டு செல்லும் நோக்கம் புரிந்து எங்களை படைப்பாளர்கள் ஊக்குவிப்பார்கள் என்று நம்புகின்றோம். இனிய, எளிய எழுத்துச் சிற்பிகளின் எழுத்துக்கள் இச்சமூகத்துக்குரியவை, குறிப்பாய் எங்களின் கனவான, இனிய குழந்தைகள் உலகத்திற்கான அடிப்படை முயற்சிகள் ஆற்றுபவர்கள் என்பதை நாங்கள் உணர்ந்ததால் தான் உரிமையுடன் அவர்களை நினைவு கூர்ந்து இக்கதைகளை பிரசுரித்துள்ளோம். அவர்களை சக குழந்தைகளிடம் கொண்டு செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். குழந்தையுள்ளங்களின் அவர்கள் நலன் நாடும் படைப்பாளிகளின் எழுத்துக்களை இலவச பிரதிகளாக மானுட இனத்தின் மதிப்பிலடங்கா பெரு வரங்களான சக குழந்தைகளிடம் சென்று சேர்ப்பது நமது திட்டம்.

மகிழ்ச்சியான குழந்தை, தேசத்தின் பெருமை. இன்றைய குழந்தைகளே நாளைய பெரியவர்கள். நாம் கொணர்ந்திருக்கும் கதைகளில் நற்குணம் கொண்ட பெரியவர்கள் குழந்தைகள் நலன் குறித்துப் பேசுகிறார்கள். குழந்தைகள் குறித்து கவலையடைகிறார்கள். குழந்தைகளின் இனிய உலகம் என்பது பெரியவர் சார்ந்ததுதான். குழந்தைகளுக்குரிய சிறந்தவற்றை சிறந்த படைப்பாளிகள் உணர்த்தியிருக்கின்றனர். அந்த படைப்பாளிகளின் எழுத்துக்களை ஏந்தி உங்களிடம் வருகின்றோம்.

குறைகள் இருப்பின் மன்னியுங்கள்

நமது காலத்திலே இனிய குழந்தைகள் உலகம் அறியப்படும் நாள் ஒன்று வரும் விரைவிலே! வாருங்கள் இணைந்து செயலாற்றிடுவோம்.

இவண்
சீடு புதுயுகம் ஆசிரியர் குழு மற்றும்
சீடு நிர்வாகக் குழு

# கதவு

-கி. ராஜ நாராயணன்

கதவு ஆட்டம் ஆரம்பமாகியது.

பக்கத்து வீட்டுக் குழந்தைகளும் ஆரவாரத்தோடு கலந்து கொண்டார்கள்.

"எல்லாரும் டிக்கட்டு வாங்கிக் கிடுங்க" என்றான் சீனிவாசன். உடனே "எனக்கொரு டிக்கட், உனக்கொரு டிக்கெட்" என்று சத்தம் போட்டார்கள்.

"எந்த ஊருக்கு வேம்? ஏம்...இந்த மாதிரி இடிச்சுத் தள்ளினா என்ன அர்த்தம்.. அப்புறம் நான் விளையாட்டுக்கு வர மாட்டேன்."

"இல்லை, இல்லை,இடிச்சித் தள்ளலெ."

"சரி எந்த ஊருக்கு டிக்கட் வேணும்?"

குழந்தைகள் ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்துக் கொண்டார்கள். ஒருவன் "திருநெல்வேலிக்கு" என்று சொன்னான். "திருநெல்வேலிக்கு, திருநெல்வேலிக்கு" என்று கூப்பாடு போட்டுச் சொன்னார்கள் எல்லோரும்.

லட்சுமி ஒரு துணியால் கதவைத் துடைத்துக்கொண்டிருந்தாள். சீனிவாசன் வெறுங்கையால் டிக்கட் கிழித்துக் கொடுத்து முடிந்ததும், கதவைப் பிடித்து தொத்திக் கொண்டார்கள். சிலர் கதவை முன்னும் பின்னும் ஆட்டினார்கள். தன் முதுகு ஏறி நிற்கும் அக்குழந்தைகளை, அந்தப் பாரமான பெரிய கதவு ஓங்கிப் பூரித்துப் போய் இருக்கும் அக்குழந்தைகளை, வேகமாக ஆடி மகிழ்வித்தது. "திருநெல்வேலி வந்தாச்சி" என்றான் சீனிவாசன். எல்லோரும் இறங்கினார்கள். கதவைத் தள்ளியவர்கள் டிக்கட் வாங்கிக் கொண்டார்கள். ஏறினவர்கள் தள்ளினார்கள். மீண்டும் கதவாட்டம் தொடங்கியது.

அது பழைய காலத்துக் காரை வீடு. பெரிய ஒரே கதவாகப் போட்டிருந்தது அந்த வீட்டுக்கு. அதில் வசித்து வந்தவர்கள் முன்பு வசதி உள்ளவர்களாக வாழ்ந்தவர்கள். இப்பொழுது ரொம்பவும் நொடித்துப் போய்விட்டார்கள். அந்த வீட்டிலுள்ள குழந்தைகளில் மூத்ததிற்கு எட்டு வயது இருக்கும். பெயர் லட்சுமி. அடுத்தவன் சீனிவாசன், ஆறு வயது இருக்கும்.இன்னொன்று கைக் குழந்தை. அம்மா காட்டுக்கு வேலை செய்யப் போய்விடுவாள். அப்பா மணிமுத்தாறில் கூலி வேலை செய்யப் போய் விட்டார். லட்சுமியும் சீனிவாசனும் கைக்குழந்தையை அம்மா காட்டிலிருந்து வரும்வரை வைத்துக் கொண்டு கதவோடு விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

ஒரு நாள் தெருவில் ஒரு தீப்பெட்டிப் படம் ஒன்றை லட்சுமி கண்டெடுத்தாள். படத்தில் ஒரு நாய் இருந்தது. அழுக்காக இருந்ததால் படத்தில் எச்சிலைத் துப்பித் தன் பாவாடையால் துடைத்தாள். இதனால் சில இடங்களில் இருந்த அழுக்கு படம் பூராவும் பரவிற்று. ஆனால் லட்சுமிக்கு மிகவும் திருப்தி. படம் சுத்தமாகிவிட்டது என்று.

படத்தை முகத்துக்கு நேராகப் பிடித்து, தலையைக் கொஞ்சம் சாய்த்துக் கொண்டு பார்த்தாள். அப்புறம் இந்தப் பக்கமாகச் சாய்த்துக்கொண்டு பார்த்தாள். சிரித்துக்கொண்டாள். காண்பிக்கப் பக்கத்தில் யாராவது இருக்கிறார்களா என்று சுற்றும்முற்றும் பார்த்தாள். ஒருவரும் இல்லை. வீட்டை நோக்கி வேகமாக நொண்டி அடித்துக் கொண்டே போனாள், சந்தோஷம் தாங்க முடியாமல். லட்சுமி வீட்டுக்கு வந்தபோது சீனிவாசன் நாயைக் கையில் தூக்கிக்கொண்டு வாசல்படிக்கட்டில் உட்கார்ந்திருந்தான் அவனை கண்டதும் லட்சுமி படத்தை பின்புறமாக மறைத்துக் கொண்டு "டேய் நான் என்ன கொண்டு வந்திருக்கிறேன் சொல்லு பார்ப்போம்" என்றாள். "என்ன கொண்டு வந்திருக்கிறாயோ, எனக்குத் தெரியாது.

"சொல்லேன் பார்ப்போம்."

"அதென்னமோ எனக்குத் தெரியாது"

லட்சுமி தூரத்தில் இருந்தவாறே படத்தை காண்பித்தாள்.

"அக்கா அக்கா, எனக்குத் தரமாட்டியா?" என்று கேட்டுக்கொண்டே இறங்கி வந்தான் சீனிவாசன். 'முடியாது', என்ற பாவனையில் தலையை அசைத்து படத்தை மேலே தூக்கிப்பிடித்தாள். சீனிவாசன் அவளைச் சுற்றிச் சுற்றி வந்தான், "ஊஹூம், முடியாது. மாட்டேன்...நான் எவ்வளவு கஷ்டப்பட்டுத் தேடி எடுத்துக்கொண்டு வந்திருக்கிறேன் தெரியுமா?" என்றாள்.

"ஒரே ஒரு தடவை பார்த்துவிட்டுக் கொடுத்து விடுகிறேன். அக்கா, அக்கா" என்று கெஞ்சினான்.

"பார்த்துவிட்டுக் கொடுத்துவிடவேண்டும்"

"சரி"

"கிழிக்கப்படாது"

"சரி, சரி"

சீனிவாசன் படத்தை வாங்கிப் பார்த்தான். சந்தோஷத்தினால் அவன் முகம் மலர்ந்தது.

"டேய் உள்ளே போய்க் கொஞ்சம் கம்மஞ்சோறு கொண்டா. இந்தப் படத்தை நம்ம கதவில் ஒட்டணும்" என்றாள்.

"ரொம்ப சரி" என்று உள்ளே ஓடினான் சீனிவாசன்

இரண்டு பேருமாகச் சேர்ந்து கதவில் ஒட்டினார்கள். படத்தைப் பார்த்து சந்தோஷத்தினால் கைதட்டிக்கொண்டு குதித்தார்கள். இதைக் கேட்டுப் பக்கத்து வீட்டுக் குழந்தைகளும் ஓடி வந்தன. மீண்டும் கதவு ஆட்டம் தொடங்கியது.

★ ★ ★

அந்தக் கதவைக் கொஞ்சம் கவனமாகப் பார்க்கிறவர்களுக்கு, இந்தக் குழந்தைகள் ஒட்டிய படத்துக்குச் சற்று மேலே இதே மாதிரி வேறு ஒரு படம் ஒட்டி இருப்பது தெரிய வரும். அந்தப் படம் ஒட்டி எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டதால், அழுக்கும் புகையும் பட்டு மங்கிப் போய் இருந்தது. ஒருவேளை அது லட்சுமியின் தகப்பனார் குழந்தையாக இருக்கும்போது ஒட்டியதாக இருக்கலாம்.

குழந்தைகள் இப்படி விளையாடிக்கொண்டிருக்கும்போது கிராமத்துத் தலையாரி அங்கே வந்தான்.

"லட்சுமி உங்க ஐயா எங்கே?"

"ஊருக்குப் போயிருக்காக"

"உங்க அம்மா?"

"காட்டுக்குப் போயிருக்காக"

"வந்தா, தீர்வையைக் கொண்டுவந்து போடச்சொல்லு, தலையாரித் தேவரு வந்து தேடீட்டுப் போனாருன்னு சொல்லு" "சரி" என்ற பாவனையில் லட்சுமி தலையை ஆட்டினாள்.

மறுநாள் தலையாரி லட்சுமியின் அம்மா இருக்கும்போதே வந்து தீர்வைப் பாக்கியைக் கேட்டான்.

"ஐயா, அவரு ஊரிலே இல்லை. மணிமுத்தாறு போயி அஞ்சி மாசமாச்சி. ஒரு தகவலையும் காணோம். மூணுவருசமா மழை தண்ணி இல்லையே. நாங்க என்னத்தை வச்சு உங்களுக்குத் தீர்வைப் பாக்கியைக் கொடுப்போம்?

# ராஜா வந்திருக்கிறார்

கு. அழகிரிசாமி

எனக்கு சில்க் சட்டை இருக்கே! உனக்கு இருக்கா?'' என்று கெட்டிக்காரத்தனமாகக் கேட்டான் ராமசாமி.

செல்லையா பதில் சொல்லத் தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தான். தம்பையா ஆகாயத்தைப் பார்த்து யோசனை செய்தான். மங்கம்மாள் மூக்கின் மேல் ஆள்காட்டி விரலை வைத்துக்கொண்டும், கண்ணை இலேசாக மூடிக்கொண்டும் யோசனை செய்தாள். அந்த மூவரும் ராமசாமியின் கேள்விக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள் என்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள் மற்றப் பிள்ளைகள்.

அன்று பள்ளிக்கூடத்திலிருக்கும்போது ராமசாமிக்கும் செல்லையாவுக்கும் இடையே ஒரு போட்டி நடந்தது. ராமசாமி தன் ஐந்தாம் வகுப்புக்குரிய இந்திய தேச சரித்திரப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டான். செல்லையா அந்த வருஷம் இந்திய தேச சரித்திரம் வாங்க வில்லை. அதனால் தன்னிடமுள்ள ஒரு சிவிக்ஸ் புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டான். இருவரும் 'படப் போட்டி' யை ஆரம்பித்து விட்டார்கள்.

ராமசாமி தன் புத்தகத்தை முதலிலிருந்து ஒவ்வொரு தாளாகத் திருப்புவான். படம் இருக்கும் பக்கத்தைச் செல்லையாவுக்கு காட்டி, ''இதோ, இந்தப் படத்துக்குப் பதில் படம் காட்டு'' என்பான். செல்லையா தன் புத்தகத்தை திறந்து அதில் உள்ள ஒரு படத்தைக் காட்டுவான். பிறகு, இருவருமே புத்தகத்தில் பக்கம்பக்கமாகப் புரட்டுவார்கள். யாராவது ஒருவருடைய புத்தகத்தில் அடுத்தபடியாகப் படம் வரும். உடனே அந்தப் படத்துக்கு அடுத்தவன் பதில் படம் காட்டவேண்டும். இவ்விதமாகப் பதிலுக்குப் பதில் படங்காட்டிய வண்ணம் புத்தகம் முழுவதையுமே புரட்டுவார்கள். எவன் புத்தகத்தில் அதிகப் படங்கள் இருக்கின்றனவோ, அவன் ஜெயித்துவிடுவான். மற்றவன் தோற்றுப் போவான். உடனே ஜெயித்தவன், ''எனக்குப் படங்காட்ட முடியல்லே! தோத்துப் போயிட்டாயா!'' என்று பரிகாசம் செய்வான். இந்த மாதிரியான படப் போட்டி தான் அன்றும் நடந்து கொண்டிருந்தது.

போட்டி பாதியில் நிற்கிறது. அந்தச் சமயத்தில் ஐந்தாம் வகுப்புக்குக் கணக்கு வாத்தியார் வந்துவிட்டார். அந்தக் கணக்கு வாத்தியார் மிகவும் கெடுபிடியானவர். அவர் வகுப்பில் பையன்கள், வெளியே தெரியாமல் விளையாடிக் கொண்டிருக்க முடியாது. தவிரவும் கணக்குப் போடும் போது பென்சிலும் கையுமாக இருக்க வேண்டும். இதில் படப் போட்டி நடத்துவது எப்படி?

வாத்தியார் வந்ததும் இருவருடைய போட்டியும் நின்றுவிட்டது.

கடைசியில் சாயங்காலம் பள்ளிக்கூடம் விட்டு வெளியே வந்த பிறகு, ஒரு வேப்ப மரத்தின் அடியில் நின்று இருவரும் அந்தப் போட்டியை நடத்தினார்கள்

சரித்திரப் புத்தகத்தில் பாதி தான் தாண்டியிருக்கும், ஆனால், செல்லையாவின் சிவிக்ஸ் புத்தகம் முடிந்துவிட்டது. செல்லையா தோற்றுப் போய்விட்டான். பக்கத்தில் நின்று பிள்ளைகள் அவனைக் கேலி செய்தார்கள். தங்கள் அண்ணன் தோற்றுப் போனதைக் கண்டு தம்பையாவுக்கும் மங்கம்மாளுக்கும் சொல்லமுடியாத வருத்தம்.

அந்த இடத்தைவிட்டு எல்லோரும் வீட்டுக்குப் போகப் புறப்பட்டார்கள். நடந்து செல்லும் போதே, படப்போட்டி வேறொரு அவதாரம் எடுக்கத் தொடங்கியது. ''எங்கள் வீட்டில் அது இருக்கே, உங்கள் வீட்டில் இருக்கா?'' என்று இருவரும் ஒருவரிடம் ஒருவர் கேட்க ஆரம்பித்தனர். இந்தப் புதுப்போட்டியின் கடைசிப் பகுதியில் தான் ராமசாமி, ''எனக்கு சில்க் சட்டை இருக்கே, உனக்கு இருக்கா?'' என்று கேட்டான்.

வேப்பமரத்தை விட்டு அரை பர்லாங் தூரத்திலுள்ள பார்வதியம்மன் கோவில் பக்கமாக வந்தாயி விட்டது. இன்னும் செல்லையாவோ, தம்பையாவோ ராமசாமிக்குப் பதில் சொல்லவில்லை. ஆனால் மங்கம்மாள் திடீரென்று எல்லோரையும் இடித்துத் தள்ளிக் கொண்டு ராமசாமியின் முன்னால் வந்து நின்றாள். குழந்தைகள் எல்லோரும் மங்கம்மாளையே கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

அவள், ரேகை சாஸ்திரியிடம் காட்டுவது போலக் கையை வைத்துக் கொண்டு ''ஐயே ! சில்க் சட்டை எதுக்காம்? ஹூம், லோசச் சருகு மாதிரி இருக்கும். சீக்கிரம் கிழிஞ்சு போகும். (செல்லையாவின் சட்டையைக் காட்டி) இது தான் கனமாயிருக்கு. ரொம்ப நாளைக்குக் கிழியாம இருக்கும், நல்லாப் பாரு !'' என்று மிகமிகப் பரிகாசமாகச் சொல்லிவிட்டுச் செல்லையாவின் பக்கத்தில் வந்து நின்றாள்.

ராமசாமி பிரமித்துவிட்டான். முதல் வகுப்பில் படிக்கும் மங்கம்மாள், ஐந்தாம் வகுப்பில் படிக்கும் தன்னை இப்படித் தோற்கடித்து விட்டாளே என்று மிகவும் சங்கடப்பட்டான். பிள்ளைகள் ராமசாமியைப் பார்த்துத் ''தோத்துப் போயிட்டியா?'' என்று ஏளனம் பண்ணினார்கள்.

மங்கம்மாள் செல்லையாவின் சட்டையைப் பிடித்துக் கொண்டு, அவனை ஒட்டி உரசி நின்று கொண்டாள். நடக்கும் போதும் அப்படியே நடந்துவந்தாள். அவள் மனதிற்குள்ளே ஒரு பெருமிதம்!

ராமசாமி அடுத்த கேள்வியைப் போட்டான். ''எங்கள் வீட்டிலே ஆறு பசு இருக்கு, உங்கள் வீட்டிலே இருக்கா?''

இதற்குச் செல்லையா பதில் சொல்லவில்லை, மங்கம்மாளும் பதில் சொல்லவில்லை. தம்பையா, ''இவுஹ தான் பணக்காரராம். அது தான் ரொம்பப் பெருமை..ஹூம்..பெருமை பீத்தக் கலயம்.... என்று சொல்லி, நிலைமையைச் சமாளிக்க முயன்றான். அது முடியவில்லை. அந்த சமயத்தில் செல்லையா, அது சரி, எங்க வீட்டிலே ஒன்பது கோழி இருக்கு, உங்க வீட்டிலே இருக்கா?'' என்று ஒரு போடு போட்டான்.

ராமசாமியும் தயங்கவில்லை, ''நாங்கள் உங்களைப் போலக் கோழி அடிச்சுச் சாப்பிட மாட்டோம். நாங்க எதுக்கு கோழி வளக்கணும் ? அது தான் எங்க வீட்டிலே கோழி இல்லை'' என்றான்.

''அதெல்லாம் சும்மா. ஒன்பது கோழி இருக்கா, இல்லையா?'' என்று ஒரே பிடிவாதமாகக் கேட்டான் செல்லையா.

ராமசாமிக்குப் பதில் சொல்ல முடியவில்லை என்று கூட வருத்தமில்லை. மற்றப் பிள்ளைகள் எல்லோரும் ஒன்று கூடிக்கொண்டு, அவனைப் பரிகாசம் செய்ததைத்தான் அவனால் தாங்க முடியவில்லை. அழுகை வரும்போல இருந்தது. அதனால் எல்லோரையும் விட வேகமாக நடக்க ஆரம்பித்தான். மற்றப் பிள்ளைகளும் அதே வேகத்தில் நடந்தார்கள். சிறு குழந்தையாக இருக்கும் மங்கம்மாளால் அதே வேகத்தில் நடக்க முடியாது. அதனால் ஓடினாள்.

சிற்சில குழந்தைகள் தங்கள் தங்கள் வீட்டுக்கு நேராக வந்த மாத்திரத்தில் கூட்டத்திலிருந்து விலகி வீட்டுக்குப் போய்விட்டார்கள். கூட்டம் குறையக் குறைய ராமசாமியின் அவமானமும் குறைந்து கொண்டு வந்தது.

மேலத் தெருவுக்குள் நுழையும் போது, ராமசாமியும் அவனுடைய எதிர்க்கட்சியைச் சேர்ந்த மூவரும்தான் மிஞ்சினார்கள். ஏனென்றால், அந்தக் குக்கிராமத்துப் பள்ளிப் பிள்ளைகளில், இவர்களுடைய வீடுகள் தான் மேலத் தெருவில் இருந்தன.

ராமசாமியின் வீடு முதலாவதாக வந்தது. 'தப்பினோம் பிழைத்தோம்' என்று வீட்டுக்குள்ளே பாய்ந்தான் ராமசாமி. உடனே வீதியில் நின்ற அந்த மூவரும், "தோத்தோ நாயே!" என்று திரும்பித் திரும்பிச் சொல்லிக் கொண்டும், கையால் சொடக்குப் போட்டுக் கொண்டும் நின்றார்கள்.

அப்போது வீட்டுக்குள்ளிருந்து ஒரு மீசைக்காரன், தலைப்பாக்கட்டுடன் வெளியே வந்தான். அவன், ராமசாமியின் வீட்டு வேலைக்காரர்களில் ஒருவன். குழந்தைகள் மூவரும் கிழிந்து போன அழுக்குத் துணியுடனும், பரட்டைத் தலையுடனும் தெருவில் நின்று, ஒரே குரலில் "தோத்தோ நாயே!" என்று சொல்லுவதைப் பாத்து, "சீ, கழுதைகளா! போறீகளா என்னுமும் வேணுமா?" என்று சீறினான். மூன்று பேரும் நாலுகால் பாய்ச்சலில் ஓடிவிட்டார்கள். அவர்கள் போன பிறகு, "பிச்சைக்காரக் கழுதைகள்!" தோத்தோ!நாயே! .....கழுதைகள்!" என்று தனக்குத்தானே எகத்தாளமாகச் சொல்லிக் கொண்டு, தன் வேலையைக் கவனிக்கப் போனான்.

செல்லையா, தம்பையா, மங்கம்மாள் மூன்று பேரும் நெஞ்சோடு புத்தகக் கட்டுகளை அணைத்துக் கொண்டு வீடு சேரும் போது, அவர்களுடைய தாயார் தாயம்மாள், வாசல் பெருக்கித் தண்ணீர் தெளித்துக்கொண்டிருந்தாள்.

மங்கம்மாள் ஒரே ஓட்டமாக ஓடி, "அம்மா....!" என்று தாயம்மாளைப் பின்புறமாகக் கட்டிக் கொண்டாள். குனிந்து வாசல் தெளித்துக் கொண்டிருந்த தாய், செல்லமாக "ஐயோ! இதென்னடா இது!" என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு அழுவது போலச் சிரித்தாள் . அம்மா அழுவதைக் கண்டு மங்கம்மாளுக்கு அடக்க முடியாதபடி சிரிப்பு வந்தது!

"ஐயா வந்துவிட்டாரா அம்மா?" என்று தம்பையா கேட்டான் அப்பாவைத்தான் ஐயா என்று அந்த கிராமத்துப் பிள்ளைகள் குறிப்பிடுவார்கள்.

"வரலையே" என்று பொய் சொல்லிவிட்டு, பொய்ச் சிரிப்பும் சிரித்தாள் தாயம்மாள்.

"நிஜம்மா?" என்று கேட்டான் தம்பையா.

"நிஜம்ம்ம்ம்ம்மாத்தான்!" என்று சொன்னாள் தாயம்மாள். அப்புறம் சிரித்தாள்.

மங்கம்மாள் விறுவிறு என்று அம்மாவுக்கு முன்னால் வந்து நின்றாள். வலது கையிலிருந்த புத்தகக்கட்டை இடது கையில் இடுக்கிக் கொண்டாள். வலது கையில் ஆள்காட்டி விரலை மூக்கின் மேலும் புருவங்களுக்கு மத்தியிலும் வைத்துக்கொண்டு, முகத்தையும் ஒரு பக்கமாகத் திருப்பிக் கொண்டு, "அம்மா!...எனக்குத் தெரிஞ்சு போச்சு!.. நீ பொய் சொல்றே!......ஐயா வந்துவிட்டாரு!" என்று நீட்டி நீட்டிச் சொன்னாள்.

தாயம்மாளுக்கு ஆனந்தம் தாங்கமுடியவில்லை. பல்லை இறுகக்கடித்துக் கொண்டு, "போக்கிரிப் பொண்ணு!" என்று மங்கம்மாளின் கன்னத்தைக் கிள்ளினாள்.

செல்லையா மிகவும் ஆழமான குரலில், ஐயா "வரல்லையாம்மா?" என்று கேட்டான். அவன் குரலில் சோகம் ததும்பி ஏமாற்றம் இழைபோடியிருந்தது.

தாயம்மாள் வீட்டுக்குள் நுழைந்தாள். மூலையிலிருந்த ஒரு ஜாதிக்காய்ப் பெட்டியைச் சுட்டிக்காட்டி, "அந்தப் பெட்டியைத் திறந்து பாரு, மங்கம்மா" என்றாள்.

மூவருமே ஓடிப்போய்ப் பெட்டியைத் திறந்தனர்.

பெட்டிக்குள்ளே இருந்த ஜவுளிப் பொட்டணத்தை வெளியே எடுத்து அவிழ்த்துப் பார்த்தனர். மறுநாள் விடிந்த பிறகு ஆரம்பமாகும் தீபாவளி, குழந்தைகளுக்கு அப்பொழுதே ஆரம்பித்துவிட்டது. ஒரே குதூகலம்! ஒவ்வொரு துணியாக எடுத்து இதுயாருக்கு, இது யாருக்கு!" என்று இனம் பிரித்துப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

பொட்டணத்தில் இரண்டு மல் பனியன்களும், இரண்டு கால் சட்டைகளும், ஒரு பாவாடையும், ஒரு பச்சை நிறமான சட்டையும், ஒரு நான்கு முழ ஈரிழைச் சிட்டைத் துண்டும் இருந்தன.

துண்டைத் தவிர மற்ற உருப்படிகள் இன்னின்னாருக்குத்தான் என்று குழந்தைகளே பங்கு போட்டுவிட்டார்கள். துண்டு யாரைச் சேருவது என்று தெரியவில்லை. உடனே செல்லையா கேட்டான், "துண்டு யாருக்கம்மா?"

"ஐயாவுக்கு" என்றாள் தாயம்மாள்.

"அப்பமன்னா உனக்கு?" என்று மங்கம்மாள் கேட்டாள்.

தாயம்மாள் சிரித்துக்கொண்டு, "எனக்குத்தான் ரெண்டு சீலை இருக்கே, இன்னம் எதுக்கு? எல்லாருக்கும் புதுத்துணி எடுக்க நாம் என்ன பணக்காரரா?"

"ஐயாவுக்கு மட்டும் பிறகு புதுத்துண்டு எதுக்காம்?" என்றாள் மங்கம்மாள்.

"வாயாடி! வாயாடி! ......ஐயாவுக்கு ஒரு துண்டு கூட இல்லை. துண்டு இல்லாமலே எத்தனை நாளைக்குப் பழைய வேட்டியை உடம்பிலே போட்டுட்டு அலையறது?" என்று சொல்லிவிட்டு மங்கம்மாளைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டாள் தாய்.

அந்தி மயங்கி இருட்டத் தொடங்கியது. விளக்கேற்றுவதற்காகத் தாயம்மாள் எழுந்தாள். விளக்கேற்றி விட்டுக் குழந்தைகளை வெந்நீரில் குளிப்பாட்டி விட்டாள். ஐப்பசி மாதமானதால் அநேகமாக நாள் தவறாமல் மழை பெய்திருந்தது. பூமி குளிர்ந்து ஜில்லிட்டு விட்டது. காற்றும் ஈரக் காற்று. இதனால் வெந்நீரில் குளித்துவிட்டு வந்த குழந்தைகளை ஈரவாடை அதிக வேகத்துடன் தாக்கியது. எல்லோரும் 'குடுகுடு' என்று முற்றத்திலிருந்து வீட்டுக்குள்ளே ஓடிவந்துவிட்டார்கள்.

குழந்தைகள் சாப்பிடும் போது தான், "அவர்களுடைய அப்பா பக்கத்துக் கிராமத்துக்கு ஒரு தூரபந்துவின் திடீர் மரணத்தை முன்னிட்டுச் சென்றிருப்பதாகவும், மறுநாள் மத்தியானத்துக்குள் வந்து விடுவார் என்றும், வரும்வரை காத்திருக்காமல் குழந்தைகளோடு தீபாவளி கொண்டாடிவிட வேண்டும் என்று அவர் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார் என்றும் தாய் தெரிவித்தாள்.

சாப்பாடு முடிந்தது. ராப் பாடம் படிக்க மாடக் குழியில் இருந்த அகல் விளக்கைத் தூண்டிவிட்டுக் கொண்டு அதன் முன்னால் மூன்று பேரும் உட்கார்ந்தார்கள்.

தாயம்மாள் சாப்பிட்டுவிட்டு, எச்சில் கும்பாக்களைக் கழுவ முற்றத்துக்கு வந்தாள். முற்றத்தில் மூலையில் கொஞ்ச தூரத்துக்கு அப்பால் ஒரு முருங்கைமரம் உண்டு. அதன் நிழலில் கருப்பாக ஓர் உருவம் தெரிந்தது. பக்கத்து வீட்டு நாயாக இருக்கும் என்று நினைத்து உள்ளே வந்துவிட்டாள்.

மண் தரையில் முந்தானையை விரித்து ஒருக்களித்துப் படுத்துக் கொண்டு குழந்தைகள் உரக்கச் சத்தம் போட்டுப் பாடம் படிப்பதைக் கேட்டுக் கொண்டிருந்தாள் தாய். சிறிது நேரத்தில் "தரை என்னமா குளிருது ராத்திரி எப்படிப் படுத்துக்கிறது?" என்று தனக்கு தானே சொல்லிக் கொண்டே எழுந்து உட்கார்ந்தாள். அவளுடைய உடம்பு அவளுடைய ஸ்பரிசத்துக்கே ஜில்லென்றிருந்தது.

“இல்லை”

“இல்லையா?” என்று அழுத்திக்கேட்டாள் தாயம்மாள்.

“உம்...செத்துப் போயிட்டாக.”

“எப்போ, தம்பி?”

“போன வருசம் அம்மா செத்துப் போயிட்டா. ஐயா, நான் சின்னப்பிள்ளையாருக்கும் போதே செத்துப் போயிட்டாராம்”.

“உனக்கு அண்ணன் தம்பி ஒருத்தரும் இல்லையா?”

“இல்லை”

உடனே தம்பையா கேட்டான்.

“தங்கச்சியும் இல்லையா?”

“இல்லை”

“பாவம்” என்று சொல்லிவிட்டுத் தம்பையா நிறுத்திக் கொண்டான்.

“இங்கே எதுக்கு வந்தே?” என்று தாயம்மாள் கேட்டாள்.

“கழுகுமலைக்குப் போறேன்”

“அங்கே ஆரு இருக்கா”

“அத்தை” என்று பதில் சொன்னான் சிறுவன். அவன் விளாத்திகுளத்திலிருந்து கால்நடையாகவே நடந்து அந்தக் கிராமம் வரையிலும் வந்திருக்கிறான். இந்த இருபதுமைல் பிரயாணத்துக்கு நான்கு நாட்களாகிவிட்டன. நான்காவது தினத்தில் தான் இந்தக் கிராமத்தில் வந்து தங்க நேர்ந்தது. அதுவும் பொழுது இருட்டிவிட்டதனாலும் பசியாக இருந்ததனாலும் தான். மறுநாள் விடிந்த பிறகு, எட்டுமைல் தூரம் நடந்து கழுகுமலைக்குப் போனால் அவனுடைய அத்தை தன் வீட்டில் அவனை வைத்துக் கொள்ளுவாளா விரட்டிவிடுவாளா என்பதும் அவனுக்கு தெரியாது. அத்தையையும் அவன் பார்த்ததில்லை. எப்படியோ ஒரு வழியில் அவனுக்கு அவள் அத்தை என்றும் 'அங்கே போ' என்றும் யாரோ சொல்ல, அதை நம்பிக் கொண்டு அந்தச் சிறுவன் விளாத்திகுளத்திலிருந்து கால்நடையாக நடந்து வந்திருக்கிறான்.

மேற்கண்ட விவரங்களை எல்லாம் சிறுவனுடைய வாய்மொழி மூலமாகவே தாயம்மாள் அறிந்து கொண்டாள்.

“உன் பேரு என்ன?” என்று கடைசியாகக் கேட்டாள் தாயம்மாள்.

“ராஜா” என்றான் சிறுவன்.

அப்புறம் அவனுக்குச் சாப்பாடு போட்டாள். அவன் சாப்பிட்ட பிறகு, குழந்தைகளுக்குப் படுக்கையை எடுத்து விரித்தாள். மண்தரை ஈரச் சதசதப்புடன் இருப்பதால், வெறும் ஓலைப்பாயை விரித்துப் படுப்பதற்கு இயலாமல் இருந்தது. அதனால், கிழிந்து போய்க் கிடந்த மூன்று கோணிப்பைகளை எடுத்து உதறி விரித்து அதன் மேல் வீட்டிலிருந்து இரண்டு ஓலைப் பாய்களையும் பக்கம் பக்கமாக விரித்தாள். ராஜா தெற்குக் கோடியில் படுத்துக் கொண்டான். அவனுக்குப் பக்கமாகச் செல்லையாவும், அப்புறம் தம்பையாவும் படுத்துக் கொண்டார்கள். தம்பையாவின் உடம்பு இரண்டு பாய்களிலுமே பாதி பாதி படிந்திருந்தது. வடகோடியில் தாயம்மாளும் மங்கம்மாளும் படுத்துக்கொண்டார்கள்.

எங்கோ தூரத்தில், ஒரு வீட்டில் சீனிவெடி வெடிக்கும் சப்தம் கேட்டது. தீபாவளி மறு நாளானாலும் யாரோ ஒரு துறுதுறுத்த பையன் அப்பொழுதே வேட்டுப் போட ஆரம்பித்துவிட்டான்.

வேட்டுச் சப்தம் கேட்டதும், “எனக்கு மத்தாப்பு..... ” என்றாள் மங்கம்மாள்.

“எனக்கும்......” என்றான் தம்பையா.

“நம்மகிட்டே அதுக்கெல்லாம் பணம் ஏது, மங்கம்மா? ராமசாமி பணக்காரன். அவனுக்குச் சரி எவ்வளவு வேண்டுன்னாலும் போடுவான்.....”

“ஊஹூம். எனக்கு மத்தாப்பு......” என்று முரண்டு பண்ணினாள் மங்கம்மாள்.

“வம்பு பண்ணாதே, சொன்னாக்கேளு. மத்தாப்புக் கொளுத்தினா வயிறு நிறையுதா? காலையிலே உனக்கு தோசை சுட்டுத்தாரேன். நிறையச் சாப்பிடு. மத்தாப்பு எதுக்கு?

மங்கம்மாள் தன் முரண்டை நிறுத்தவில்லை. அழுவதுபோலச் சிணுங்க ஆரம்பித்தாள்.

செல்லையா தூங்கிவிட்டான்.

அப்போது, தெருவில் ஆட்கள் நடந்து செல்லும் சந்தடி கேட்டது.

'சமீன் வந்து இறங்குறதுன்னா இலேசா?" என்று தாயம்மாள் தனக்குள்ளாகவே நினைத்துக் கொண்டு, “மங்கம்மா! நீ நல்ல பிள்ளை! பிடிவாதம் பண்ணாதே. அடுத்த வருசம் நிறைய மத்தாப்பு வாங்குவோம். இந்த வருசம் நாம் எவ்வளவு சங்கடப்பட்டோம்'னு உனக்குத் தெரியாதா? என்றாள். அப்புறம் அவளால் சரியாகப் பேச முடியவில்லை. வாய் குளறியது. மங்கம்மாளைப் பார்த்துத் தான் அவள் பேசினாள். ஆனால் அவள் உண்மையில் தன்னுடைய தாயாரிடத்திலோ, தன்னை உயிருக்கு உயிராகப் பேணி வளர்த்த ஒரு கிழவியிடத்திலோ, தான் வருஷக் கணக்கில் அனுபவித்த துயரங்களைக் கண்ணீரும் கம்பலையுமாகச் சொல்லுவது போலவே பேசினாள். ஒரு நீண்ட கம்பலையுமாகச் சொல்லுவது போலவே பேசினாள். ஒரு நீண்ட பெருமூச்சுடன், “மங்கம்மா!... நீ கூட ஒரு நாள் சாப்பாடு இல்லாமே பள்ளிக்கூடம் போனியே, கண்ணு. உன் வயித்துக்குக் கூட அன்னிக்கு ஒரு வாய் கூழு கெடைக்கல்லையே! (அவளுக்குக் கண்ணீர் வந்து விட்டது) சாப்பாட்டுக்கே கஷ்டப்படும் போது நீ மத்தாப்புக் கேக்கலாமா, கண்ணு? பேசாமப் படுத்துத் தூங்கு” என்று தேற்றினாள். மங்கம்மாளைப் பரிவோடு தடவிக் கொடுத்தாள்.

“ஒரு மத்தாப்பாவது வாங்கித் தா என்றாள் மங்கம்மாள்.

அழுகையுடனும், துயரச் சிரிப்புடனும் தாயம்மாள் சொன்னாள். “நீதானே இப்படிப் பிடிவாதம் பண்றே? அந்தப் பையனைப் பாரு, அவன் மத்தாப்புக் கேக்கறானா?....சோறு கிடைக்காமே எச்சிலையைக் கூட எடுத்துத் தின்றான்....அவன் சோறு வேணும்னு கூட அழல்லே. நீ மத்தாப்பு வேணும்னு அழறே மங்கம்மா!...”

மங்கம்மாளுக்கு அவன் மேல் கோபம் வந்து விட்டது. அவனைப் புகழ்ந்து தன் கோரிக்கையைத் தாயார் புறக்கணித்துக் கொண்டு வருவது அவளுக்குப் பிடிக்கவில்லை. உடனே 'அவனுக்கு ஒரே சிரங்கு!' என்று திட்டுவது போலக் கடுமையாகச் சொன்னாள்.

“அவனுக்குத் தாய் தகப்பன் இருந்தா அப்படி இருப்பானா? தாயில்லாப் பிள்ளைன்னா யாரு கவனிப்பா? அவனோட அம்மா, முன்னாலே அவனுக்குத் தீபாவளிக்குப் புதுவேட்டி புதுச்சட்டை எல்லாம் வாங்கிக் குடுத்திருப்பா! மத்தாப்பும் வாங்கிக் குடுத்திருப்பா!. இப்போ, அவன் அதை எல்லாம் நினைச்சுக் கேக்கிறானா பாரு.”

“இப்போ அவன் தூங்கிட்டான். காலையிலே கேப்பான்” என்று சொல்லிவிட்டு மங்கம்மாள் சிணுங்கினாள்.

"இல்லை"

"இல்லையா?" என்று அழுத்திக்கேட்டாள் தாயம்மாள்.

"உம்...செத்துப் போயிட்டாக."

"எப்போ, தம்பி?"

"போன வருசம் அம்மா செத்துப் போயிட்டா. ஐயா, நான் சின்னப்பிள்ளையாருக்கும் போதே செத்துப் போயிட்டாராம்".

"உனக்கு அண்ணன் தம்பி ஒருத்தரும் இல்லையா?"

"இல்லை"

உடனே தம்பையா கேட்டான்.

"தங்கச்சியும் இல்லையா?"

"இல்லை"

"பாவம்" என்று சொல்லிவிட்டுத் தம்பையா நிறுத்திக் கொண்டான்.

"இங்கே எதுக்கு வந்தே?" என்று தாயம்மாள் கேட்டாள்.

"கழுகுமலைக்குப் போறேன்"

"அங்கே ஆரு இருக்கா"

"அத்தை" என்று பதில் சொன்னான் சிறுவன். அவன் விளாத்திகுளத்திலிருந்து கால்நடையாகவே நடந்து அந்தக் கிராமம் வரையிலும் வந்திருக்கிறான். இந்த இருபதுமைல் பிரயாணத்துக்கு நான்கு நாட்களாகிவிட்டன. நான்காவது தினத்தில் தான் இந்தக் கிராமத்தில் வந்து தங்க நேர்ந்தது. அதுவும் பொழுது இருட்டிவிட்டதனாலும் பசியாக இருந்ததனாலும் தான். மறுநாள் விடிந்த பிறகு, எட்டுமைல் தூரம் நடந்து கழுகுமலைக்குப் போனால் அவனுடைய அத்தை தன் வீட்டில் அவனை வைத்துக் கொள்ளுவாளா விரட்டிவிடுவாளா என்பதும் அவனுக்கு தெரியாது. அத்தையையும் அவன் பார்த்ததில்லை. எப்படியோ ஒரு வழியில் அவனுக்கு அவள் அத்தை என்றும் 'அங்கே போ' என்றும் யாரோ சொல்ல, அதை நம்பிக் கொண்டு அந்தச் சிறுவன் விளாத்திகுளத்திலிருந்து கால்நடையாக நடந்து வந்திருக்கிறான்.

மேற்கண்ட விவரங்களை எல்லாம் சிறுவனுடைய வாய்மொழி மூலமாகவே தாயம்மாள் அறிந்து கொண்டாள்.

"உன் பேரு என்ன?" என்று கடைசியாகக் கேட்டாள் தாயம்மாள்.

"ராஜா" என்றான் சிறுவன்.

அப்புறம் அவனுக்குச் சாப்பாடு போட்டாள். அவன் சாப்பிட்ட பிறகு, குழந்தைகளுக்குப் படுக்கையை எடுத்து விரித்தாள். மண்தரை ஈரச் சதசதப்புடன் இருப்பதால், வெறும் ஓலைப்பாயை விரித்துப் படுப்பதற்கு இயலாமல் இருந்தது. அதனால், கிழிந்து போய்க் கிடந்த மூன்று கோணிப்பைகளை எடுத்து உதறி விரித்து அதன் மேல் வீட்டிலிருந்து இரண்டு ஓலைப் பாய்களையும் பக்கம் பக்கமாக விரித்தாள். ராஜா தெற்குக் கோடியில் படுத்துக் கொண்டான். அவனுக்குப் பக்கமாகச் செல்லையாவும், அப்புறம் தம்பையாவும் படுத்துக் கொண்டார்கள். தம்பையாவின் உடம்பு இரண்டு பாய்களிலுமே பாதி பாதி படிந்திருந்தது. வடகோடியில் தாயம்மாளும் மாங்கம்மாளும் படுத்துக்கொண்டார்கள்.

எங்கோ தூரத்தில், ஒரு வீட்டில் சீனிவெடி வெடிக்கும் சப்தம் கேட்டது. தீபாவளி மறு நாளானாலும் யாரோ ஒரு துறுதுறுத்த பையன் அப்பொழுதே வேட்டுப் போட ஆரம்பித்துவிட்டான்.

வேட்டுச் சப்தம் கேட்டதும், "எனக்கு மத்தாப்பு....." என்றாள் மாங்கம்மாள்.

"எனக்கும்......" என்றான் தம்பையா.

"நம்மகிட்டே அதுக்கெல்லாம் பணம் ஏது, மாங்கம்மா? ராமசாமி பணக்காரன். அவனுக்குச் சரி எவ்வளவு வேண்டுன்னாலும் போடுவான்....."

"ஊஹூம். எனக்கு மத்தாப்பு......" என்று முரண்டு பண்ணினாள் மாங்கம்மாள்.

"வம்பு பண்ணாதே. சொன்னாக்கேளு. மத்தாப்புக் கொளுத்தினா வயிறு நிறையுதா? காலையிலே உனக்கு தோசை சுட்டுத்தாரேன். நிறையச் சாப்பிடு. மத்தாப்பு எதுக்கு?

மாங்கம்மாள் தன் முரண்டை நிறுத்தவில்லை. அழுவதுபோலச் சிணுங்க ஆரம்பித்தாள்.

செல்லையா தூங்கிவிட்டான்.

அப்போது, தெருவில் ஆட்கள் நடந்து செல்லும் சந்தடி கேட்டது.

'சமீன் வந்து இறங்குறதுன்னா இலேசா?' என்று தாயம்மாள் தனக்குள்ளாகவே நினைத்துக் கொண்டு, "மாங்கம்மா! நீ நல்ல பிள்ளை! பிடிவாதம் பண்ணாதே. அடுத்த வருசம் நிறைய மத்தாப்பு வாங்குவோம். இந்த வருசம் நாம் எவ்வளவு சங்கடப்பட்டோம்'னு உனக்குத் தெரியாதா? என்றாள். அப்புறம் அவளால் சரியாகப் பேச முடியவில்லை. வாய் குளறியது. மாங்கம்மாளைப் பார்த்துத் தான் அவள் பேசினாள். ஆனால் அவள் உண்மையில் தன்னுடைய தாயாரிடத்திலோ, தன்னை உயிருக்கு உயிராகப் பேணி வளர்த்த ஒரு கிழவியிடத்திலோ, தான் வருஷக் கணக்கில் அநுபவித்த துயரங்களைக் கண்ணீரும் கம்பலையுமாகச் சொல்லுவது போலவே பேசினாள். ஒரு நீண்ட கம்பலையுமாகச் சொல்லுவது போலவே பேசினாள். ஒரு நீண்ட பெருமூச்சுடன், "மாங்கம்மா!... நீ கூட ஒரு நாள் சாப்பாடு இல்லாமே பள்ளிக்கூடம் போனியே, கண்ணு. உன் வயித்துக்குக் கூட அன்னிக்கு ஒரு வாய் கூழு கெடைக்கல்லையே! (அவளுக்குக் கண்ணீர் வந்து விட்டது) சாப்பாட்டுக்கே கஷ்டப்படும் போது நீ மத்தாப்புக் கேக்கலாமா, கண்ணு? பேசாமப் படுத்துத் தூங்கு" என்று தேற்றினாள். மாங்கம்மாளைப் பரிவோடு தடவிக் கொடுத்தாள்.

"ஒரு மத்தாப்பாவது வாங்கித் தா என்றாள் மாங்கம்மாள்.

அழுகையுடனும், துயரச் சிரிப்புடனும் தாயம்மாள் சொன்னாள். "நீதானே இப்படிப் பிடிவாதம் பண்றே? அந்தப் பையனைப் பாரு. அவன் மத்தாப்புக் கேக்கறானா?....சோறு கிடைக்காமே எச்சிலையைக் கூட எடுத்துத் தின்றான்....அவன் சோறு வேணும்னு கூட அழல்லே. நீ மத்தாப்பு வேணும்னு அழறே மாங்கம்மா!..."

மாங்கம்மாளுக்கு அவன் மேல் கோபம் வந்து விட்டது. அவனைப் புகழ்ந்து தன் கோரிக்கையைத் தாயார் புறக்கணித்துக் கொண்டு வருவது அவளுக்குப் பிடிக்கவில்லை. உடனே 'அவனுக்கு ஒரே சிராங்கு!' என்று திட்டுவது போலக் கடுமையாகச் சொன்னாள்.

"அவனுக்குத் தாய் தகப்பன் இருந்தா அப்படி இருப்பானா? தாயில்லாப் பிள்ளைன்னா யாரு கவனிப்பா? அவனோட அம்மா, முன்னாலே அவனுக்குத் தீபாவளிக்குப் புதுவேட்டி புதுச்சட்டை எல்லாம் வாங்கிக் குடுத்திருப்பா! மத்தாப்பும் வாங்கிக் குடுத்திருப்பா!. இப்போ, அவன் அதை எல்லாம் நினைச்சுக் கேக்கிறானா பாரு."

"இப்போ அவன் தூங்கிட்டான். காலையிலே கேப்பான்" என்று சொல்லிவிட்டு மாங்கம்மாள் சிணுங்கினாள்.

தாயம்மாளுக்கு சிரிப்பு வந்து விட்டது. “வாயாடி” என்று சொல்லி மாங்கம்மாளின் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளினாள்.

சீனிவெடிச் சப்தம் பளபளவென்றும் கேட்டது.

“வாடையடிக்கம்மா” என்று அரைத் தூக்கத்திலேயே சொன்னான் தம்பையா.

தாயம்மாளுக்கு திகைப்பாக இருந்தது. “எதை மூடிக்கிறது? உம்.....” என்று ஒரு கணம் யோசித்தாள். அப்புறம், “என் பிள்ளைகளை விடவா அந்தப் பீத்தல் பெரிசு?” என்று சொல்லிக் கொண்டே எழுந்து போய், மறுநாள் கட்டிக் கொள்ளுவதற்காகத் துவைத்து உலர்த்தி மடித்து வைத்திருந்த உண்மையில் ‘பீத்தல்’ இல்லாத நாட்டுச் சேலையை எடுத்துக் கொண்டு வந்து ராஜா உட்பட எல்லோருக்கும் சேர்த்துப் போர்த்தினாள்.

மாங்கம்மாளைப் பார்த்து, “சரி, படுத்துக்கோ. காலையிலே எப்படியும் வாங்கித் தாரேன்” என்று சொல்லி அவளை உறங்கப் பண்ணுவதற்கு முயன்றாள்.

மூன்றாவது தடவையாகவும் சீனி வெடியின் சப்தம் கேட்டது.

தாயம்மாள் தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள். “இன்னிக்கி யாரும் அங்கே தூங்கமாட்டாக போலிருக்கு! உம், அரமனைக் காரியம்! ஆளுபோறதும் வாரதுமாக இருக்கு. ராமசாமியும் தூங்காம வேட்டுப் போடுறான்!.”

ராமசாமியின் அக்காளைக் கல்யாணம் பண்ணிக்கொண்டவன் ஒரு ஜமீன்தாரின் மகன். அந்த வருஷம் தலைதீபாவளிக்காக அவனை அன்று மாலையில் அழைத்து வந்திருந்தார் ராமசாமியின் தகப்பனார். அந்த ஊரில் மட்டுமல்லாமல் அந்த வட்டாரத்திலேயே அவர் தான் பெரிய மிராசுதார். ஜமீன்தார் வீட்டு மாப்பிள்ளையை, எதிர்கால ஜமீன்தாரை, மிகவும் கோலாகலமாக அழைத்து வந்து தீபாவளி நடத்த அநேக தினங்களாகவே அவர் வீட்டில் ஏற்பாடுகள் நடந்து வந்தன. தீபாவளிக்கு முதல் நாள் தான் மாப்பிள்ளை வந்து இறங்கினான். அதற்கு முன் பத்துப் பதினைந்து நாட்களாக ஒரு நிமிஷத்திற்கு ஒன்பது தடவை. “ராஜா வர்ரார், சிறப்பாச் செய்யணும், ராஜா வர்ரார், சிறப்பாச் செய்யணும் என்று அவர் சொல்லிக் கொண்டே இருந்தார். உண்மையில் வெகு சிறப்பாகத்தான் ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன......

“மாங்கம்மா”

பதில் இல்லை தூங்கிவிட்டாள்.

தாயம்மாளும் அகல் விளக்கை அணைத்துவிட்டுத் தலையைச் சாய்ந்தாள்.

முதல் கோழி கூப்பிட்டதும் தாயம்மாள் கண்விழித்துவிட்டாள்.

அப்போது மணி நாலு ஆகவில்லை. நல்ல வேளையாக மழை அப்போது தான் நின்றிருந்தது. சிறு தூவானம் மட்டும், ஓலைக் கூரையில் விழுவது, ஒரே நிதானத்துடன், சோளம் பொரிவது போலக் கேட்டுக் கொண்டிருந்தது...அந்தத் தெருவில் வேறு சில வீடுகளில் ஏற்கெனவே எழுந்து தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடத் தொடங்கிவிட்டதற்கு அடையாளமாக வேட்டுச் சப்தமும், வேட்டுச் சப்தத்தைக் கேட்டுப் பயந்து நாய்கள் குரைக்கும் சப்தமும் கேட்டுக் கொண்டிருந்தன.

தாயம்மாள். எழுந்து விளக்கை ஏற்றினாள். பளபளவென்றும் மழை பிடித்துவிடக் கூடாதே என்று அவளுக்குப் பயம். அதனால் குழந்தைகளை எழுப்பி, விறுவிறு என்று குளிப்பாட்டிவிட்டு, மற்ற வேலைகளைக் கவனிக்கலாம் என்று திட்டம் செய்தாள். குழந்தைகளுக்குப் படுக்கையை விட்டு எழுந்திருக்க மனமில்லை. கடைசியில் முனகிக் கொண்டும், புரண்டு படுத்துக்கொண்டும் ஒரு வழியாக எழுந்துவிட்டார்கள். அவள் ஒவ்வொரு குழந்தையாக எண்ணெய் தேய்த்து விட்டாள். ஆனால் ராஜா மட்டும் ‘எண்ணெய் தேய்த்துக் கொள்ள முடியாது’ என்று சொல்லி தூரத்தில் போய் உட்கார்ந்து கொண்டான். ‘தீபாவளிக்கு எண்ணெய் தேய்த்துக் குளிக்காவிட்டால் தோஷம்’ என்று சொன்னாள் தாயம்மாள், ராஜாவுக்கோ, என்ன சொன்னாலும் காதில் ஏறவில்லை.

“அரப்பு காந்தும் நான் மாட்டேன்” என்று பிடிவாதமாகச் சொன்னான் ராஜா.

“அரப்பும் போடல்லே, சீயக்காய் போட்டுக் குளிப்பாட்டுறேன். குளிர்ச்சியாயிருக்கும்.”

“ஊஹூம்.”

“தம்பி சொன்னாக் கேளுடா. என்னை உன் அம்மான்னு நெனைச்சுக்கோ. உனக்குக் காந்தும்படியா நான் தேய்ப்பனா? ....வா, எண்ணெய் தேய்ச்சுக் குளி. இந்தத் தீபாவளியோடே பீடை எல்லாம் விட்டுப்போகும். குளிக்காம இருக்கக் கூடாதப்பா?” இப்படி வெகுநேரம் கெஞ்சிய பிறகு தான் அவன் வேறு வழி இல்லாமல் சம்மதித்தான்.

ராஜா எழுந்து வந்து மணையில் உட்கார்ந்தான். “அது தான் நல்ல பிள்ளைக்கு அடையாளம். ஒரு பிள்ளைக்குத் தேச்சு, ஒரு பிள்ளைக்குத் தேய்க்காமல்விடலாமா? என் பிள்ளைகுட்டியும் நல்லா இருக்கணுமில்லப்பா?..” என்று மற்றவர்களுக்குச் சொல்லுவது போலத் தனக்குத்தானே சொல்லிக் கொண்டே எண்ணெய் தேய்த்தாள். தாயில்லாக் குழந்தைன்னா இந்தக் கோலம் தான். நான் மூணாம் வருசம் காய்ச்சலோடே படுத்திருந்தேனே, அப்போ கண்ணை மூடியிருந்தா என் குழந்தைகளுக்கும் இந்தக் கதிதானே? அதுகளும் தெருவிலே தானே நிக்கும். இப்படி என்னென்னவோ மனதுக்குள் நினைத்துக்கொண்டு அவசர அவசரமாகக் குழந்தைகளைக் குளிப்பாட்டினாள். ஆனால் தாயம்மாள் பயபத்திரமாகச் சீயக்காய்த் தூளைப்போட்டுத் தேய்த்தபோதிலும் ராஜா பலதடவைகள் ‘ஐயோ’ ‘ஐயோ’ என்று அழுது விட்டான். அவன் அழும்போதெல்லாம் அவள், இன்னிக்கோடே உன் சிரங்கு குணமாயிடும் என்று மட்டும் மாறி மாறிச் சொல்லிக்கொண்டே இருந்தாள்.

“யாரோ எவரோ? மழைன்னு வந்து வீட்டிலே ஒதுங்கிட்டான். அவனைப் போகச் சொல்ல முடியுமா? அவன் வந்த நேரம் தீபாவளியாப் போச்சு. குழந்தைகளுக்குள்ளே வஞ்சகம் செய்யலாமா? பார்க்கிறவுகளுக்கு நான் செய்றதெல்லாம் கேலியாயிருக்கும். அவுககேலி செய்தா செய்துட்டுப் போகட்டும். எனக்கும் என் குழந்தைகளுக்கும் பகவான் துணை செய்வான்......

அவள் தோசை சுட்டுக் கொடுத்தாள். அவளுடைய குழந்தைகள் புதுத் துணி உடுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஆவலினால் அவசர அவசரமாகச் சாப்பிட்டார்கள். தம்பையா கடைசி தோசையைப் பாதியிலேயே வைத்து விட்டு எழுந்துவிட்டான். அவனால் மேலும் இரண்டு தோசை சாப்பிட முடியும், இருந்தாலும் அவசரம்.

தெருவில் ஜன நடமாட்டம் துவங்கி விட்டது. மழையும் பரிபூரணமாக நின்று விட்டது. உதயத்தின் ஒளி சல்லாத் துணியைப் போல அவ்வளவு மெல்லியதாக ஊரையும் உலகத்தையும் போர்த்தியது.

புதுத்துணிகளுக்கு மஞ்சள் வைத்துச் செல்லையாவும் உடுத்திக் கொண்டான். தம்பையாவும் உடுத்திக் கொண்டான். மாங்கம்மாளும் பாவாடையையும் சட்டையையும் போட்டுக் கொண்டாள்.

ராஜா...

அவன் கௌபீனத்தோடு தான் நின்றான்.

தாயம்மாளுக்குப் பகீர் என்றது. 'இத்தனையும் செய்தும் புண்ணியமில்லாமல் போய்விட்டதே' என்று கலங்கினாள். இந்த மாதிரியான ஒரு கட்டத்தை அவள் எதிர்ப்பார்க்கவே இல்லை. சிட்டைத் துண்டை எடுத்துக் கொடுக்காமல் இருப்பதா? அவள் மனதுக்குள்ளே வேதனை மிக்க போராட்டம். மாதக் கணக்கில் வேதனை மிக்க போராட்டம். மாதக் கணக்கில் ஒரு ரூபாய்த் துண்டு இல்லாமல் அவளுடைய கணவன் பட்ட கஷ்டத்தையும், வீதிவழி போவதற்குக் கூசியதையும் ``ஒரு, துண்டு வாங்க வழியில்லை!'' என்று கணவன் துயரத்துடன் வாய்விட்டுப் புலம்பியதையும் நினைத்துப் பார்த்தாள். இந்தத் துயரத்தின் எதிர்புறத்தில் ஒன்றும் சொல்லாமல், ஒன்றும் செய்யாமல் மௌனமாக நின்று கொண்டிருந்தான் ராஜா.

தாயம்மாளுக்குத் திக்கு திசை தெரியவில்லை. ராஜாவின் முகத்தை எதற்கோ ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தாள். ராஜாவோ, வெகுநேரமாகக் கண்கொட்டாமல் அவளையே பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தான்.

``என்னைச் சோதிக்கத்தான் வந்திருக்கேடா நீ!'' என்று மனக்கசப்புடன் சொல்லுவது போலச் சொன்னாள் தாயம்மாள். ஆனால் அவளுக்கும் மனக்கசப்புக்கும் வெகு தூரம். மனதுக்குள் ஏற்பட்ட சிக்கல்களை விடுவிக்கவே இப்படிப்பட்ட வாசகத்தை அவள் தூக்கிப் போட்டாளே ஒழிய அவள் சொற்களில் மனக்கசப்பின் நிழல் கூடப் படியவில்லை.

அப்போது மங்கம்மாள் எழுந்துவந்து அம்மாவின் கன்னங்களில் தன் உள்ளங்கைகளை வைத்து, தன் முகத்துக்கு நேராக அவளுடைய முகத்தைத் திருப்பினாள். அப்புறம் ஏதோ ரகசியத்தைச் சொல்லுவது போலச் சொன்னாள்.

``பாவம்! அவனுக்கு அந்தத் துண்டைக்குடு அம்மா''

குழந்தை இந்த வார்த்தைகளைச் சொல்லி நிறுத்தினாள். ஒரு நிமிஷம்மௌனம் நிலவியது. பிறகு, திடீரென்று தாயம்மாளின் முகம் கோரமாக மாறியது. முந்தானையால் முகத்தை மூடிக் கொண்டு கேவிக் கேவி அழுதாள். அவளுடைய பெருமூச்சும் விம்மலும் வீட்டை அடைத்துக் கொண்டு கேட்டன.

குழந்தைகளுக்கு விஷயம் விளங்கவில்லை. மங்கம்மாள் 'தான் அப்படிச் சொன்னதற்காகத்தான் அம்மா அழுகிறாள்' என்று பயந்து விட்டாள்.

தாய் தன் பலத்தை எல்லாம் பிரயோகித்து அழுகையைத் தொண்டைக் குழியில் அழுத்தினாள். அவள் நெஞ்சு வெடித்து விடுவது போல விம்மியது. குரலும் அந்த ஒரு நிமிஷத்தில் ஜலதோஷம் பிடித்தது போலக் கம்மலாகிவிட்டது.

பிறகு தழுதழுத்து கொண்டே சொன்னாள்.

``தம்பையா!''

``என்னம்மா''

``ஹூம். ராஜாவுக்கு அந்தத் துண்டை எடுத்துக் குடு.''

வீட்டு முற்றத்தில் காலை வெயில் அடித்துகொண்டிருந்தது.

அந்தப் பொன்னொளியில் மஞ்சள் பூசிய முகத்துடன் புத்தாடை தரித்துக் கொண்டு நிற்கும் மங்கம்மாள், அப்போது எதையோ பார்த்துக்கொண்டிருந்தாள். ஈரம் காய்வதற்காக இறுக்கமின்றித் 'தொளதொள' என்று சடை போடப்பட்டிருந்ததால் கூந்தல், இரண்டு காதுகளையும், கன்னங்களில் பாதியையும் மறைத்துக் கொண்டிருந்தது. பரவலாய்க் கிடக்கும் கூந்தலின் நடுவே இளங்காற்றுப் புகுந்து சிலுசிலுக்கும் போது, சுகமும் கூச்சமும் தாங்க முடியாமல் சிரித்துக் கொண்டே இமைகளைக் குவித்தாள் மங்கம்மாள்.

வெகு நேரமாக, தாயம்மாள் அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள். சந்தர்ப்பவசமாக, அவளுக்கு நேராக மங்கம்மாள் முகத்தைத் திருப்பினாள்.

``என் ராஜாத்தி, மகாலக்ஷ்மி மாதிரி இருக்கா!'' என்று தன்னை மறந்த இன்பத்துடன் சொல்லிவிட்டாள் தாய். அவ்வளவு தான், குழந்தையின் கையைப் பிடித்து வெகு வேகமாக வீட்டுக்குள்ளே இழுத்துக் கொண்டு வந்து திருஷ்டி பரிகாரமாக அவளுடைய கன்னத்தில் துளாம்பரமாகச் சாந்துப் பொட்டை எடுத்து வைத்தாள்.

அப்புறம் மங்கம்மாள் வீதிக்கு ஓடி விட்டாள். ராமசாமியின் வீட்டுப் பக்கம் எச்சில் இலைகள் ஏராளமாக கிடந்தன. அங்கே நாலைந்து பேர் நின்று பேசிக் கொண்டும், வெற்றிலை பாக்குப் போட்டுத் துப்பிக் கொண்டும் இருந்தார்கள். ராமசாமி நீலநிறமான கால் சட்டையும் அந்த ஊருக்கே புதிய புஷ்கோட்டும் போட்டுக் கொண்டு நின்றான். மங்கம்மாளைப் பார்த்ததும் அவன் பக்கத்தில் ஓடி வந்தான். மங்கம்மாளும் அவனைப் பார்த்து நடந்தாள். இருவரும் பாதி வழியில் சந்தித்துக் கொண்டனர். சந்தித்த மாத்திரத்தில், மிகவும் சந்தோஷத்துடன் ராமசாமி சொன்னான்.

``எங்க வீட்டுக்கு ராஜா வந்திருக்கிறார்''

ஊர்க்காரர்களைப் போல அவனும் தன் அக்காள் புருஷனை 'ராஜா' என்று சொன்னான். ஆனால் அவன் சொன்னதற்குக் காரணம் சந்தோஷம் தானே ஒழிய, மங்கம்மாளைப் போட்டிக்கு அழைப்பதற்காக அல்ல. ஆனால் அவளோ வேறுவிதமாக நினைத்துவிட்டாள். முதல் நாள் பள்ளிக்கூடத்திலிருந்து வந்த போது நடந்த போட்டி தான் அவள் ஞாபகத்தில்இருந்தது. அவன் சொன்னதற்குப் பதில் சொல்லி அவனுடைய 'பெருமையை மட்டம் தட்ட வேண்டும்' என்று அவள் மனம் துடித்தது. அதனால், ஒரு அரை அடி முன்னால் நகர்ந்து வந்து நின்றாள். யாதொரு திகைப்பும், தயக்கமும் இல்லாமல் ராமசாமியைப் பார்த்து, ரேகை சாஸ்திரியிடம் காட்டுவது போலக் கையை வைத்துக் கொண்டு, மிக மிக ஏளனமாகச் சொன்னாள்.

``ஐயோ உங்க வீட்டுக்குத்தானா ராஜா வந்திருக்கிறார்? எங்க வீட்டுக்கும் தான் ராஜா வந்திருக்கிறான். வேணும்'னா வந்து பாரு.''

கு. அழகிரிசாமி (1923 - 1970)

குருசாமி ஆச்சாரி என்கிற அழகிரிசாமி திருநெல்வேலி, இடைச்செவல் கிராமத்துக்காரர். இவருடைய படைப்புகள் கு.அழகிரிசாமி சிறுகதைகள் [1952] அன்பளிப்பு சிறுகதை தொகுப்பு [1971], மலேசியா தமிழ் நேசன் தினசரி, மகாத்மாகாந்தி, தமிழ் நூல்கள் வெளியீட்டு கழகம், சோவியத் நாடு போன்றவற்றில் துணை ஆசிரியராக இருந்தவர்.

# ஸ்டாம்பு ஆல்பம்

சுந்தர ராமசாமி

ராஜப்பாவின் புகழ் மங்கிப் போய்விட்டது. மூன்று நாட்களாக நாகராஜனைச் சுற்றிக் கூட்டம். நாகராஜனுக்குக் கர்வம் வந்து விட்டது என்று ராஜப்பா எல்லாப் பையன்களிடமும் சொன்னான். பையன்கள்அதை ஒப்புக்கொள்ளவில்லை. நாகராஜன் சிங்கப்பூரிலிருந்து அவன் மாமா அனுப்பி வைத்த ஆல்பத்தை எல்லோரிடமும் காட்டினான். பள்ளிக் கூடத்தில் காலை முதல் மணி அடிப்பது வரை பையன்கள் நாகராஜனைச் சுற்றிச் சூழ நின்று கொண்டு ஆல்பத்தைப் பார்த்தார்கள். மதியம் இடைவேளையிலும் அவனை மொய்த்தார்கள். கோஷ்டி கோஷ்டியாக வீட்டிற்கு வந்தும் பார்த்து விட்டுப் போனார்கள் பொறுமையோடு எல்லோருக்கும் காட்டினான் அவன். யாரும் ஆல்பத்தைத் தொடக்கூடாது என்று மட்டும் சொன்னான். அவன் மடியில் வைத்தபடி ஒவ்வொரு பக்கமாகத் திருப்புவான். பையன்கள் பார்த்துக் கொள்ளவேண்டும்.

வகுப்புப் பெண்களுக்கும் நாகராஜனின் புதிய ஆல்பத்தைப் பார்க்க வேண்டுமென்று ஒரே ஆசை. பெண்கள் சார்பில் பார்வதி வந்து கேட்டாள் அவள் தைரியத்திற்குப் பெயர் போனவள். ஆல்பத்திற்கு அட்டை போட்டு அவள் கையில் கொடுத்தான் நாகராஜன். எல்லாப் பெண்களும் பார்த்தபின் மாலையில் ஆல்பம் கைக்கு வந்துசேர்ந்தது.

இப்பொழுது ராஜப்பாவின் ஆல்பத்தைப் பற்றி பேசுவாரில்லை. அவனுடைய புகழ் மங்கித்தான் போய்விட்டது.

ராஜப்பாவின் ஆல்பம் மாணவர்கள் வட்டாரத்தில் மிகவும் பிரசித்தி பெற்றது. தேனீ தேன் சேர்ப்பது மாதிரி ஒவ்வொரு ஸ்டாம்பாகச் சேர்த்து வைத்திருந்தான். இதைத் தவிர வேறு எந்த விஷயத்திலும் கவனமில்லை அவனுக்கு. காலையில் எட்டு மணிக்கே வீட்டைவிட்டுக் கிளம்பி விடுவான். ஸ்டாம்பு சேர்க்கும் பையன்கள் வீடுதோறும் ஏறி இறங்குவான். இரண்டு ஆஸ்திரேலியாவைக் கொடுத்துவிட்டு ஒரு பின்லண்டு வாங்குவான். இரண்டு பாகிஸ்தான் வாங்கிக் கொண்டு ஒரு ருஷ்யாவைக் கொடுப்பான். மாலையில் வீட்டுக்கு வந்து புத்தகத்தை மூலையில் எறிந்துவிட்டு, முறுக்கைக் கையில் வாங்கி நிக்கர் பையில் அடைத்து நின்றபடியே காபியை விட்டுக் கொண்டு கிளம்பிவிடுவான். நாலு மைல் தொலைவில் ஒரு பையனிடம் கானடா இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கும். முறுக்கைக் கடித்துக்கொண்டே யைற்காட்டு குறுக்குப் பாதையில் ஓடுவான்.

அந்தப் பள்ளிக்கூடத்திலே அவனுடைய ஆல்பம்தான் பெரிய ஆல்பம். சிரஸ்தார் பையன் அவன் ஆல்பத்தை இருபத்தைந்து ரூபாய்க்கு விலைக்குக் கேட்டான். பணக் கொழுப்பு பணத்தைக் கொடுத்து ஆல்பத்தை விலைக்கு வாங்கிவிடலாமென்று நினைத்தான். ராஜப்பா கடர்சுடு பதில் கொடுத்தான். "உங்க வீட்டிலே ஒரு அழகான குழந்தை இருக்கே. முப்பது ரூபாய் தறேன். விலைக்குத் தாயேன்" என்று கேட்டான். கூடியிருந்த பையன்கள் எல்லோரும் கைதட்டி, விசில் அடித்து ஆமோதித்தார்கள்.

ஆனால் இப்பொழுது அவன் ஆல்பத்தைப் பற்றிப்பேச்சே இல்லை. அதுமட்டுமல்ல, நாகராஜனின் ஆல்பத்தைப் பார்த்தவர்கள் எல்லோரும் அதை ராஜப்பாவின் ஆல்பத்தோடு ஒப்பிட்டுப் பேசினார்கள். ராஜப்பாவின் ஆல்பத்தைத் தூக்கி அடித்துவிட்டதாம்.!

ராஜப்பா நாகராஜனின் ஆல்பத்தைக் கேட்டு வாங்கிப் பார்க்கவில்லை. ஆனால் மற்றப் பையன்கள் பார்க்கிறபொழுது அந்தப் பக்கமே திரும்பாததுபோல் பாவித்துக் கொண்டு ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டான். உண்மையாகவே நாகராஜனின் ஆல்பம் மிகவும் அழகாகத்தான் இருந்தது. ராஜப்பா ஆல்பத்திலிருந்த ஸ்டாம்புகள் நாகராஜனின் ஆல்பத்தில் இல்லை. எண்ணிக்கை குறைவுதான். ஆனால் அந்த ஆல்பமே அற்புதமாக இருந்தது. அதைக் கையில்வைத்துக் கொண்டிருப்பதே பெருமை தரும் விஷயம்தான் அந்தமாதிரி ஆல்பமே அந்த ஊர்க் கடைகளில் கிடைக்காது.

நாகராஜனின் ஆல்பத்தில் முதல் பக்கத்தில் முத்து முத்தான எழுத்தில் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தது. அவன் மாமா அப்படி எழுதி அனுப்பியிருந்தார்.

ஏ.எஸ்.நாகராஜன்

"வெட்கம் கெட்டுப்போய் இந்தஆல்பத்தை யாரும்திருட வேண்டாம். மேலே எழுதியிருக்கும் பெயரைப்பார். இது என்னுடைய ஆல்பம் புல் பச்சை நிறமாக இருப்பதுவரை, தாமரை சிவப்பாக இருப்பதுவரை, சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் அஸ்தமிப்பது வரை இந்த ஆல்பம் என்னுடையதுதான்."

மற்ற பையன்கள் எல்லோரும் இதைத் தங்களுடைய ஆல்பத்திலும் எழுதிக்கொண்டார்கள் பெண்கள் தங்களுடைய நோட்புத்தகத்திலும் பாடப் புத்தகத்திலும் எழுதிக் கொண்டார்கள். "எதுக்கடா அவனைப் பார்த்துக் காப்பி அடிக்கறீங்க ? வெமிச்சான் காப்பி!" என்று எல்லாப் பையன்களிடத்திலும் இரைந்தான் ராஜப்பா.

"ஒருவரும் பதில் பேசாமல் ராஜப்பா முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். கிருஷ்ணனுக்குப் பொறுக்கவில்லை.

"போடா அசூயை பிடிச்ச பயலே" என்று கத்தினான் கிருஷ்ணன்.

"எனக்கு எதுக்குடா அசூயை? அவன் ஆல்பத்தைவிட என் ஆல்பம் பெரிசுடா" என்றான் ராஜப்பா.

"அவனிடம் இருக்கிற ஒரு ஸ்டாம்பு உன்னிடம் இருக்கா ? இந்தோனேஷியா ஸ்டாம்பு ஒன்னு போருமே. கண்ணில் ஒத்திக்கடா அவன் ஸ்டாம்பை" என்றான் கிருஷ்ணன்.

"என்னிடம் இருக்கிற ஸ்டாம்பெல்லாம் அவனிடம் இருக்கா ?" என்று கேட்டான் ராஜப்பா.

"அவனிடம் இருக்கிற ஒரு ஸ்டாம்பு ஒன்று காட்டட்டும் பார்ப்போம்" என்றான் கிருஷ்ணன் "பத்து ரூபா பெட்".

"என்னிடம் இருக்கிற ஒரு ஸ்டாம்பு அவன் காட்டட்டும் பார்க்கலாம் பத்து ரூபாய் பெட்"

"உன் ஆல்பம் குப்பைத் தொட்டி ஆல்பம்" என்று கத்தினான் கிருஷ்ணன். எல்லாப் பையன்களும், குப்பைத் தொட்டி ஆல்பம், குப்பைத் தொட்டி ஆல்பம் என்று கத்தினார்கள்".

தன்னுடைய ஆல்பத்தைப் பற்றி இனிமேல் பேசிப்பயனில்லை என்று தெரிந்து கொண்டான் ராஜப்பா.

அவன் அரும்பாடுபட்டுச் சிறுகச் சிறுகச் சேர்த்த ஆல்பம். சிங்கப்பூரிலிருந்து ஒரு தபால் வந்து நாகராஜனை ஒரே நாளில் பெரியவனாக்கிவிட்டது. இரண்டிற்குமுள்ள வேற்றுமை பையன்களுக்குத் தெரியவில்லை. சொன்னாலும் அசடுகளுக்கு மண்டையில் ஏறாது.

ராஜப்பா தன்னிலையின்றி குமைந்து கொண்டிருந்தான். பள்ளிக் கூடம்போவதற்கே பிடிக்கவில்லை.

மற்றப் பையன்கள் முகத்தில் விழிப்பதற்கே வெட்கமாக இருந்தது. வழக்கமாக சனி ஞாயிறுகளில் ஸ்டாம்பு வேட்டைக்கு அலையாத அலைச்சல் அலைபவன் இந்தத் தடவை வீட்டைவிட்டு வெளியே தலை நீட்டவில்லை. ஒரு நாளில் ராஜப்பா அவன் ஆல்பத்தை எத்தனை தடவை திருப்பித் திருப்பிப் பார்த்தான் என்பதற்குக் கணக்கே கிடையாது. இரவு படுத்துக் கொண்டபின் திடீரென்று ஏதோநினைத்துக் கொண்டு ட்ரங்குப் பெட்டியைத் திறந்து ஆல்பத்தை எடுத்து ஒருமுறை

பூட்டிவிட்டு வருவான். அதை இரண்டுநாட்களாக வெளியிலேயே எடுக்கவில்லை. ஆல்பத்தைப் பார்ப்பதற்க்கே எரிச்சலாக இருந்தது. நாகராஜனின் ஆல்பத்தைப் பார்க்கிறபொழுது தன்னுடைய ஆல்பம் வெறும் அப்பளக்கட்டு என்று தான் தோன்றிற்று அவனுக்கு.

அன்று மாலை ராஜப்பா நாகராஜனின் வீடு தேடிச் சென்றான். அவன் ஒருமுடிவுக்கு வந்துவிட்டான். இந்த அவமானத்தை அவனால் அதிக நாட்கள் தாங்கிக் கொண்டிருக்க முடியாது.

திடீரென்று ஒரு புதிய ஆல்பம் நாகராஜன் கைக்கு வந்து சேர்ந்திருக்கிறது. அவ்வளவுதானே ஸ்டாம்பு சேகரிப்பதிலுள்ள தந்திரங்கள் அவனுக்கு என்ன தெரியும் ? ஒவ்வொரு ஸ்டாம்புக்கும் ஸ்டாம்பு சேர்க்கிறவர்கள் மத்தியில் என்ன மதிப்புண்டு என்பது அவனுக்குத் தெரியுமா என்ன ? பெரிய ஸ்டாம்புதான் சிறந்த ஸ்டாம்பு என்று நினைத்துக் கொண்டிருப்பான். அல்லது பெரிய தேசத்து ஸ்டாம்பு தான் அதிக மதிப்புள்ளது என்று எண்ணி கொண்டிருப்பான். எப்படியும், அவன் அமெச்சூர்தானே ? தன்னிடம் இருக்கும் உதவாக்கரை ஸ்டாம்புகள் சில கொடுத்து மணியான ஸ்டாம்புகளைத் தட்டிவிட முடியாதா என்ன ? எத்தனையோ பேருக்கு நாமம் சாத்தவில்லையா ? இதிலிருக்கிற தந்திரமும் மாயமும் கொஞ்சமா ? நாகராஜன் எந்த மூலைக்கு ?

ராஜப்பா நாகராஜன் வீட்டை அடைந்து மாடிக்குச் சென்றான். அவன் அடிக்கடி வருகிற பையன் என்பதால் யாரும் ஒன்றும் சொல்லவில்லை. மாடியில் சென்று நாகராஜனின் மேஜைக்கு முன் உட்கார்ந்து கொண்டான். சிறிது நேரம் கழிந்ததும் நாகராஜனின் தங்கை காமாட்சி மாடிக்கு வந்தாள். "அண்ணா டவுனுக்குப் போயிருக்கிறான்." என்று சொல்லிவிட்டு "அண்ணா ஆல்பத்தைப் பார்த்தியா ?" என்று கேட்டாள்.

"உம் என்றான் ராஜப்பா"

"அழகான ஆல்பம் இல்லையா ஸ்கூல்லே வேறெ யாரிட்டேயும் இவ்வளவு பெரிய ஆல்பம் இல்லையாமே ?

பார்க்கப் பெரிதாக இருந்தால் போதுமா ?

சிறிது நேரம் அங்கிருந்துவிட்டு, காமாட்சி கீழே சென்றுவிட்டாள்.

ராஜப்பா மேசையில் கிடந்த புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று டிராயர் பூட்டில் கைபட்டது. பூட்டை இழுத்து பார்த்தான். பூட்டித்தான் இருந்தது. திறந்து பார்த்தால் என்ன ? மேஜை மேலிருந்து சாவியைக் கண்டெடுத்தான் ஏணிப்படியோரம் சென்று ஒருதடவை கீழே குனிந்து பார்த்துவிட்டு, சட்டென்று டிராயரைத் திறந்தான். மேலாக ஆல்பம் இருந்தது. முதல் பக்கத்தைத் திருப்ப, அதில் எழுதியிருந்ததை வாசித்தான். நெஞ்சு படக் படக்கென்று அடித்துக் கொண்டது. ஒரு நிமிஷத்தில் டிராயரைப் பூட்டினான். ஆல்பத்தை எடுத்துச் சட்டைக்குள் நிக்கரில் செருகிக் கொண்டு கீழிறங்கி வீட்டைப் பார்த்து ஓட்டமாக ஓடினான்.

நேராக வீட்டிற்குள் சென்று புத்தக அலமாரிக்குப் பின்னால் ஆல்பத்தை மறைத்து வைத்தான். வாசல் பக்கம் வந்தான். உடம்பு பூராவும் கொதிப்பது போலிருந்தது. தொண்டை உலர்ந்தது. முகத்தில் ஜில் ஜில்லென்று ரத்தம் குத்திற்று.

இரவு எட்டு மணிக்கு எதிர்வீட்டு அப்பு வந்தான். கையையும் தலையையும் ஆட்டிக் கொண்டு விஷயத்தைச் சொன்னான். 'நாகராஜன் ஸ்டாம்பு ஆல்பத்தைக் காணவில்லையாம் அவனும் நாகராஜனுமாக டவுனுக்குச் சென்றிருந்தார்களாம். திரும்பி வந்து பார்க்கிறபொழுது மாயமாக மறைந்துவிட்டதாம் ஆல்பம்'.

ராஜப்பாவுக்கு ஒன்றும் பேச முடியவில்லை. அவன் எப்படியாவது போய்விட்டால் போதுமென்றிருந்தது. அப்பு சென்றதும் அறைக்குள் வந்தான். கதவைச் சாத்தினான். அலமாரிக்குப் பின்னாலிருந்து ஆல்பத்தை எடுத்தான். கை விறைத்தது. ஜன்னல் வழியாக யாராவது பார்த்துவிடுவார்கள் என்று பயந்து மீண்டும் ஆல்பத்தை அலமாரிக்குப் பின்புறம் திணித்தான்.

இரவு சாப்பிட முடியவில்லை. வயிற்றை அடைத்துக் கொண்டுவிட்டது. வீட்டிலுள்ள எல்லோரும் அவன் முகத்தைப் பார்த்து, "என்னடா, என்னடா" என்று கேட்டார்கள். தன்னுடைய முகம் பயங்கரமாக கோணிக்கொண்டிருப்பது மாதிரித் தோன்றிற்று அவனுக்கு.

'எப்படியாவது தூங்கிவிடுவோம்' என்று படுக்கையை விரித்துப் படுத்தான். தூக்கம் வரவில்லை. தான் தூங்கிக் கொண்டிருக்கிறபொழுது யாராவது அலமாரிக்குப் பின்னாலிருந்து ஆல்பத்தைக் கண்டெடுத்துவிட்டால் என்ன செய்வது என்று பயந்து ஆல்பத்தை எடுத்துவந்து தலையணைக்கடியில் வைத்துக் கொண்டான்.

இரவு எப்பொழுது தூங்கினான் என்பது அவனுக்கே தெரியாது. காலையில் கண் விழித்தபின்பும் தலையணையில் இருந்து ஆல்பத்தை எடுக்க முடியவில்லை. தாயாரும் தகப்பனாரும் ஒருவர் மாற்றி ஒருவர் அங்கு வந்து கொண்டிருந்தனர். ஆல்பத்தோடு பாயைச் சுருட்டி அதன் மேல் உட்கார்ந்து கொண்டான்.

காலையில் மீண்டும் அப்பு வந்தான். அப்பொழுதும் ராஜப்பா பாய்மேல்தான் உட்கார்ந்து கொண்டிருந்தான். அப்பு காலையில் நாகராஜன் வீட்டுக்குப் போய்விட்டு வந்திருந்தான்.

"நேற்று அவனுடைய வீட்டுக்குப் போனியோ" என்று கேட்டான் அப்பு.

ராஜப்பாவுக்கு வயிற்றைக் கலக்கிற்று. ஒரு தினுசாக மண்டையை ஆட்டினான். எப்படி வேண்டுமென்றாலும் அர்த்தம் எடுத்துக்கொள்ளும்படி தலையை அசைத்தான்.

"நாங்க வெளியில் போனபின் நீ மட்டும்தான் அங்கே வந்தாய் என்று காமாட்சி சொன்னாள்" என்றான் அப்பு.

தன்னை சந்தேகப்படுகிறார்கள் என்பது தெரிந்துவிட்டது ராஜப்பாவுக்கு.

"நேற்று ராத்திரியிலிருந்து இதுவரை அழுது கொண்டே இருக்கிறான் நாகராஜன். அவன் அப்பா போலீஸுக்குச் சொன்னாலும் சொல்லுவார் போலிருக்கிறது" என்றான் அப்பு.

ராஜப்பா வாய் பேசாமலிருந்தான்.

"அவன் அப்பாவுக்கு டி.எஸ்.பி. ஆபீஸிலேதானே வேலை ? அவர் விரலை அசைத்தால் போலீஸ் படையே திரண்டு விடும்" என்றான் அப்பு.

நல்ல வேளை அப்புவைத் தேடி அவன் தம்பி வந்தான். அப்பு சென்றுவிட்டான்.

ராஜப்பாவின் தகப்பனாரும் காலை உணவை முடித்துக்கொண்டு சைக்கிளில் ஆபீஸ் சென்று விட்டார். வாசல் கதவு சாத்தியிருந்தது.

ராஜப்பா படுக்கையிலேயே உட்கார்ந்துகொண்டிருந்தான். அரைமணி நேரமாயிற்று. அப்படியே அசையாமல் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

அப்பொழுது வாசல் கதவைத் தட்டும் ஓசை கேட்டது.

'போலீஸ், போலீஸ்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் ராஜப்பா, வாசல் கதவில் உள்ளே சங்கிலி போட்டிருந்தது.

வாசல் கதவைத் தட்டும் சப்தம் தொடர்ந்து கேட்டது.

ராஜப்பா பாய்க்குள்ளிருந்து ஆல்பத்தை வெளியே எடுத்துக் கொண்டு மாடிக்கு ஓடினான். அங்கே நிற்க முடியவில்லை. அலமாரிக்குப் பின்னால் ஆல்பத்தை திணித்தான். சோதனை போட்டால் அகப்பட்டுவிடுமே ? ஆல்பத்தை எடுத்துக் கொண்டு சட்டைக்குள் மறைத்தவாறே கீழே வந்தான்.

அப்பொழுதும் வாசல் கதவைத் தட்டும் ஓசை கேட்டுக்கொண்டிருந்தது.

''யாருடா ? யாரு ? கதவைத் திறயேன்'' என்று அம்மா உள்ளேயிருந்து கத்திக் கொண்டிருந்தாள். இன்னும் சில வினாடிகள் அம்மாவே வந்து திறந்துவிடுவாள்.

ராஜப்பா பின்புறம் ஓடினான். மடமடவென்று ஸ்நான அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டான். வெந்நீர் அடுப்பு தகதக வென்று எரிந்து கொண்டிருந்தது. பட்டென்று ஆல்பத்தை அடுப்பில் போட்டான். ஆல்பம் பற்றி எரிந்தது. அவ்வளவும் மணிமணியான ஸ்டாம்புகள். எங்கும் கிடைக்காத ஸ்டாம்புகள். தன்னையறியாமலே கண்களில் நீர் துளிர்த்துவிட்டது ராஜப்பாவுக்கு.

அப்பொழுது ஸ்நான அறைக்கு வெளியே அம்மாவின் குரல் கேட்டது.

''சட்டென்று குளித்துவிட்டு வாடா உன்னைத்தேடி நாகராஜன் வந்திருக்கிறான்'' என்றாள் அவன் தாயார்.

ராஜப்பா நிக்கரை கழற்றி ஸ்நான அறைக் கொடியில் போட்டுவிட்டு ஈரத்துண்டைக் கட்டிக்கொண்டு வெளியே வந்தான். விட்டிருந்துவந்து புதுச்சட்டையும். நிக்கரும் போட்டுக்கொண்டு மாடிக்குச் சென்றான். நாகராஜன் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தான். ராஜப்பனைப் பார்த்ததுமே ''என் ஸ்டாம்பு ஆல்பம் தொலைந்து போய்விட்டதடா'' என்று ஈனமான குரலில் சொன்னான். முகத்தில் வருத்தம் தெரிந்தது. அழுது குளித்திருக்கிறான் என்பதையும் கண்கள் சொல்லிற்று.

''எங்கே வைத்தாய்டா ?'' என்று கேட்டான் ராஜப்பா

''ட்ராயரில் பூட்டி வைத்திருந்ததாகத் தான் ஞாபகம். டவுனுக்குச் சென்றுவிட்டுத் திரும்பி வந்து பார்க்கிறபொழுது காணவில்லை.''

நாகராஜன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. அவன் ராஜப்பா முகத்தைப் பார்ப்பதற்கு வெட்கப்பட்டு முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டான்.

''அழாதேடா, அழாதேடா'' என்று தேற்றினான் ராஜப்பா.

ராஜப்பா சமாதானம் சொல்லச் சொல்ல மேலும் மேலும் பெரிதாக அழுதான் நாகராஜன்.

ராஜப்பா சட்டென்று கீழே சென்றான். ஒரு நிமிஷத்திற்குள் நாகராஜன் முன்னால் வந்து நின்றான். அவன் கையில் அவனுடைய ஆல்பம் இருந்தது.

''நாகராஜா, இந்தா என்னுடைய ஆல்பம். இதை நீயே வைத்துக் கொள். உனக்கே உனக்குத்தான். என்ன அப்படிப் பார்க்கிறாய் ? விளையாட்டில்லை உனக்குத்தான் உனக்கே தான்.''

''சும்மா சொல்கிறாய்'' என்றான் நாகராஜன்.

''இல்லையடா உனக்கே தருகிறேன். நிஜமாகத்தான். உனக்கே உனக்கு வைத்துக்கொள்.''

ராஜப்பா அவன் ஸ்டாம்பு ஆல்பத்தைக் கொடுத்துவிடுவதா ? நடக்கக் கூடியதா ? நாகராஜனால் நம்பமுடியவில்லை. ஆனால் ராஜப்பா அதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தான். அவனுக்கு குரல் கம்மிவிட்டது.

''எனக்கு தந்துவிட்டால் உனக்கு ?''

''எனக்கு வேண்டாம்''

''உனக்கு ஒரு ஸ்டாம்புகூட வேண்டாமா ?''

''ஊஹூம்''

''நீ எப்படியடா ஸ்டாம்பே இல்லாமலிருப்பாய் ?'' என்று கேட்டான் நாகராஜன்

ராஜப்பா கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது.

''ஏன்டா அழுகிறாய் ? எனக்கு ஆல்பத்தைத்தர வேண்டாம். நீயே வைத்துக்கொள். நீ எவ்வளவு கஷ்டப்பட்டுச் சேர்த்த ஆல்பம்'' என்றான் நாகராஜன்.

''இல்லை நீ வைத்துக்கொள் உனக்கே இருக்கட்டும் எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப் போய்விடு. போ, போ'' என்று ராஜப்பா அழுது கொண்டே கத்தினான்.

நாகராஜனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவன் ஆல்பத்தை எடுத்துக்கொண்டே கீழே இறங்கி வந்தான்.

சட்டையைத் தூக்கிக் கண்களைத் துடைத்துக்கொண்டே பின்னால் இறங்கி வந்தான் ராஜப்பா.

இருவரும் வாசல்படிக்கு வந்து விட்டார்கள்.

''நீ ஆல்பத்தைக் கொடுத்ததற்கு ரொம்ப தாங்க்ஸ். நான் வீட்டுக்கு போகட்டுமா'' என்று கேட்டுக்கொண்டே படியில்இறங்கினான் நாகராஜன்.

அப்பொழுது ''நாகராஜா'' என்று கூப்பிட்டான் ராஜப்பா நாகராஜன் திரும்பிப் பார்த்தான்.

அந்த ஆல்பத்தைக் கொண்டா. இன்று ராத்திரி ஒரே ஒரு தடவை பூராவையும் பார்த்துவிட்டு, காலையில் உன் வீட்டில் கொண்டுவந்து தந்துவிடுகிறேன் என்றான் ராஜப்பா.

சரி என்று ஆல்பத்தைக் கொடுத்துவிட்டுப் போனான் நாகராஜன்.

ராஜப்பா மாடிக்குச் சென்று கதவைச் சாத்திக்கொண்டு ஆல்பத்தை நெஞ்சோடு அணைத்தவாறு ஏங்கி ஏங்கி அழுதான்.

---

சுந்தரராமசாமி

**எஸ். ஆர். சுந்தரஐயர் ராமசாமி என்கிற சுந்தரராமசாமி, நாகர்கோவிலில் பிறந்தவர். இவரின் சிறுகதை தொகுப்புகள்: அக்கரைச் சீமையில் [1959] பிரசாதம் [1974], சுந்தரராமசாமி கதைகள் [1991] நாவல்கள்: ஒரு புளிய மரத்தின் கதை [1966] ஜே ஜே சில குறிப்புகள் [1981] குழந்தைகள் பெண்கள் ஆண்கள் [1998] கவிதை தொகுப்பு 107, கவிதைகள் [1996], கட்டுரைத் தொகுப்பு: காற்றில் கலந்த பேரோசை [1997] விரிவும் ஆழமும் தேடி [1998] காலச்சுவடு என்ற இலக்கிய ஏட்டின் நிறுவுநர்.**

# ஓர் உல்லாசப் பயணம்

-வண்ணதாசன்

எப்போது நினைத்தாலும் போகலாம்.

அவ்வளவு பக்கத்தில் இருக்கிறது வாய்க்கால். குளிக்கிறதற்காகப் புறப்பட்டவர்தான் இங்கேயே நின்றுவிட்டார். நடையிறங்கக் கால் வைக்கும்போது மேட்டுப் பள்ளிக்கூட வாத்தியார் எதிரே குளித்துவிட்டு வந்து கொண்டிருந்தார். பாலாய்த் தேய்த்துக் குளிப்பாட்டிவிட்ட பசுவும் கன்றுக்குட்டியும் தன்னடையாய் முன்னே போய்க் கொண்டிருந்தன. இவரைப் பார்த்ததும், ஒன்றே ஒன்றை மாத்திரம்தான் கேட்பதற்கு நேரம் இருந்ததுபோல், "என்ன, பையனை விறகுக் கடையில் பார்த்தேனே, குற்றாலம் எக்ஸ்கர்ஷனுக்கு அனுப்பலையா?" என்று நடையில் நின்றவரைப் பார்த்துக் கேட்டார். பசு தந்திப் போஸ்ட் பக்கம் போய் நின்று கொண்டு ஒருமுறை இவரைத் திரும்பிப் பார்த்துக் கத்தியது. கன்றுக்குட்டி, எதிர்த்த வீட்டுச் சுவரோரத்தை மாங்காய்த் தடவிக் கொண்டிருந்த ஊமைவெயிலில் நின்று சடசடவென்று உதும்பிக் கொண்டது. தான் கேட்டதற்குத் தானே, "என்ன பொல்லாத குத்தாலம்? இரண்டு மூணு நாளா இந்த ஊரே குத்தாலம் மாதிரித்தான் இருக்கு" என்று பதிலும் சொல்லிக் கொண்டு போனார்.

ஆமாம், இரண்டு மூணு நாட்களாய் அடிக்கிற காற்றையும் சாரலையும் பார்த்தால், குற்றாலம் மாதிரித்தான் இருக்கிறது. இப்போதுகூடக் காலை பதினொரு மணி மாதிரியில்லை. கும்மென்று இருட்டிக் கிடக்கிறது. கிரகணம்பிடித்ததுபோல். எப்போதாவது பழுப்பு வெயில். அடிக்கிற காற்றில் பெருக்கிப் போட்டது போல் தெரு பளிரென்று கிடக்கிறது. நடமாட்டமே இல்லை. தெருக் கடைசியில் பார்த்தால், 'பைப்' படியில் ஒரு வெள்ளாட்டுக் குட்டி மாத்திரம்,காம்பவுண்டுச் சுவரொன்றில் நின்றபடி சத்தம் போட்டுக் கொண்டிருக்கிறது. மறுபடியும் மறுபடியும் அதனுடைய சத்தம் ஒரு குழந்தையின் அழுகையைப் போலக் கேட்கிறது. பீடியிலை வாங்கிக் கொண்டு போன நீலப் புடவைக்காரி துப்பிவிட்டிருந்த வெற்றிலைச் சாறு சிவப்பாய்த் தரையில் குழம்பியிருக்கிறது. 'வேப்பழுத்து' இருக்கா. வேப்பழுத்து?" என்ற ஒரு குரல் இந்தத் தெருவையும் அடுத்த தெருவையும் இணைக்கிற சந்திலிருந்து கேட்கிறது. ஒரே ஓர் அரச இலை காற்றில் பறந்து வந்து விழுந்து தரையோடுச் தரையாய்ச் சருக்கிப் போகிறது. திடீரென்று பக்கத்து வீட்டு அடுக்களை அங்கணத்திலிருந்து கழிவு நீர் சிதறித் தெருவின் பாதி வரை. அந்த ஒற்றை அரசிலையைக் கவ்வுவதுபோல, கால்களால் ஓடி விழுகிறது. முருங்கைக்காய்ச் சக்கையும் கத்தரிக்காய்த் தோலுமாய்ச் சோற்றுப் பருக்கைகளோடு விசிறிக்கிடக்கிற அருவருப்பை பார்த்ததும் அவருக்கு வீட்டுக்குள் போய் விடலாம் போலிருந்தது. இருந்தாலும் அவர் நின்றார். 'இப்போது முருங்கைக்காய் சீஸனோ?' என்று நினைத்துக் கொண்டார்.

தெருவின் வெறுமையைக் கலைத்துக் கொண்டு ஒரு சைக்கிள் அவசர அவசரமாகப் போயிற்று. 'என்ன அவசரம் அப்படி?' என்பது போல் சைக்கிள் போகிற திசையில் பார்த்தார். எதிரே விறகுச் சுள்ளிகளைக் கைக்குள் நெஞ்சோடு அணைத்துப் பிடித்தபடி வந்த அவருடைய மகனோடு மோதுவது போல், சடாரென்று சைக்கிளை வெட்டி, சரிந்துவிடுகிறாற்போல் ஒரு செருப்புக் காலைத் தரையில் தேய்த்து மூக்கைத் திருப்பி மறைந்தது அது. சைக்கிளின் வேகத்தைத் திரும்பிப் பார்த்தபடியே வருகிற மகனைப் பார்த்ததும் இவருக்கு என்னவோ செய்தது. பனிரெண்டு பதின்மூன்று வயதிருக்கும். எட்டுப் படிக்கிறான். அவனைத்தான் அவர் குற்றாலம் எக்ஸ்கர்ஷனுக்கு அனுப்ப முடியவில்லை.

மூன்று வாரங்களுக்கு முந்தி ஒரு நாள் காலையில் எட்டரை மணியிருக்கும் 'சாப்பிடலாமா?' என்று அடுக்களையைப் பார்த்துக் கேட்டதற்கு, "இவளுக்குத் தலைப்பிள்ளை விடணும். சின்னதைத் தூக்கிக்கிட்டு ஆஸ்பத்திரிக்குப் போகணும். ஆத்துத் தண்ணி பிடிக்கணும். குடத்தைப் போட்டுட்டு வந்திருக்கேன். இவ்வளவு சோலிக்கும் மத்தியில் நீங்களும் 'சாப்பிடலாமா, சாப்பிடலாமா' ன்னு சின்னப் பிள்ளையிலும் கேடாய்ப் பறந்தால் நான் என்ன பண்ண? எனக்கு என்ன ஏழு கையா இருக்கு?" என்ற படபடத்த பதில் கேட்டு அடங்கியிருந்த நேரம். அவருடைய பையன் தன்னுடைய புஸ்தகப் பையிலிருந்து ஒரு நோட் புத்தகத்தை எடுத்துக் கொண்டு இவர் பக்கம் வந்தான். கூப்பிட்டான். ஏறிட்டுப் பார்த்ததும், நோட்டைப் பிரித்து ஒரு சிவப்பு நிற நோட்டீஸை எடுத்துக் கொடுத்தான்.

"என்ன இது?"

"எக்ஸ்கர்ஸன் போறாங்க" இதற்குமேல் அவன் ஒன்றும் சொல்லவில்லை. பேசாமல் காம்பஸ் பாக்ஸை எடுத்து நோட்டில் வட்டம் போட்டான். அந்த வட்டத்திற்குள் ஒரு தாமரைப் பூவை வரைய ஆரம்பித்தான். ஒரே ஒரு வளைகோடு மாத்திரம் விழுந்திருந்தது வட்டத்துக்குள். அவர் அந்த நோட்டீஸைப் பார்த்தார். அது அவருக்கொன்றும் புதிதில்லை. கடந்த இரண்டு வருஷமாய் அவர் பார்த்ததுதான். அவன் படிக்கிற பள்ளிக்கூடத்தில், வருடந்தோறும் சுதந்திர தினத்தை ஒட்டி இப்படியொரு உல்லாசப் பிரயாணத்திற்கு ஏற்பாடு பண்ணுவதும், தொகைவாரியாய்ப் பெரிய ஊர்களில் ஆரம்பித்து ஒரு ரூபாய் என்று கடைசியில் 'லோக்கல் எக்ஸ்கர்ஷனி'ல் முடிகிற பட்டியலை அவருக்கும் பாராமலேகூடச் சொல்ல முடியும்தான். போன வருடமே தான் அவனை, அடுத்தவருடம் கண்டிப்பாய்க் குற்றாலம் அனுப்புவதாகச் சொல்லியிருந்தார். வைத்தியச் செலவு. கல்யாண வீட்டுச் செலவு, அது இது என்று இந்த வருடமும் வாதிப் படவில்லை. இதை நினைக்கையில் அவருக்கு வருத்தமாய் இருந்தது. ஒன்றும் ஓடவில்லை. கலங்கினாற் போல் அவனைப் பார்த்தார்.

"என்ன தாமரைப்பூ வரையுதியா?" என்று கேட்டார்.

" ஆமா" என்றபடியே பையன் அந்த எக்ஸ்கர்ஷன் அறிவிப்பு அச்சடித்திருந்த பேப்பரைப் 'பொன்னாப்ப்பூவாய்'க் கசங்காமல் வாங்கி எதிலிருந்து எடுத்தானோ அந்த நோட்டிற்குள்ளேயே வைத்துவிட்டு மறுபடியும் வரைய ஆரம்பித்தான்.

ஒரு வார்த்தைகூடக் குற்றாலம் போக வேண்டும் என்று சொல்ல வில்லை. அங்கே போகணும் என்று கேட்கவில்லை. இவருக்கு, அவன் அப்படியெல்லாம் கேட்கமாட்டானா. 'குற்றாலத்திற்குத்தான் போவேன்' என்று அழமாட்டானா என்றிருந்தது. தேறுதலும் சமாதானமுமாய்த் தன்னுடைய நிலையை விளக்குவதற்குக் கூட வாய்ப்புத் தராத அவனுடைய மௌனம் ரொம்பக் கனத்தது. அவர் எதையோ சொல்லப் போகையில்...அவன் 'தாமரைப் பூ நல்லாருக்காப்பா?' என்று நோட்டை உயர்த்தி நீட்டினான். "அங்கே என்ன ஊரிலேயில்லாத கதை பேசி ஆகுதோ, தெரியலையே. என்னமோ ரயிலுக்குப் போகிற மாதிரி. சாப்பிடணும், சாப்பிடணும்னு அடிச்சுக்கிட்டேனே அப்பதை" அடுப்படியிலிருந்து குரல் வந்தது.

"அம்மா சாப்பிடக் கூப்பிடுதா" அவன் குனிந்தபடியே சொல்லிக் கொண்டு காம்பஸ் டப்பாவை மூடினான்.

"விறகைக் கொண்டுபோய் அடுப்படிக்குள்ளேயே போட்டிரு. மழை வரும் போலுக்கு"... எதையாவது சொல்ல வேண்டுமே என்பதற்காக அவனிடம் சொல்லியபடி அவன் பின்னால் வீட்டிற்குள் போனார். இங்கேயிருந்து அடுப்படி வரை ஒரு நடை. வீட்டிற்குள் ஒரே இருட்டு. குழம்பு கொதிக்கிற காட்டமான வாடையும். காப்பிக்குக் கருப்பட்டி கொதிக்கிற வாடையும் ஒரே சமயத்தில் வந்து கொண்டிருந்தன. இப்போதுதான் விறகு வாங்கப் போனவன் ஏதோ சில்லறையை எண்ணிப் பார்த்தபடி வெளியே மறுபடியும் போனான்.

தொட்டிலில் குழந்தை சிணுங்கியது. இவர் போனார்.

"வார பாதையில் அப்படியே லைட்டைப் போட்டுட்டு வாங்க. ஐப்பசி கார்த்திகை மழை இப்போதான் அசைச்சுப் போற மாதிரி ஒரேயடியா இருட்டிக் கிடக்கு...அவனை எங்கே, பெரியவனை? சீயக்காய்ப் பொட்டணம் வாங்கிட்டு வான்னு அனுப்பினேன். போயே போய் தொலைஞ்சுட்டான் போலுக்கு. சின்னது தொட்டில்ல கிடந்துக்கிட்டு சுரு சுருன்னு சிணுங்கினால் இழுத்து விடுகிறது யாருன்னு தெரியலை...

இந்தச் சத்தத்தையெல்லாம் கவனிக்காமல், அவர் தொட்டிலை இழுத்துவிட்டார். அவன் இப்படி நிலையில்லாமல் வேலை செய்கிறதையும் அவனுக்கு ஒரு சந்தோஷங்கிற விதத்தில் அவன் உள்ளூர விரும்புகிற குற்றாலத்திற்கு இந்தத் தடவையும் அனுப்ப முடியாமற் போனதையும் நினைத்து ரொம்ப வருந்தினார். இங்கேயே சாரலும் காற்றுமாய் இப்படி இருக்கையில், குற்றாலத்தில் அருவியில் தண்ணீர் என்னமாய் விழும் என்று நினைக்கையில், தானேகூட ஒரு தடவை குற்றாலம் போக வேண்டும் போலிருந்தது. ``அது என்ன சத்தம்? மழையா விழுது? கொடியிலே ஈரத்துணியெல்லாம் காயப்போட்டிருந்தேனே. எல்லாத்தையும் விட்டுக்குள்ளே அள்ளிக் கொண்டாந்து போட்டா என்ன? இதையெல்லாம் சோற்றுப் பானைக்கு முன்னால நிற்கிற மனுஷி சொல்லிக் கிட்டா இருக்கணும்?

கொடியில் கிடந்த ஈரத் துணிகளையெல்லாம் கொண்டு வந்து வீட்டிற்குள்ளேயும், தார்சாவிலுமாய்ப் போடுகையில் சுவரோரமாய் ஒண்டிக் கூடிய மட்டும் நனையாமல், கடையிலிருந்து அவருடைய பையன் வந்து கொண்டிருந்தான். மழை நன்றாக வலுத்துவிட்டது. வடக்கிற்கும் தெற்கிற்குமாய்ச் சரிந்து சடசடவென்று கனத்துப் பெய்ய ஆரம்பித்தது. ஓட்டில் மழை விழுந்து இலேசான மணம் கிளம்பியது. நனைய நனைய ஓடுநிரை உறிஞ்சியது. பிறகு குளிர்ந்து துளிர்த்தது. எப்போதோ வீசிய ஒரு பழைய வட்ட டால்டா டப்பாவின் மேல் தண்ணீர் விழுந்து இனிய சப்தங்களை உண்டாக்கியது. வாசலை ஒட்டிச் சொட்டுச் சொட்டாய் ஓட்டிலிருந்து நீர் குதித்து, அப்புறம் மழையின் வேகம் கூடக்கூடக் கம்பியாய்க் கொட்டியது.

``சதசதன்னு ஈரத்தை மிதிச்சிட்டு விட்டுக்கும் வாசலுக்கும்`` நடமாடி நாசம் பண்ணுதீய. ஒரு பழைய சாக்கை எடுத்துப்போடச் சொல்லுங்க அவனை. என்னமோ சுதந்திர தினம் கொடியேத்துன்னு பெரியவளும், நடுவுள்ளதும் பள்ளிக்கூடத்துக்குப் போய்த் தொலைஞ்சிருக்கு. குடையை எடுத்துக்கிட்டுப் போய் அதைக்கூட்டிக்கிட்டு வாங்க. நனைஞ்சுட்டு வந்து. அப்புறம் காய்ச்சல், மண்டை இடின்னு என்பாவம் பற்றப் போகுது.

பரண்மேல் ஏறிக் கிழிசல் சாக்கை எடுத்து, அவர் வாசலில் போடுவதற்குள், குடைகளை எடுத்துக்கொண்டு பையன் பள்ளிக்கூடம் போய்விட்டான். இவன் ஏனிப்படி இந்த வயதில் எல்லாவற்றிற்கும் நான் நான் என்று நிற்கிறான்? மாட்டேன், முடியாது என்று ஏன் அவனுக்குச் சொல்லத் தெரியவில்லை... இவருக்கு அவன் மேல் அன்பும் இரக்கமும் மிகுந்தது. மனதே கம்மிப்போய், ஏதோ ஒரு துக்கம் நிகழ்ந்து போனதுபோல் கனித்தது. இருக்க முடியவில்லை. வாசலுக்கு வந்து மறுபடியும் மழையையே பார்த்துக் கொண்டிருந்தார்.

தார்சா ஓரத்திலெல்லாம் 'ஸ்ப்ரே' பண்ணியது போல், சேலைக்கரையாய் மழைத்தண்ணீர் தெறித்திருந்தது. வெள்ளை வெளேரென்று ஒரு பல்லி அசையாமல் கீழ்ச்சுவரில் ஒட்டிக் கொண்டிருந்தது. தரையில் தண்ணீர் கொப்புளமிட்டு ஓட ஆரம்பித்திருந்தது.ஒரு வாரியல் குச்சி நேரே ஒரு படகை போல் மிதந்துபோய் அப்புறம் சற்றுத் திரும்பி அரைவட்டமடித்து அசையாமல் நின்றது. ஒரு காகம் எங்கிருந்தோ கரைந்தது. ஓட்டு மேலேயோ, எதிர்வீட்டு ஏரியல் கம்பியிலோ, அல்லது திடுதிடுவென்று சத்தம் கேட்கும்படி விழுகிற அந்த வடிகால் குழாயிலோ உட்கார்ந்து அது இறகைச் சிலுப்பிக் கொண்டிருக்கலாம்.

குழந்தைகள் வருகிற சத்தம் கேட்கிறது. வெளிறிப்போன சுத்தமான சின்னஞ்சிறு பாதங்களால் விளையாட்டாக, எதிர்த்து ஓடி வருகிற தண்ணீரைத் ``திலாவி`` நடக்கையில் மழைத் தண்ணீர் ஒரு கண்ணாடிப் பாளமாய்ச் சுருண்டு விழுவது அழகாயிருந்தது. பெரிய பெண் குடைக்கம்பி முனைகளிலிருந்து உதிர்கிற சொட்டுக்களை ஒரு உள்ளங்கையில் ஏந்திச் சிரித்தபடி வருகிறது. குடையைப் பிடித்திருக்கிற கையால் தம்பூர் மீட்டுவதுபோல், குடையை மடக்கிப் பொருத்துவதற்கான கம்பி வளையை டொக்டொக்கென்று அழுத்தி விடுத்தது. இப்போதும் சிரிப்புத் தான்.

வந்ததும், குடைகளை வாங்கி விரித்த நிலையிலேயே கறுப்புக் காளான்களாகச் சுவரை ஒட்டிச் சாத்திவிட்டு..

``அவனை எங்கே காணோம்? என்றார்.

``அண்ணன் தெருவாசல்லே நிற்காம்ப்பா. எதிர்த்த வீட்டுத் தட்டோடியிலேருந்து திடு திடுன்னு தண்ணி விழுதுல்லாப்பா. அதைப் பார்த்துக் கிட்டிருக்கான். இவ்ளோ உசரத்திலேருந்து ரொம்பத் தண்ணீர் விழுதுப்பா`` என்று கைகளைத் தூக்கியும், வாயைக் குவித்தும் அபிநய பூர்வமாய்ச் சொல்லியது.

``என்னது? மழைத்தண்ணீ விழுகிறதை வேடிக்கை பார்த்துக்கிட்டு நிற்கானா? வேடிக்கை என்ன வேண்டிக்கிடக்கு? நாலுகுடம் தண்ணியைப் பிடித்து வைத்தாலாவது, நாளையும் பின்னேயும் சோறு பொங்கிறதுக்கு ஆகும். ஆத்துத் தண்ணிக்குக் காத்துக்கிடக்கிற அலப்பறையாவது மிஞ்சும்.அவனைக் கூப்பிட்டு, குடையைக் கையில் கொடுத்துத் தண்ணி பிடிக்கச் சொல்லக் கூடாதா?

உள்ளே போய் இரண்டு செப்புப் பானைகளை இரண்டு கைகளில் தூக்கிக்கொண்டு, வந்தார். கைக்கு ஒன்றாய் தூக்கிக்கொண்டு தோளோடு கழுத்தைச் சாய்த்துக் குடையை அணைத்து முதுகில் ஏந்தி, வாசல் பக்கம் போனார். நடையில் பானைகளை இறக்கி வைத்தபடி, தண்ணீர் விழுகிற பக்கம் பார்த்தார்.

தண்ணீர் நிறையத்தான் விழுந்து கொண்டிருந்தது. எதிர்த்த வீட்டு மச்சுத் 'தட்டோட்டி' வடிகாலிலிருந்து தண்ணீர் இரண்டு உள்ளங்கை அகலத்திற்குப் பட்டையாய், பாதித்தெருவில் விழுகிற அளவுக்கு வேகமாய் வளைந்து விழுந்து கொண்டிருந்தது. அவருடைய பையன் அதில் கண்களை மூடி, இரண்டு கைகளையும் நெஞ்சோடு பின்னிக்கொண்டு குளித்துக் கொண்டிருந்தான். வாய்மாத்திரம் அவ்வப்போது சிரித்துக்கொண்டும், தண்ணீரை வாங்கி வாங்கிக் கொப்பளித்துக் கொண்டுமிருந்தது. 'அருவி விழுது அருவி விழுது' என்ற வார்த்தைகளையே ஒரு ராகம்போல் பாடிக்கொண்டு, கால்களை மாற்றி மாற்றி உற்சாகமாய் அவன் ஆடிக்கொண்டிருந்தான். உச்சித் தலையில் தண்ணீர் விழுந்து, முடியெல்லாம் நெற்றியை மறைத்துக் கிடந்தது. சுவர்ப் பக்கமாய்த் திரும்பி முதுகைக் காட்டிக் குளித்தான். 'ஹோய்' என்ற கைகளை உயர்த்திச் சத்தம் போட்டு, மேலே பார்த்துத் தண்ணீருக்கு எதிரே முகத்தைக் காட்டினான். மூடின கண்களைத் திறக்காமலேயே, குத்துக்காலிட்டு உட்கார்ந்து தொண்டை நடுங்குவதுபோல், 'பிள்ளை பிடிக்க வருகிறவன்' மாதிரிச் சத்தம் கொடுத்துக் கூச்சல் போட்டான். கைகளைச் சேர்த்துத் தரையில் பதித்துக்கொண்டு, கையிலும் தலையிலும் மாறி மாறித் தண்ணீர் விழுகிற வகையில் முன்னும் பின்னும் சாய்ந்து ஆடினான். கீழே இருந்து அங்குலம் அங்குலமாகக் கையை உயர்த்தித் தண்ணீரை மேல் நோக்கித் தள்ளுகிறபோது தரைச்சக்கரம் போல் உள்ளங்கைகளிலிருந்து பூப்பூவாய்ச் சிதறுகிற தண்ணீரை ரசித்தான்.

அவர் பார்த்துக்கொண்டே நின்றார். உள்ளுக்குள் மௌனமாய் மனதால் அழுதார். செப்புப் பானைகளையும் குடைகளையும் தூக்கிக்கொண்டு, நனைய நனைய வீட்டைப் பார்க்கப் போனார்.

``கையிலே செப்புப்பானையும் குடையுமா திரும்பி வந்தாச்சே என்ன விஷயம்? அவனைக் காணோமா? அந்தக் கரிமுடிவான் இந்த மழையோட மழையாய் எங்கே போய்த் தொலைஞ்சான்?``

இரண்டு வினாடி பதிலே சொல்லாமல் அவர் அவளையே பார்த்துக்கொண்டிருந்து விட்டு, பின்பு தரையில் சாய்த்து வைத்திருந்த குடைக்கம்பி முனைகளில் அழியாய்க் கசிந்து, நூலாய்த் தண்ணீர் நெளிந்து பெருகுவதைப் பார்த்தபடியே கரகரத்துச் சொன்னார். ``குற்றாலத்துக்கு

---

வண்ணதாசன்.

திருநெல்வேலியில் பிறந்த வண்ணதாசனின் இயற்பெயர் கல்யாண சுந்தரம், கல்யாண்ஜி என்ற பெயரில் கவிதைகள் எழுதியுள்ளார். எழுத்தாளர் தி.க. சிதம்பரம் மகனான வண்ணதாசனின் படைப்புகளான சமவெளி, தோட்டத்திற்கு வெளியிலும் சில பூக்கள், துணிவு, நடுகை, உயரப் பறத்தல், கலைக்க முடியாத ஒப்பனைகள் போன்றவை இவருடைய பிற சிறுகதைத் தொகுப்புகளாகும்.

# தப்புக்கணக்கு

- மாலன்

தாத்தா எப்போது வருவார் என்று காத்துக் கொண்டிருந்தாள் ஜனனி.

தாத்தாவிடம் கேட்பதற்கு அவளிடம் ஒரு கேள்வி இருந்தது. முக்கியமான கேள்வி. கேட்டே ஆகவேண்டிய கேள்வி. தன்னுடைய கணக்கு சரியா, தவறா?

ஜனனி மீண்டும் ஒருமுறை அந்தப் பரீட்சை பேப்பரை எடுத்துப் பார்த்தாள். கணக்கின் குறுக்கே ஒரு சிவப்புக்கோடு போட்டிருந்தது. மார்ஜினில் ஒரு பெரிய பூஜ்யம் போட்டிருந்தது. ஜீரோ போட்டால் தப்பு என்று ஜனனியின் நான்கு வயது மூளைக்குத் தெரியும். ஆனால் ஏழு இரண்டு இரண்டு, பதினாலு எப்படித் தப்பு? அதுதான் அவளுக்குப் புரியவில்லை.

ஜனனிக்குப் போன மாதம்தான் நான்கு வயது முடிந்தது. நான்கு வயதுக்கு நல்ல மூளை என்றுதான் சொல்ல வேண்டும். அரை நிமிஷம் சும்மாயிராது ஏதாவது விஷமம் செய்து கொண்டிருக்கும் கை. எதையாவது கேட்டுக் கொண்டிருக்கும் வாய். கடல் ஏன் நீலம்? மரம் ஏன் பச்சை? ஜிகினா பேப்பர் எங்கிருந்து வருகிறது? மழையில் நனையும் மாட்டிற்கு சளி பிடிக்குமா? கம்ப்யூட்டருக்கு எப்படி எல்லாம் தெரியும்? கடவுள் என்பவர் கம்ப்யூட்டரா?

ஜனனியின் கேள்விகளுக்கு பதில் சொல்வது தேன் கூட்டில் கல் வீசுவது போல. ஒரு கேள்விக்குப் பதில் சொன்னால் அத்தோடு ஓயாது. சரம்சரமாய் கேள்வி கிளம்பும். அது எதையாவது ஆரம்பித்தால், கொஞ்சம் சும்மாயிரேம்மா என்பார் அப்பா. இப்படியெல்லாம் பேசக்கூடாதும்மா என்பார் அம்மா.

ஆனால் தாத்தா பதில் சொல்லுவார். சலித்துக் கொள்ளாமல் சொல்வார். சளைக்காமல் சொல்வார். அந்த நிமிடங்களில் அவரே குழந்தையாகிவிட்டது போன்ற குதூகலத்துடன் சொல்வார். கொஞ்சம் கொஞ்சமாகக் கேள்வி கேட்காமலே பதிலைக் கண்டுபிடிப்பது எப்படி என்று கற்றுக் கொடுத்தார். வித்தியாசமாக யோசி, விடை கிடைக்கும் என்று சொல்லித் தந்தார். வேறு ஒரு கோணத்தில் பார்த்தால் எல்லாம் எப்படி வித்தியாசமாகத் தெரியும் என்று கற்றுக் கொடுத்தார். கால்குலேட்டரில் 7-ஐ தட்டி தலைகீழாகப் பிடித்து L என்பார். 3-ஐத் தட்டி E என்பார். ஜீரோவை O என்பார் 1-யை ஒன்று என்பார்.

தாத்தாவைக் கேட்டால் தெரியும். அந்தக் கணக்கு எப்படித் தப்பு?

பரீட்சைப் பேப்பரைப் பார்த்ததும் தாத்தா படபடத்தார். ஜீரோவா, என்னடி இது? என்னடி கேட்டிருந்தாங்க? கொஸ்டின் பேப்பரைக் கொண்டா பார்க்கலாம். கேள்வித் தாளை வாங்கி உரக்கவே படித்தார்.

"ஒரு வாரத்திற்கு ஏழு நாட்கள்
இரண்டு வாரத்திற்கு எத்தனை நாட்கள்?"

ஜனனியின் விடைத்தாளைப் பிரித்துப் பார்த்தார். ஜனனி 7X2 என்று எழுதியிருந்தது.
கணக்கின் குறுக்கே டீச்சரின் சிவப்புக்கோடு. பக்கத்து மார்ஜினில் பெரியதாய் பூஜ்யம்.

"தப்பா தாத்தா? எப்படித் தப்பு?"

"அதான்டி எனக்கும் புரியலை?"

தாத்தா மறுநாள் ஆபீஸிற்கு லீவு போட்டார். ஜனனியுடன் பள்ளிக்கு வந்தார். கணக்கு டீச்சரைத் தனியே சந்தித்துக் கையோடு கொண்டு வந்திருந்த பரீட்சைத் தாளைப் பிரித்துக் காண்பித்தார்-

"இதிலே என்ன தப்பு மேடம்?"

டீச்சர் பேப்பரைக் கையில் வாங்காமல், கண்ணாலேயே படித்தாள்.

"ஓ! இதுவா?"

"இதில் என்ன தப்பு மேடம்?"

"தப்புதான்"

"அதான் எப்படி..."

டீச்சர் கையை உயர்த்திப் பேச்சை நிறுத்தினாள்.

"சொல்றேன். இதே கணக்கை கிளாஸ்ல ஒர்க் பண்ணி காண்பிச்சிருக்கோம்..."

"என்னென்னு?"

"ஒரு வாரத்திற்கு ஏழு நாட்கள். அப்படியானால் இரு வாரத்திற்கு 2X7=14 ."

"சரி.7X2=14 என்று குழந்தை எழுதினால் அது தப்பா?"

"தப்புதான். வகுப்பில் எப்படிச் சொல்லிக்கொடுத்திருக்கிறோமோ அப்படித்தான் எழுதணும். 2X7=14என்று சொல்லிக் கொடுத்திருக்கும்போது 7X2=14 என்று எழுதியது தவறுதான்."

"டீச்சர் இது அநியாயம்!" என்று இரைந்தார் தாத்தா.

"நான் பிரின்சிபல்கிட்ட புகார் செய்வேன்."

"ப்ளீஸ், டு இட்" என்றாள் டீச்சர் அலட்சியமாக

பிரின்சிபல் அணிந்து கொண்டிருந்த கண்ணாடியைக் கழற்றிவிட்டு கிட்டப் பார்வைக்கு அணிந்து கொள்ளும் கண்ணாடியை அணிந்து கொண்டு, கேள்வித்தாள், விடை எழுதின பேப்பர் இரண்டையும் மாறி மாறிப் பார்த்தார். தாத்தா சொன்னதை முழுவதும் காது கொடுத்துக் கேட்டார். "கொஞ்சம் இருங்க." விசாரிக்கிறேன் என்றார்.

ஜனனியின் கணக்கு டீச்சருக்கு அழைப்புப் போயிற்று. அழைப்பை எதிர்பார்த்திருந்தாளோ என்னவோ, டீச்சர் வகுப்புக் கணக்கு நோட்டுடன் வந்தாள்.

"என்னம்மா, இது?" என்றார் பிரின்சிபல்.

"சார், நாம் வகுப்பில் இந்தக் கணக்கைப் போட்டுக் காட்டியிருக்கிறோம்."

பிரின்சிபல் மேஜை மீது நோட்டை விரித்துப் போட்டாள் டீச்சர்,

"ஆனால் இந்த ஸ்டூடண்ட் அதைப் போலப் பரீட்சையில் எழுதவில்லை."

"அதனால் 7X2=14 என்பது தவறாகி விடுமா?" என்றார் தாத்தா ஆத்திரமாக.

"அப்படியில்லை சார். இது ஒரு மாணவர் வகுப்பில் எவ்வளவு கவனம் செலுத்துகிறார். என்பதைக் கண்டறிவதற்காகக் கொடுக்கப்பட்ட கணக்கு" என்றாள் டீச்சர்.

"ஐ ம் சாரி சார். உங்கள் பேத்தி வகுப்பில் போதுமான அளவு கவனம் செலுத்துவதில்லை என்பது இதிலிருந்து தெரிகிறது. நீங்கள் கொஞ்சம் கண்டித்து வையுங்கள்." என்றார் பிரின்சிபல்.

நாற்காலியை விருட்டென்று பின்னால் தள்ளிக் கொண்டு எழுந்தார் தாத்தா.

பள்ளிக் கல்வி அலுவலரைப் பார்க்க இரண்டுமணி நேரத்திற்கு மேல் காத்திருக்க வேண்டியிருந்தது. காரிடாரில் போட்டிருந்த ஒரு பெஞ்சில் அமர்ந்து கட்டுக்கட்டாக காகிதங்கள் கையெழுத்திற்காக அவரது அறைக்குள் போய் வந்து கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார் தாத்தா. வேலையெல்லாம் முடித்துவிட்டு வெளியே கிளம்பும் முன் உள்ளே அழைத்தார் அதிகாரி.

அவசரமாகப் போக வேண்டியிருக்கிறது. ஐந்துநிமிடத்தில், சொல்ல வேண்டியதைச் சொல்லி முடிங்க சார் என்றார் அவசரமாகச் சொல்ல ஆரம்பித்தார் தாத்தா. பாதியிலேயே இடைமறித்த அதிகாரி.

இந்த எல்.கே.ஜி., யூ.கே.ஜி யெல்லாம் எங்க ஆளுகைக்குள்ள வராது சார் என்றார்.

"அது இருக்கட்டும்சார். ஆனா இது அநியாயம்னு உங்களுக்குத்தோணலையா ?"

"எது ?"

"சரியான விடை எழுதினாலும் சைபர்போடறது ?"

"உங்க குழந்தை எழுதினது முற்றிலும் தப்புன்னு சொல்ல முடியாது. பார்ஷியலி கரெக்ட்".

தாத்தா அரை நிமிடம் யோசித்தார்.

"இது பார்ஷியலி கரெக்ட்னு எனக்கு நீங்க ஒரு கடிதம் எழுதித்தர முடியுமா ?"

"இதையெல்லாம் நாங்க எழுத்து மூலமாக கமிட் பண்ணிக்க முடியாது சார்".

"எதை ஏழு இரண்டு பதினாலுங்கறதையா ?"

அப்படியில்லை சார். முதல்ல இது அவுட் ஆப் மை ஜிரிஸ்டிக்ஷன். என் எல்லைக்கு அப்பாற்பட்ட விஷயம். இரண்டாவது. முடிவுகள் மாத்திரமல்ல, வழிகளும் சரியாய் இருக்கணும்னு காந்திஜியே சொல்லியிருக்கார் இல்லையா ?

மந்திரி வரை இந்தப் பிரச்சினையை எடுத்து செல்ல வேண்டுமா என்று தாத்தாவால் தீர்மானிக்க முடியவில்லை. அவ்வளவு உயர்மட்டங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு முன்னால், ஜனனியின் அப்பாவுடனும், அம்மாவுடனும் பேசிவிடுவது நல்லது என்று தோன்றியது. இவ்வளவு தூரம் போராடியதற்கே, அவர்கள் என்னைக் கேட்காமல் ஏன் செய்தாய் என்று கோபப்படலாம். இதனுடைய நல்லது கெட்டது எங்கள் குழந்தை மீதுதானே விடியும் என்று சண்டைக்கு வரலாம். ஆனால் குழந்தைக்கு அப்பட்டமாக ஒரு அநியாயம் நடக்கும்போது. அதைப் பார்த்துக் கொண்டு ஒதுங்கிப் போகிற அளவிற்கு இன்னும் உணர்ச்சிகள் மழுங்கிப் போய்விடவில்லை. எனவே ராத்திரி சாப்பாட்டு மேஜையில் விஷயத்தை மெல்லப் போட்டு உடைத்தார்.

"அவ டீச்சர் சொல்றது தப்பாயிருக்கலாம்பா. ஆனா அவங்க சொல்லிக் கொடுத்த மாதிரியே பரீட்சையிலே எழுதறதுக்கு இவளுக்கு என்ன கேடு ?" என்றார் அப்பா.

"சரி, எழுதல்ல. அது தப்பா ?"

"ஏன் அவ எழுதல்ல ?" என்றாள் அம்மா.

"அவளையே கூப்பிட்டு கேளு".

"ஜனனி", என்று அதட்டலாக அழைத்தார் அப்பா.

"யெஸ் டாடி" என்று ஓடி வந்தது குழந்தை

"ஒரு வாரத்திற்கு ஏழு நாள் இரண்டு வாரத்திற்கு எத்தனை நாள் ?"

டீச்சர் கொடுத்த கணக்கை அப்பா ஏன் கேட்கிறார் என்று புரியாது திகைத்த ஜனனி "பதினாலு" என்றது சற்றுத் தயங்கி.

"எப்படி ?"

"ஏழு இண்ட்டு இரண்டு இஸ் ஈக்வல்டு பதினாலு".

"ஏழு இண்ட்டு இரண்டு எப்படி ? ஒரு வாரத்திற்கு ஏழு நாள் அப்போ இரண்டு இண்ட்டு ஏழுதானே ?"

"இல்லே தாத்தா. ஒரு வாரத்தில ஒரு சண்டே, ஒரு மண்டே.. இப்படி ஏழு நாள்.

இரண்டு வாரத்திலே, இரண்டு சண்டே, இரண்டு மண்டே.." என்று விரல் விட்டது ஜனனி.

"ஸோ, ஏழு நாள் ஒவ்வொன்னும் இரண்டு தடவை அதான் ஏழு இண்ட்டு இரண்டு".

கிரேட் என்று கூவினார் தாத்தா.

"இது வித்தியாசமான சிந்தனை. மொத்த கிளாஸும் டீச்சர் போட்டுக் கொடுத்த பாதையில குதிரைக்கு பட்டை கட்டின மாதிரிபோறச்சே, மூளையை உபயோகிச்சு நீ கணக்குப் போட்டிருக்க பாரு.இது கிரியேட்டிவிட்டி இது புத்திசாலித் தனம என்று உற்சாகத்தில் பூரித்தார் தாத்தா.

சந்தோஷப்படாதீங்கப்பா. இது கவலைப்பட வேண்டிய விஷயம்.

இது பெண் குழந்தை. ஞாபகம் வைச்சுக்குங்க. சொல்லிக் கொடுத்த மாதிரியில்லாம வேறு மாதிரி யோசிக்கிற குழந்தை. பின்னால பெரியவளானா நிறைய கேள்வி கேப்பா. இதுநாள் வரைக்கும் நடைமுறையில இருக்கிற சம்பிரதாயங்கள். நம்பிக்கைகள் இதையெல்லாம் கேள்வி கேட்பாள். வித்தியாசமா சிந்திக்கிறதினாலேயே காயம் படுவா. ஊரோடு உலகத்தோட, ஒத்து வாழாம இருந்தா அவளுக்கும் அவஸ்தை, மற்றவர்களுக்கும் இம்சை".

"அதனால ?"

"ஏம், டீச்சர் எப்படிச் சொல்லிக் கொடுக்கிறாளோ அப்படியே கணக்குப் போடு. அதிகப் பிரசங்கித்தனமெல்லாம் பண்ணாதே" என்று சொல்லிக் கொண்டே எழுந்தார் அப்பா.

ஜனனியை வைத்த கண் வாங்காமல் அரை விநாடி பார்த்த தாத்தா, தாவி அவளை அணைத்துக் கொண்டார்.

அவர் இமையில் ஈரம் பளபளத்தது.

---

மாலன்

இயற்பெயர் ஏ.நாராயணன், சிறந்த எழுத்தாளர் மற்றும் பத்திரிக்கையாளர். குமுதம், குங்குமம், இந்தியா டுடே(தமிழ்), தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற பத்திரிக்கைகளில் ஆசிரியராக பணி செய்துள்ளார். சன் செய்தி தொலைக்காட்சியின் இயக்குனராக பணி செய்தார்.

கல்லிற்கு கீழும் பூக்கள், மாறுதல் வரும் என்பன இவரது சிறுகதைத் தொகுப்புகள் ஆகும்.

# நெல் சோறு

**-இமையம்**

பள்ளிக்கூடத்தில் மணி அடித்த சிறிது நேரத்திற்கெல்லாம் பையன்கள் மாடு போடுகிற புளியமரத்தின் கீழ் கூடிவிட்டார்கள். இன்னும் யாராவது வருகிறார்களா என்று பார்த்தார்கள். சாயங்கால நேரத்தில் ஊர்ப் பிள்ளைகள் எல்லாம் கூடும் இடத்தில் இன்று வெறும் ஐந்து பேர் மட்டுந்தான் கூடியிருந்தார்கள். வழக்கமாக வருகிறவர்கள்கூட வரவில்லை. விளையாடிக்கொண்டிருக்கும் போது இடையில் யாராவது வந்தால் ஆட்டத்தை முதலிலிருந்தே தொடங்க வேண்டுமே என்பதற்காகச் சிறிது நேரம் காத்திருந்தனர். யாருமே வராததால் அலுத்துக் கொண்டனர். பிறகு, வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்று ஐந்து பேர் விளையாடக்கூடிய விளையாட்டு என்ன என்பது பற்றி யோசித்தனர். ஐந்து பேரும் ஐந்து விளையாட்டின் பெயரைச் சொல்லவும் குழப்பம் உண்டாயிற்று. உப்பு எடுத்தல், சரணம்,சீக்கல்,சுகபாரி, புளியமுத்து என்று பேச்சு பெரியவர்கள் நடத்தும் பஞ்சாயத்து மாதிரி ஒரு முடிவும் இன்றி இழுத்துக்கொண்டே போயிற்று. கடைசியில், பூம்போட்டுப் பார்த்து முடிவுசெய்யலாம் என்பதை மனவாங்கல் இல்லாமல் எல்லாரும் ஏற்றுக்கொண்டனர். இன்ன விளையாட்டை விளையாடுவது என்று முடிவானதும் உத்தி பிரிப்பது,உத்தியை எங்கே வைப்பது, செல்லக் கொடுப்பது யார், உத்தியாள் யார் என்று பேச்சை வளர்த்துக் கொண்டே இருந்தார்கள்.

"பொன்னு போவப்போவுது. வயிறுதுப்பிவுடப்போறவங்க, செய்முறை செய்யப்போறவங்க போவலாம்" என்று ஊருக்கே கேட்கிற மாதிரி அடித்தொண்டையில் ஊர்மணியக்காரன் தெருவில் தவிஞ்சிக்கொண்டு போனதைப் பார்த்ததும், கண்ணன் "ஊர்மணியக்காரனோடு போகிறேன்" என்று சொல்லிவிட்டு மற்றவர்களை வருகிறீர்களா என்று கூடக் கேட்காமல், யாரையும் எதிர்பார்க்காமல் ஓட்டம் பிடித்தான் மற்ற நான்கு பேரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். பிறகு, கண்ணனைத் தொடர்ந்து ஓட ஆரம்பித்தனர்.

ஊர்மணியக்காரன் ஒரு தெரு விடாமல் தவிஞ்சிக்கொண்டே போனான். அவனை மாதிரியே கத்தும் பிள்ளைகள், அவனைத் துரத்திக்கொண்டு வரும்பிள்ளைகள், குரைக்கும் நாய்கள் என்று எதைப் பற்றியும் அவன் அக்கறைப்பட்டதாகத் தெரியவில்லை. பார்ப்பதற்கு பித்தன் மாதிரி இருந்தான். நான்கு தெருவிலும் தவிஞ்சிவிட்டுக் கல்யாண வீட்டை நோக்கி அவன் நடக்க ஆரம்பித்ததும் பையன்களுக்கு என்ன செய்வது என்று தெரியாமல், அப்படியே நின்றுவிட்டனர். கருப்பையா விளையாடப் போகலாம் என்று சொன்னான். ஆனால், கண்ணன் பிடிவாதமாகக் கல்யாண வீட்டுக்குத் தான் போக வேண்டும் என்று சொன்னான். ஆனால், கண்ணன் பிடிவாதமாகக் கல்யாண வீட்டுக்குப் போனால் கல்யாணப் பெண்ணைப் பார்க்கலாம். ஊர்வலத்தில் கூடவே போகலாம். பெண்ணழைப்புக்கு வரும் வண்டியில் ஏறிக்குதிக்கலாம். பந்திபோடும்போது பந்தியில் உட்கார்ந்து இலைச் சாப்பாடு சாப்பிடலாம். நெல் அரிசிச் சோறு சாப்பிட நன்றாக இருக்கும். இரண்டு கையாலும் குத்துக்குத்தாகச் சோற்றை அள்ளி வைப்பார்கள். பறங்கி, பூசணிக்காய் போட்டுத்தடதடவென்று வைத்திருக்கும் குழம்பை வேண்டும் அளவுக்கு ஊற்றுவார்கள். அதோடு வாழை, கத்திரிக்காய்ப் பொரியலும் இருக்கும் என்று சொன்ன கண்ணன் "வந்தா வாங்க, வராட்டிப் போங்க" என்று சொல்லிவிட்டு ஓட ஆரம்பித்தான். மற்றவர்களுக்கு மட்டும் நெல் சோற்றின் மீது, அதிலும் கல்யாணச் சாப்பாடு சாப்பிட ஆசை இல்லையா? ஒரு நொடிதான் தாமதித்தனர். பிறகு, ஒரே ஓட்டமாக ஓட ஆரம்பித்தனர்.

கல்யாணப் பந்தலுக்குப் பையன்கள் வந்து சேர்ந்தபோது பந்தலில் கூட்டமே இல்லை. ஒன்றிரண்டு பேர்தான் வீட்டுக்குள் போவது வெளியே வருவதுமாக இருந்தனர். வீட்டுக்குப் பின்புறம்சமைத்துக்கொண்டிருந்த இடத்தில்தான் ஏழெட்டு பேர் இருந்தனர். பந்தலில் கூட்டம் இல்லாதது பையன்களுக்குப் பெருத்த ஏமாற்றமாக இருந்தது. வேகமாக ஓடிவந்துவிட்டார்களே ஒழிய, அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தனர். சோறு சமைக்கிற இடத்திற்குப் போகலாம் ஆனால், நெருப்புப் புழங்கிற இடத்திற்கு ஏன் வந்தீர்கள் என்று கேட்டு அடித்தால்? கல்யாணப் பெண் எங்கே இருக்கிறாள்? அவள் இருக்கும் இடம் தெரிந்தாலாவது அவள் கட்டியிருக்கும் சேலை,போட்டிருக்கும் சட்டை, நகை சீவியிருக்கும் விதம் என்று ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டிருக்கலாம். கல்யாண வீடாகத் தெரியவில்லையே என்று சலித்துக்கொண்டனர். எவ்வளவு நேரம்தான் வெறுமனே பந்தலுக்குள் சுற்றி வந்துகொண்டிருக்க முடியும்? புளியமரத்தடிக்குப்போய் விளையாடிவிட்டு பந்தி போடுகிற நேரத்திற்கு வரலாம் என்று கருப்பையா சொன்னதை. ஒருவர்கூட ஏற்றுக்கொள்ளவில்லை. தூரமாகப் போய்விட்டால் பந்தி ஆரம்பிப்பது எப்படித் தெரியும்? அதனால் பந்தலுக்கு முன்னாலேயே விளையாடலாம் என்று கண்ணன் சொன்னதை எல்லாருமே ஏற்றுக்கொண்டனர்.

என்ன விளையாட்டு விளையாடுவது? ஆளுக்கொன்றாகச் சொன்னார்கள். பழைய குழப்பம் மீண்டும் வந்துவிட்டது. ஒருவருக்கொருவர் ஏழத்துஏழத்துப் பேசிக்கொண்டனர். கடைசியில் தொடுகிற விளையாட்டு என்று முடிவாகி, விளையாட ஆரம்பித்தனர். ஒரு நிமிடம் தான் இருக்கும். மாப்பிள்ளை வீட்டார் வந்து விட்டார்கள் என்று ஊர்மணியக்காரன் நடுத்தெருவிலிருந்தே கத்திக் கொண்டு வந்தான். சோறு சமைத்துக்கொண்டிருந்த இடத்தில் இருந்தவர்களில் மூன்று நான்கு பேர் மாரியம்மன் கோவில் பக்கமாக ஓட ஆரம்பித்ததும், பையன்களுக்கு விளையாட்டில் சுவாரசியம் இற்றுப்போயிற்று. உற்சாகமாகக் கோவிலுக்குப் போட்டி போட்டுக்கொண்டு ஓட ஆரம்பித்தனர்.

கோவிலில் ஒரே கூட்டமாக இருந்தது. எங்கிருந்துதான் இவ்வளவு கூட்டம் வந்து சேர்ந்ததோ! கோவில் பூசாரி மாப்பிள்ளை வீட்டார்களைத் தவிர, மற்றவர்களையெல்லாம் வெளியே போகச் சொல்லிக் கத்தினான். பிள்ளைகளைச் சுத்தமாக அவன் உள்ளே விடவில்லை. பரிசப்புடவை, முகூர்த்தக் காய், மாங்கலியத் தேங்காய் என்று மாப்பிள்ளை வீட்டார்கள் கொண்டுவந்திருந்த ஏழு சீர்களையும் சாமிக்கு முன் வைத்துப் படைக்க ஆரம்பித்தான் பூசாரி. கோவிலுக்குள் பையன்களை விடாததால் பூசாரியைப் பையன்கள் தவளை என்று சொல்லிக்கேலி செய்தனர். அவனுடைய வயிறு தம்ருமேளம் மாதிரி இருப்பதாகச் சொல்லிக் கிண்டலடித்தனர்.

கோவிலில் படைத்து முடிந்ததும் மாப்பிள்ளை வீட்டார் தாங்கள் கொண்டுவந்திருந்த சீர்களை ஆளுக்கு ஒன்றாக எடுத்துக் கொண்டு ஊர்வலமாக நடக்க ஆரம்பித்தார்கள். அவர்களுக்கு முன்னால் தப்பட்டை மேளக்காரர்கள். அவர்கள் வேண்டுமென்றே மெதுவாக நடப்பதாகப் பையன்கள் சந்தேகப்பட்டார்கள். பெரியவர்களே இப்படித்தான் என்று அலுத்துக்கொண்டார்கள். சீர்வரிசை ஊர்வலம் பந்தலுக்குள் வந்ததும்,பந்தலுக்குள் பரபரப்பும், கூட்டமும் கூடிற்று. பெண்

வீட்டுப் பங்காளிகள் பஞ்சாயத்தார்கள், கொத்துக்காரர்கள் என்று பந்தல் நிறைந்துவிட்டது. பையன்களுக்கு நிற்க இடமில்லை. ஆனால் அது அவர்களுக்குப் பெரிய விஷயமாகப் படவில்லை, பெண் அழைக்க வந்தவர்கள் எல்லோருமே கிழவர்களாக, கிழவிகளாக இருந்ததுதான் பெரிய விஷயமாகப் பட்டது. அதனால் மாப்பிள்ளை வீட்டார்களைக் குறைசொல்லிப்பேச ஆரம்பித்தனர். மாப்பிள்ளையும் கிழவனாக இருப்பானோ என்று சந்தேகப்பட்டதோடு மாப்பிள்ளையின் ஊரை மட்டம்தட்ட ஆரம்பித்தனர். சற்று நேரத்தில் எல்லாருமே வீட்டுக்குள் போய்விட்டதால் பையன்களுக்குச் சப்பென்றாகிவிட்டது. இவர்கள் செய்வதற்குக் கல்யாண வீட்டில் என்ன காரியம் இருக்கும்? பந்தலில் கட்டியிருந்த மாவிலை, தென்னந்தோரணங்களைக் கிழித்தெடுத்து ஊதுவான், பீப்பாள் என்று செய்ய ஆரம்பித்தனர். வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்த உள்ளூர் மேற்குத் தெரு கொத்துக்காரக் கிழவன்
''யான்டா அதெப் புடிச்சிக் கிழிக்கிறீங்க? போங்கடா வெளியே. பசபசன்னு இந்தப் பயலுவோ எதுக்கு அலையுறானுவோ'' என்று சத்தம் போடவும், அடுத்து வந்த மற்றொரு கிழவனும் சேர்ந்துகொண்டு திட்ட ஆரம்பித்தால், பையன்கள் அரைமனதுடன் முக்கிக்கொண்டும் முனகிக்கொண்டும் வெளியே வந்தனர். என்ன செய்வது? விளையாடலாமா? விளையாட்டில் ஒருவருக்குமே ஈடுபாடில்லை.. பந்தியை எப்போதுதான் ஆரம்பித்துத் தொலைப்பார்களோ!

கிழக்கு மேற்கிலிருந்த தெருவில் வடக்கு பார்த்திருந்தது கல்யாண வீடு. அதற்கு நேரெதிர் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு கல்யாணப் பெண்ணினுடைய அத்தை கோசலை, தன்னுடைய மகனுக்கு ஏன் பெண் தரவில்லை என்று கேட்டு தன்னுடைய அண்ணன் பெருமாளையும், அவனுடைய பெண்டாட்டியையும் குறைசொல்லி வாய்க்குவந்தபடியெல்லாம் பேசிக்கொண்டிருந்தாள். கொஞ்ச நேரத்திலேயே அவளைச் சுற்றி ஐந்தாறு பெண்கள் கூடி விட்டார்கள். தன்னுடைய அண்ணன் மீது எந்தக் குறையுமில்லை. எல்லாம் தன்னுடைய அண்ணியின் சூழ்ச்சி, என்று சொல்லி அவளைத்திட்டிக்கொண்டிருந்தாள். ''நல்ல காரியம்நடக்கும்போது பொறந்த பொண்ணு கண்ணுத் தண்ணிவிடக்கூடாது'' என்று சொல்லி சமாதானம் செய்ய முயன்ற பெண்ணிடம் கோசலை லக்கென்று சண்டைக்குப் பாய்ந்தாள். ''என்னா நோனியில பொறந்த பொண்ணு?'' என்று எதிர்க்கேள்வி கேட்டாள். முன்பைவிட இப்போது அவளுடைய குரல் தடித்திருந்தது. அவளைச்சுற்றிப் பெண்கள் சேரச்சேர அவளுக்குக் கூடுதலான தெம்பு வந்தது மாதிரி கத்திக்கொண்டிருந்தாள். பெருமாளோ அவனுடைய பெண்டாட்டியோ வந்து தன்னைச் சமாதானம் செய்ய வேண்டும் என்பது மாதிரி இருந்தது. அவளுடைய பேச்சு. அவள் நினைத்தது நடக்காததால் முழுந்த மட்டும் குரலை உயர்த்திப் பேச ஆரம்பித்தாள். எதிரிலிருந்த பெண்களிடத்தில் எரிபிரியென்று விழுந்தாள். சத்தம் கேட்டுத் தெருவில் நின்றுகொண்டிருந்த பையன்கள் கோசலையிடம் வந்தார்கள். அவள் அழுவது, புலம்புவது, திட்டுவது, வாசாங்கு விடுவதெல்லாம் எதற்கு என்று தெரியாததால் குழம்பிப்போனாலும், நேரத்தைப் போக்க அவளைப் பார்க்க ஆரம்பித்தனர். ஆனால், சீக்கிரமே சலிப்படைந்துவிட்டனர்.

''பொண்ணு அயக்க வந்திருக்கிற எல்லாரயும் இட்டா. ஒரு ஆள் தவறப்படாது'' என்று சொன்ன தருமகர்த்தாவின் வார்த்தையை ஒன்னுக்குவிடப் போன குமார் கேட்டுவிட்டு வந்துசொன்னதுதான் தாமதம், இரண்டே தப்படியாகத் தாவிக் குதித்துப் பந்தலுக்குள் ஐந்து பேரும் வந்தனர் பந்தல் ஒன்றும் அவ்வளவு பெரியதில்லை. வீட்டுக்கு நேராக, பாதித் தெருவை அடைத்துப் போட்டிருந்தனர். தெருவும் பெரிய தெரு இல்லை. இரண்டு மாட்டுவண்டிகள் கூட ஒதுங்கிப் போக முடியாத அளவுக்குக் குறுகலான சந்து. பந்தலைச் சுற்றிக் கூட்டிவிட்டு ஈச்சம்பாய், சாக்கு என்று விரித்துப்போட ஆரம்பித்ததுமே மாப்பிள்ளை வீட்டார்கள் ஒவ்வொருவராக வந்து உட்கார ஆரம்பித்தனர். காலியாக இருந்த இடங்களில் அவசரப்பட்ட ஒன்றிரண்டு உள்ளூர்ப் பஞ்சாயத்தார்கள் அவசரஅவசரமாக இடம் பிடித்து உட்கார்ந்துகொண்டனர். தலையாரி இலை கொடுக்க ஆரம்பித்தான். பையன்கள் பசபசவென்று அங்குமிங்குமாக நடந்து இடம் தேடினர்.அதற்குள் துறுதுறுத்த கண்ணன் அவசரப்பட்டுத் தலையாரியிடம் போய் இலை கேட்டுக் கையை நீட்டியதும்.''மொதபந்திமாப்ள ஊட்டுக்காரங்களுக்குத்தான். அப்புறமா சாப்புடலாம். வெளிய போடா'' என்று சொல்லி அவனைத் துரத்திவிட்டவனின் பார்வை மற்ற நாலு பேரின் மீதும் விழுந்தது. அவ்வளவுதான். சட்டென்று வெளியூர்க் கிழவியின் பக்கத்தில் உட்காரப்போன குமாரோடு நால்வரையும் இழுத்து வந்துவெளியே தள்ளிவிட்டான். எரித்துவிடுவது மாதிரி பையன்கள் தலையாரியைப் பார்த்தனர். கோபமும் சொல்ல முடியாத எரிச்சலும் உண்டாயிற்று. பந்தலுக்குச் சற்றுத் தூரமாக ஒதுங்கி நின்றுகொண்டனர். எங்கே போனாலும் முதல் பந்தி வெளியூர்க்காரர்களுக்குத்தானேபோடுவார்கள்.அதிலும்.மாப்பிள்ளை வீட்டுக்காரர்களுக்குத்தானே போடுவார்கள். அதிலும், மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் என்றால் கூடுதல் மரியாதை. விஷயம் புரிந்ததும் தலையாரியின்மேல் இருந்த கோபம் குறைய ஆரம்பித்தது.

முதல்பந்தி முடியும்வரை என்ன செய்வது? விளையாட முயற்சித்தனர். விளையாட்டில் மனம் ஒன்றவில்லை. எதிர்வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கத்திக்கொண்டிருக்கும் கோசலையிடம் போகவும் விருப்பமில்லை, ''வாங்கடா, வௌயாடலாம்'' என்று சொன்ன கருப்பையாவின் வார்த்தையில்கூட உயிரில்லை. பந்தலைப் பார்ப்பதும், தெருவைப் பார்ப்பதுமாக இருந்தனர். ஒருத்தன் முகத்திலும் சிரிப்பில்லை. ஏக்கம்தான் நிறைந்திருந்தது. ஒரே இடத்தில் நிற்பதற்காக யாராவது திட்டினாலும் திட்டலாம் என்று உப்பு மூட்டைதூக்கும் விளையாட்டை விளையாட ஆரம்பித்தனர். விளையாடிக்கொண்டிருந்தாலும் அவர்களுடைய கவனமெல்லாம் பந்தலை நோக்கியே இருந்தது. குமாருக்குப் பொறுக்க முடியவில்லை. ''இருங்கடா'' என்று சொல்லிவிட்டு அவசரமாகப் பந்தலை நோக்கிப் போனவன் மறைப்புக்காகக் கட்டியிருந்த படல்களின் ஓட்டை வழியே பார்த்தான். தான் கண்ட அதிசயத்தை மற்றவர்களுக்கும் காட்டக் கையைக் காட்டி வரவழைத்து ஒவ்வொருவராக ஓட்டையின் வழியே பார்க்கச் சொன்னான். ஒவ்வொருவரும் மாறி மாறி இரண்டு மூன்று முறை பார்த்தனர். மூன்று பக்கம் தெரிந்தது. ஒரு பக்கம் ஆட்களின் முதுகு மட்டும்தான் தெரிந்தது. கிழக்கு வரிசையில் மேற்கு முகமாக முகத்தை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தவர்கள்தான் நன்றாகத் தெரிந்தனர். இனிமேல் எப்போதோ என்பது போல ஒவ்வொருவரின் கையும் பேயின் கைகளாக மாறிச் சோற்றையும் குழம்பையும் பிசைந்து வேகவேகமாக அள்ளி வாயில் திணித்துக்கொண்டிருப்பதை ஒவ்வொருவரும் பார்த்தனர். இவ்வளவு மலர்ச்சியான, சந்தோசம் நிறைந்த முகங்களை இதற்கு முன் அவர்கள் பார்த்ததே இல்லை. பையன்களுக்கு எச்சில் ஊற ஆரம்பித்தது. அதிலும் குமார் அடிக்கடி வாயைச் சப்புக் கொட்டி உமிழ்நீரை விழுங்கிக்கொண்டிருந்தான். புழுப் போல இருந்த நெல்அரிசிச் சோற்றையும் கேழ்வரகுக் கூழைக் கரைத்தது மாதிரிதடதட வென்றிருந்த குழம்பையும் பார்க்கும்போது யாருக்குத்தான் நாக்கில் எச்சில்

ஊறாது ? கல்யாணச் சாப்பாடு என்றாலே தனிதான். மணமும் தனி வகைதான். அப்படிப்பட்ட சாப்பாட்டை எப்போதுதான் சாப்பிடப்போகிறோமோ என்று பையன்கள் ஏங்கிக் கொண்டிருந்தனர். பந்தி எப்போதுதான் முடியுமோ.

இரண்டாவது பந்தி ஆரம்பித்தது. ஒரே இடத்தில் வரிசையாக உட்கார்ந்ததால் எளிதில் மாட்டிக்கொள்வோம் என்று திட்டம்போட்டு ஐந்து பேரும் பல்வேறு இடங்களில் மாறி மாறி உட்கார்ந்தனர். உட்காரஇடம் கிடைத்ததுமே சாப்பிட்டுவிட்ட திருப்திக்கு வந்துவிட்டார்கள். மிகுந்த மனநிறைவுடன் இருந்தனர். அந்த நேரத்தில் பையன்களுக்கு யார்மீதும் கோபமில்லை. இப்போது உள்ளூர்ப் பஞ்சாயத்தார்கள், கொத்துக்காரர்கள், பெருமாளின் பங்காளிகள் என்று பந்தி நிரம்பியிருந்தது. பந்தியின் மையத்தில் குண்டான் குண்டானாகச் சோற்றையும் குழம்பையும் எடுத்து வந்து வைத்தவன், ``நேரத்த வளத்தாத சட்டுசடுக்குன்னு வேலயப்பாரு'' என்று தலையாரியிடம் சொல்லிவிட்டு விட்டுக்குள் ஓடினான். முதலில் வாசலை ஒட்டி உட்கார்ந்திருந்தவர்களுக்கு இலை கொடுக்கப்பட்டது. அங்கே உட்கார்ந்திருந்த ராமனுக்கு இலை கிடைத்துவிட்டது. மற்ற நால்வரும் பொறாமையோடு அவனைப் பார்த்தனர். நமுட்டுச் சிரிப்பு சிரித்தனர். என்றைக்குமில்லாமல் வினோதமாக சிரித்தான் அவன் பையன்களுக்கு ஆகாயத்தில் பறப்பது போலிருந்தது. அந்தநேரத்தில் மாப்பிள்ளை விட்டுக்கார ஆள் ஒருவன் தெருவிலிருந்து பந்தலுக்குள் வந்ததும் ``இன்னமுட்டும் எங்க போயிருந்தீங்க ? ஓங்களத்தேடாத எடமில்ல. எங்களக் கொற பேசறதுக்கா ? மொதல்ல பந்தியில குந்துங்க!'' என்று தலையாரி சொன்னதும், உட்கார்ந்திருந்த உள்ளூர்ப் பஞ்சாயத்தார்களும் ``அதான பொன்னு ஊட்டுக்காரன் சோறுபோடலன்னு சொல்ல எடம் கொடுக்கவா. குந்து குந்து'' என்று பலரும் ஒரே வாயாகச் சொன்னார்கள். அப்படிச் சொன்னார்களே தவிர நகர்ந்து உட்கார்ந்து இடம் தரவில்லை. வந்தவனை உட்காரவைக்க இடம்கிடைக்காததால் யாரை எழுப்பலாம், யாரை நகர்ந்து உட்காரச் சொல்லலாம் என்று பார்த்த தலையாரியின் கண்ணில் குமாரா பட வேண்டும் ? சின்னப் பசங்களுக்கு இப்ப என்னடா அவசரம் ? அப்பறமா சாப்புடலாம் எயிந்திரு என்று சொல்லி வாசலை நோக்கி நெட்டித்தள்ளியவனின் கண்ணில் மற்றப் பையன்கள் படவே, ஒவ்வொருத்தனாக எழுப்பி வெளியே துரத்திவிட்டான். கடைசியில் ராமனிடமிருந்த இலையை வாங்கும்போது கிழிந்துவிட்டது. அதற்காக அவனுடைய முதுகில் ஒன்று வைத்து வெளியே தள்ளினான். அறியாப் பயலுவள யாண்டா தொரத்தியடிக்கிற? என்று கேட்ட ஒருகிழவனின் குரல்தலையாரியின் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை.

பையன்களுக்கு நெஞ்சு கருகிப்போயிற்று. ஒருவர் முகத்திலும் சிரிப்பில்லை. அழுகிற நிலையில் இருந்தனர். தலையாரியைக் கரித்துக் கொட்டினர். பந்தலைப் பெரியதாகப் போடாத பெருமாளையும் திட்டினார்கள். பெரியவர்கள் ஏன் எதற்கெடுத்தாலும் முன்னே முன்னே என்று வந்துவிடுகிறார்கள் ? ஊரில் யார் குசு விட்டாலும் பஞ்சாயத்தார்களும் கொத்துக்காரர்களும் கூடிவிடுவார்கள். அவர்களுக்குக் கையாளாகத் தலையாரியும் ஊர்மணியக்காரனும் வந்துவிடுவார்கள். பிறகு, அவர்களுடைய ராச்சியம்தான். தலையாரிக்கும் ஊர்மணியக்காரனுக்கும் பையன்களை எங்கே கண்டாலும் அடிப்பது தான் வேலை. அவர்கள் இருவரும் சீக்கிரம் சாக வேண்டும் என்று பையன்கள் விரும்பினர். யார்யார் மீதெல்லாமோ கோபப்பட்டுக் கடைசியில் தாங்கள் மேலேயே கோபப்பட ஆரம்பித்தனர். தாங்கள் ஏன் இன்னும் பெரியவர்களாகவில்லை ? பெரியவர்களாகிவிட்டால் எந்தத் தொந்தரவும் இருக்காது என்றும், தங்களால் முடியாதது என்று ஊருக்குள் ஒன்றுமே இருக்காது என்றும் தங்களால் முடியாதது என்று ஊருக்குள் ஒன்றுமே இருக்காது என்றும் நினைத்துக் கொண்டார்கள். சீக்கிரம் பெரியவர்களாகிவிட வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். அதைக் கண்ணன் வெளிப்படையாகச் சொல்லவும் செய்தான்.

பந்தலை விட்டுச் சற்றுத் தள்ளி மேற்கில் நின்று கொண்டிருந்த பையன்கள் சொல்ல முடியாத இக்கட்டில் மாட்டிக்கொண்டதுபோல் தனியாய்த் தவித்துக்கொண்டிருந்தனர். வேறு எங்காவது போகலாம் என்றாலும் மனம் கேட்கவில்லை. கால்களும் நகர மறுக்கின்றன. சந்தேகமான குரலில் குமார் ``பந்தி முடிஞ்சிருக்குமாடா ?'' என்று கேட்டதும், அவனுடைய முகத்தில் அறைவது மாதிரி ``பந்தி முடிஞ்சா ஆளுவோ வெளியே வரமாட்டாங்களா ?'' என்று ராமு வெடுக்கென்று கேட்டதும் குமாரின் முகம் செத்துவிட்டது. கொஞ்ச நேரம் அதையும் இதையும் பேசிக்கொண்டிருந்தவர்கள், பிறகு பெண் அழைக்கவந்திருந்த வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்த இடத்திற்குப்போனார்கள். புது வண்டியாக இல்லாமல் பழையதாக இருந்ததைப் பார்த்து உதட்டைப் பிதுக்கினார்கள். நுகத்தடிகூடத் தேய்ந்து போயிருந்தது. அச்சு மக்கிப்போயிருந்தது. மாடுகள் அறுப்புக்குப் போகக் காத்திருக்கிறமாதிரி படுகிழடுகளாக இருந்தன. எந்த மாட்டின் கழுத்திலும் சலங்கை இல்லை. கொம்பில் கொப்பி இல்லை. கூடுவளைந்திருப்பதுகூட அவசரத்தில் செய்தது போலிருந்தது. ஒன்றுமே ருசிக்கவில்லை. ஒவ்வொரு விஷயமும் பையன்களைச் சீக்கிரத்தில் சலிப்படையச் செய்வதாகவே இருந்தது. நிலைகொள்ளாமல் தவித்துக்கொண்டிருந்தபோது பந்தியிலிருந்து ஆட்கள் வெளியே வந்து கை கழுவுவது தெரிந்ததும் பந்தலின் வாசலுக்குத் தாவிஓடினர்.

தெருத்தெருவாக இரண்டாவது முறையாகத்தவிச்சிவிட்டு வந்த ஊர்மணியக்காரன் வாழை மரம்கட்டியிருந்த இடத்தில் நின்று கொண்டு பெரியவர்களையும் பெண்களையும் அவர்களோடு வந்த பிள்ளைகளை மட்டுமே உள்ளே விட்டுக்கொண்டிருந்தான். பெண்கள் போகும்போது எளிதில் உள்ளே போய்விடலாம் என்று பெரிதாக நம்பிக்கொண்டிருந்த பையன்களின் எண்ணத்தில் ஊர்மணியக்காரனின் செய்கை நெருப்பை வைத்தது போலிருந்தது. தனியாக வரும் பெண்களோடு ஒவ்வொருவராகப் போய்விடலாம் என்று திட்டம்போட்டு, வடக்குத் தெருப் பெண் ஒருத்தியுடன் உள்ளே போக முயன்ற கண்ணனைப் பிடித்து ``பந்தியில எடம் வாணாமா'' என்று சொல்லி ஊர்மணிக்காரன் கையைப் பிடித்து நிறுத்தியதும், ஆத்திரம்கொண்டவனாக வெடுக்கென்று கையை உருவிக்கொண்டு கண்ணன் பையன்களிடம் வந்தான். அவனுடைய முகம் கோபத்தில் சிவந்துபோயிருந்தது. அழுதுவிடுவானோ! அவனுடைய முகத்திலிருந்த உணர்ச்சியெல்லாம் செத்துவிட்டது போலிருந்தது. அவன் வெம்புவதைப் பார்த்ததும் மற்றவர்களுக்கும் கண்கலங்க ஆரம்பித்தது.

``என்னடா பயலே இங்க நிக்குற ?'' என்று கேட்டுக்கொண்டே ராமனின் அம்மா ஒரு கைப்பையில் அரிசி, காய்களுடன் வந்தாள். அவள் இவனைக் கூப்பிடக்கூட இல்லை. இவனாக ஓடிப்போய்ப் பையைப் பிடுங்கிக் கொண்டு தூக்க முடியாமல்தூக்கிக் கொண்டு பந்தலை நோக்கி உற்சாகமாக நடக்க ஆரம்பித்தான். ஊர்மணியக்காரன் அவனுக்கு ஒதுங்கி நின்று வழிவிட்டான். மற்ற நான்கு பையன்களும் விக்கித்துப்போனார்கள். ராமன் எங்கே உட்கார்ந்திருப்பான் ? அவனுடையமுகம் எப்படி இருக்கும் என்பதைப் பார்க்க வேண்டும் என்ற வெறி நால்வருக்கும் உண்டாயிற்று. திருட்டுப் பூனைகள் மாதிரி மெல்லப் பந்தலை நோக்கி நடந்தார்கள். பந்தலுக்கு இரண்டு தூரம்தள்ளி நின்றுகொண்டு

எக்கியும்,எம்பிக் குதித்தும் பார்த்தார்கள். ராமன் இருக்கிற இடம் தெரியவில்லை. மேற்குப் புறத்தில் மறைப்புக்காகக் கட்டியிருந்த படலில் ஓட்டை போட்டு முதலில் பார்த்தவன் கண்ணன்தான். பிறகு,ஒவ்வொருவராகப் பார்த்தனர். கிழக்கு வரிசையில் வீட்டு வாசலை ஒட்டி ராமன் உட்கார்ந்திருந்தான். இவர்கள்தான் அவனைப் பார்த்தார்கள். ஆனால் அவன் இவர்களை ஒருமுறை கூடப் பார்க்கவில்லை. பார்க்கவேண்டும் என்ற குறிகூட அவனுடைய முகத்தில் இல்லை. சட்டென்று அவன்மீது நான்கு பேருக்கும் எரிச்சல் உண்டாயிற்று. கோபமும் பகையும் உண்டாயிற்று. ஒரு நொடியிலேயே இனி அவனோடு சேரக்கூடாது. விளையாட்டில் அவனைச் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்று முடிவெடுத்தார்கள். அதே நேரத்தில் இப்போதே அவனிடம் பேசியாக வேண்டும் என்ற வெறியும் ஆசையும் உண்டாயிற்று. அதைக் கட்டுப்படுத்த முடியாமல் கிழக்குப் பக்கமாக ஓடி ராமன் உட்கார்ந்திருந்த இடத்திற்கு நேராக ஓட்டை போட்டு அவனைக் கண்ணன் சீண்டினான். திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்த ராமன் பதட்டத்துடன் ``போடா போடா'' என்று சொல்லி வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக்கொண்டான். தொடர்ந்து பையன்கள் சீண்டுவதைப் பொறுக்க முடியாமல் ராமன் தன்னுடைய அம்மாவுடன் மேலும் நெருங்கி உட்கார்ந்துகொண்டான். அவனுடைய செய்கை பையன்களுக்கு ஆத்திரமூட்டுவதாக இருந்தது. இக்கட்டான நிலையில் அவன் கைவிட்டுவிட்டதாக நினைத்தனர். படலைவிட்டுச் சற்றுத்தள்ளி வந்து நின்று கொண்டு ராமனைப் பற்றியே பேசினார்கள். அவன்மேல் வஞ்சம் கொண்டனர். பழிதீர்க்கத் திட்டம் போட்டனர்.

செய்முறை செய்வதற்காகப் பெண்கள் கைப்பையில் புட்டியில் இரண்டு மாகாணி, ஒரு வல்லம், ஒரு மரக்கால் நெல், அரிசி என்றும், ஒருதூக்குக் காய்களும் எடுத்துக்கொண்டு வந்தவாறு இருந்தனர். அவர்களோடு பிள்ளைகளும் வந்தனர். அந்தப் பிள்ளைகளை ஒன்றும் சொல்லாமல் ஊர்மணியக்காரன் பந்தலுக்குள் விட்டதுதான் பையன்களுக்குத் தாங்க முடியவில்லை. தங்களுடைய அம்மாக்கள் ஏன் வரவில்லை ? வருவார்களா ? மற்ற பெண்கள் மாதிரி தன்னுடைய அம்மாவையும் செய்முறை செய்ய அரிசியும் காயும் எடுத்துக்கொண்டு வரச்சொல்லக் கருப்பையா தன்னுடைய வீட்டுக்கு ஓட்டமெடுத்தான் மற்றவர்கள் தடுத்தும் அவன் நிற்கவில்லை. காற்றாய்ப் பறந்துவிட்டான். எஞ்சியிருந்த மூன்று பேரும் தனியாய்த் தவித்தும் போனார்கள். நம்பிக்கை இழந்து பொருமு ஆரம்பித்து விட்டார்கள். இந்த நேரம் பார்த்து ஊருக்குப் போயிருந்த தன்னுடைய அம்மாவைக் குறைசொல்லிக் கண்ணன் திட்ட ஆரம்பித்ததும், ஆடு மேய்க்கப் போயிருந்த தன்னுடைய அம்மாவைக் குமார் பச்சையாக திட்ட ஆரம்பித்தான். தன்னுடைய அம்மா எதிர்பாராத விதமாக வர வேண்டும் என்று நினைத்த கணேசன் தெருவையும் பந்தலையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டிருந்தான்.

பந்தி முடிந்து வெளியே வந்த ராமன் பையன்களிடம் வராமல் தன்னுடைய அம்மாவின் கையைப் பிடித்தவாறு, இவர்களைத் திரும்பித்திரும்பிப் பார்த்துக்கொண்டே போனது இவர்களுக்கு அவமானமாக இருந்தது. சட்டென்று ஒய்யாரமான நடை, பொய்யான சிரிப்பு, பகட்டான, பூரிப்பான முகம் எப்படி அவனுக்கு வந்தது என்று தெரியாமல் பையன்கள் திகைத்துப் போய் நின்று கொண்டிருந்தனர்.

நேரத்த ஆளாட்டந. பரிசம் போடனும் சம்பந்தம் கலக்கனும். மொய்ப்பிடிக்கனும். ஊர்க்கோலம் வுடனும். இன்னம் எம்மாம் வேலகெடக்கு ? நிம்மறந்தவனாட்டம் நிக்குறியே, சாமி வேட்டக்கிப் பொறப்படுறதுக்குள்ளாற பொண்ண நல்லத்தனமா,அனுப்பிவுட வாணாமா? நேரமாயிப் போச்சி. போயி லாந்தர ஏத்திக்கொண்டா என்று சொல்லித் தலையாரி பெருமாளிடம் கத்திக் கொண்டிருந்தான். அவனுக்குப்பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஆள் ஒருவன் என்னது, நான் இட்ட பயிர் சரியா வௌயலியா ? அப்படின்னா பொண்ண அனுப்ப முடியாதுன்னு சொல்லுங்க. பொண்ணுக்கு எடுத்த சீலகூட வெலகொண்டது இல்லியாமே. நெங்களவரைக்கும் போதும்னு பாக்குறானுவளா ? என்று கத்திக்கொண்டே வீட்டுக்குள் போனான்.

ஒரு உருப்படி ஆடுகளைப் பருபோசி வெயிலில் மேய்த்துவிட்டு ஓட்டிக்கொண்டு வந்த கம்சலாவுக்குத் தண்ணீர்தாகம் உயிர்போய்விடும்போல் இருந்ததால், ஆடுகளைக் கூடக் கட்டாமல்நேரே வீட்டுக்குள் வந்தாள். ஒரு வாய்த் தண்ணீர்தான் குடித்தாள். உருமச்சோறு என்று குமாருக்கு வைத்துவிட்டுப் போயிருந்த வரகுச் சோற்றை நாய் அலம்பியிருப்பது சோற்றுக் குண்டான் உருண்டு கிடந்த கோலத்திலேயே தெரிந்துவிட்டது. அதைப் பார்த்ததுமே அவளுக்குப் பகீரென்றது. சிதறிக் கிடந்த ஒன்றிரண்டு சோற்றுப் பருக்கைகள் முறுக்கு மாதிரி காய்ந்துபோய்க் கிடந்தன. ஈரத்தால் ஊறிப்போய்த் தரை ஏடுஏடாகத் தேன்கூடுக்கு மாதிரி தூக்கிக் கொண்டிருப்பதைக் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. உருமச் சோறுகூட குடிக்காம அப்பிடி எத்தன ஊருக்கு மணியம் பண்ணப் போனாரோ என்று சொல்லி வாய்விட்டுத் திட்டினாள். குமார் மதியம் வீட்டுக்கு வரவே இல்லையா, வந்து சோற்றை நாய் அலம்பிவிட்டுப் போயிருப்பதைப் பார்த்துவிட்டு ஏமாந்து போயிருப்பானா ? ஆடுகளை ஓட்டிக்கொண்டு மேய்க்கப் போகும்போது படலைச் சாத்திவிட்டுத்தானே போனேன். எப்படி நாய் நுழைந்திருக்கும் ? வேறு எதையாவது உருட்டிவிட்டிருக்குமோ என்று வீட்டை ஒரு பார்வை பார்த்தாள். எந்தத் தெரு நாயாக இருக்கும் ? சோறு இல்லாமல் குமார் எப்படி வாடி வதங்கிப்போயிருப்பானோ என்ற எண்ணம் வந்ததும், தண்ணீரைக்கூடக் குடிக்காமல் அவசரமாக வெளியே வந்தாள். வாசலில் நின்றுகொண்டு இரண்டு மூன்று குரல் கூப்பிட்டுப்பார்த்தாள். எந்த அரவமும்இல்லை. சிதறி நின்ற ஆடுகளை அவசரமாகப் பிடித்துக் கட்டினாள். எதிர்வீடு, அண்டை வீடுகளில் விசாரித்தாள். சொல்லி வைத்தாற்போல எல்லாருமே காலையிலிருந்தே பையனைப் பார்க்கவில்லை என்றனர். கம்சலாவுக்குச் சடசடப்பும்மயக்கமும் வருவது போலிருந்தது. நொடிக்கு நொடி பதட்டமும் கவலையும் கூடிக்கொண்டேயிருந்தது. இரண்டு தெருக்களிலும் தேடிப்பார்த்தாள். எதிர்ப்பட்டவர்களிடமெல்லாம் விசாரித்தாள். ஒரு துப்புக்கிடைக்கவில்லை. அவளுடைய கோலத்தையும் படபடப்பையும் பார்த்துவிட்டு ஒன்றிரண்டு பெண்கள் ``இங்கதான் எங்கியாவது புள்ளிவோ கூட ஊர்க்காட்டுல சுத்திக்கிட்டு இருப்பான்'' என்று சொன்னதெல்லாம்அவளுடைய காதில் ஏறவில்லை. பிள்ளைகளுடன் சேர்ந்துகொண்டு குளிக்கப் போய், கிணற்றில், ஏரியில், குளத்தில் விழுந்திருந்தால் ? இந்த எண்ணம் உண்டானதும் அவளால் ஒரு இடத்தில் தரித்து நிற்க முடியவில்லை. ஆடு மேய்த்ததால் ஏற்பட்ட வேர்சடக்களையெல்லாம் மறந்துவிட்டு மீண்டும்வீட்டுக்கு ஓடிவந்து பார்த்தாள். எந்தச் சத்தமுமில்லை. மீண்டும் தெருவுக்கு ஓடினாள்.கோவில், பள்ளிக்கூடம், பையன்கள் விளையாடுகிற இடமென்று எல்லா இடத்திலும் பார்த்துவிட்டாள். பையன் என்னவாகியிருப்பான் ? காலையில் பள்ளிக்கூடம் போகும்போது பொரி உருண்டை வாங்கக் காசு கேட்டதற்குக் கொடுக்காமல் ``பொரி உருண்டையா கேக்குது?'' என்று தலையில் கொட்டியதற்காகத் தன்னையே திட்டிக் கொண்டாள். காணியாயி மாதிரி ஒவ்வொரு வீடாக ஓடி விசாரிக்க ஆரம்பித்தாள். மேளச்சத்தம் அப்போதுதான் அவளுடைய காதில்

விழுந்தது. கல்யாண விட்டுப் பக்கம் போயிருப்பானோ ? அந்த விட்டுக்கும் இவளுக்கும் சண்டை நடந்து மொறப்பாடு என்று அவனுக்குத் தெரியுமே. மீறிப் போகக்கூடிய பையனில்லையே என்று எண்ணினாலும் யாரையாவது விட்டுப் பார்க்கச் சொல்லலாம் என்றால் அந்த நேரம் பார்த்து கண்ணில் ஒரு ஆள்கூடப் படவில்லை. அங்கேயும் பார்த்துவிடலாம் என்று நினைத்தாலும் மனம் ஒருக்கவில்லை. சண்டைக்காரர்கள் விட்டுக்கு எப்படிப் போவது என்று தயங்கினாலும், மறுநொடியே அவளையும் அறியாமல் அவளுடைய கால்கள் கல்யாண விட்டை நோக்கி ஓட ஆரம்பித்தன.

அடுத்த பந்தி ஆரம்பித்தது. இந்தப் பந்தயிலாவது உட்கார்ந்து விட வேண்டும் என்று கண்ணன்,குமார், கணேசன் மூவரும் பெரிய திட்டமாகப் போட்டனர். அதன்படி பிள்ளைகள் இல்லாமல்வரும் பெண்களுடன் ஒவ்வொருவராக நுழைவதற்குப் பதிலாக, அவர்கள் எங்கெங்கே உட்கார்ந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடித்து, படலைவிலக்கிக்கொண்டு உள்ளே நுழைந்துவிட வேண்டும்என்று பேசி முடிவெடுத்தனர். பிள்ளைகள் இல்லாமல் உட்கார்ந்திருக்கும் பெண்களைப் பார்ப்பதற்காக எக்கிஎக்கியும், எம்பிக் குதித்தும் பார்த்தனர். அடையாளம் வைத்துக் கொண்டு மூவரும் தனித்தனியாகப் பிரிந்து படலை ஒட்டி ஒண்ணுக்குப்போவது மாதிரி உட்கார்ந்து யாரும் பார்க்கிறார்களா என்று ஒரு முறை நன்றாகப் பார்த்துவிட்டு லேசாகப் படலை விலக்கி முதலில் தலையை நுழைத்துபிறகு மெல்ல மெல்ல வளையில் பாம்பு நுழைவது மாதிரி உடலை உள்ளே இழுத்துக் கொள்ளவேண்டும் என்ற திட்டத்தை மீண்டும் ஒருமுறை பேசி முடிவெடுத்தனர். திட்டத்தின்படி ஆளுக்கொரு இடமாகப் பிரிந்து போனார்கள். கிழக்குப் பக்கம் குமாருக்கு. கால்சட்டையை விலக்கிப் பிடித்தவாறு தன்னை யாரும் பார்க்கிறார்களா என்று ஒருமுறை பார்த்துவிட்டு அப்படியே உட்கார்ந்தவன், உட்கார்ந்த நிலையிலேயே படிப்படியாக நகர்ந்து வந்து இரண்டு படல்களை இணைத்துக் கட்டியிருந்த கட்டை அவிழ்த்துவிட்டு, முதலில் விரல்களைக் கொடுத்து நெம்பினான். பிறகு, கையைக் கொடுத்து விலக்கினான். உட்கார்ந்து நிலையிலேயே முட்டிக்கால் போட்டுத் தரையோடு தரையாகத்தலையை ஒருக்களித்து வைத்து உள்ளே திணிக்க முயன்றான். உள்ளே உட்கார்ந்திருந்த பெண் பின்புறத்தில் ஏதோ முட்டுகிறதென்று திரும்பிப் பார்த்தாள். பதட்டத்துடன் ''என்னடா பயல பண்ற ? யாண்டா இப்பிடியே வர்றெ ?'' என்று கேட்டவள், அவன் முழு உடலையும் உள்ளே இழுத்துக்கொள்ளும் அளவுக்கு இடம் விட்டு நகர்ந்து உட்கார்ந்தாள். ''இந்த வைகல கூத்து எங்கடி நடக்கும் ?'' என்று வாயுருகிப் போனவள் மற்றவர்களுக்கு தெரியாதவாறு குமாரின் இரு கைகளையும் பிடித்து உள்ளே இழுக்க முயன்றாள். இன்னும் கொஞ்சம்தான். நெஞ்சுவரை உள்ளே வந்துவிட்டது. இடுப்பு, பிறகு கால்கள்தான். நாக்குப்பூச்சி மாதிரிஉடலை அசைத்து அசைத்து முன்னோக்கி உந்தித்தள்ளிக் கொண்டிருந்தான். அவனை ஊரெல்லாம் தேடிப்பார்த்துவிட்டு, கடைசியில் கல்யாண விட்டுப் பக்கம்தான் போயிருப்பான் என்று வந்த கம்சலாவுக்கு எப்பிடித்தான் அவன் படல்சந்தில் நுழைந்து கொண்டிருப்பது தெரிந்ததோ, ஒரே ஓட்டமாக ஓடி வந்தவள். ''அட சாண்ட நக்கி மவன. எப்பிடி எங்குடி மானத்த வாங்குறான் பாரன்'' என்று சொல்லிக் குமாரின் அம்மாதரையோடு தரையாகக் கிடந்தஅவனுடைய கால்களைப் பிடித் வளையிலிருக்கும் நண்டைப் பிடித்துஇழுப்பதுமாதிரி வெளியே இழுக்க, உள்ளே இருந்த பெண் கைகளைப் பிடித்து உள்ளே இழுக்க, விரிட ஆரம்பித்தான் குமார். உள்ளே இருந்த பெண் இழுப்பதை விட்டுவிட்டு அவசரமாக எழுந்து நின்று படலுக்கு வெளியே பார்த்தவள், கம்சலா, குமாரை வெளியே இழுத்துத் தூக்கி நிறுத்தி அவனுடைய முகத்திலேயே அறைந்து கொண்டிருப்பதைப் பார்த்ததும் பதறிப் போய் ''வெளயாட்டுப் புள்ளெதான். என்னாத்தக் கண்டுது ? ஆள இப்பிடித் தள்ளிவுடு'' என்று சொன்னாள். அவள் சொன்னதைக் காதில் வாங்காத கம்சலா குமாரைஅடித்து இழுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள். திரும்பிப் பந்தலைப் பார்த்தான் குமார். கண்ணனையும் கணேசனையும் காணாததால் அழ ஆரம்பித்தான்.

இரண்டு தெரு தாண்டி வந்த பிறகும் அடிப்பதைக் கம்சலா நிறுத்தவில்லை. ''நம்பளுக்கும் அந்த ஊட்டுக்கும்தான் மொறப் பாடாச்சே. அங்க எதுக்குப் போன ? இனிமே போவியா ?'' என்று கேட்டு அடித்துக்கொண்டிருந்தவளின் அடியைத் தாங்க முடியாமல் வலுக்கட்டாயமாக அவளுடை பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட குமார், அவளுக்குச் சிறிது தள்ளி நேரெதிராக நின்றுகொண்டு எதிராளியிடம் பேசுவது மாதிரி முகத்தைக் கோணிக்கொண்டு சொன்னான்.

''இனிமே என்னெ அடிச்சா, ஒனக்கு சாவம் கொடுத்துடுவன்.''

கம்சலா அப்படியே திகைத்துப் போய்க் கல்தூணாய் நின்றுவிட்டாள். ஆச்சரியத்தில் அவளுடைய முகம் விரிந்தது. கோபக் குறி குறைய ஆரம்பித்தது. குமார் சொன்னதைச் சரியாகக் காதில் வாங்காதவள் மாதிரி ''என்னடா சொன்ன, என்னடா சொன்ன ?'' என்று திரும்பத்திரும்பக் கேட்டவளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. சிறு பெண்மாதிரி கடகடவென்று சத்தம்போட்டுச் சிரித்தாள். அதே கேள்வியை மீண்டும் மீண்டும் கேட்டாள். எல்லாவற்றையும் மறந்துவிட்டுச் சிரித்துக்கொண்டிருந்தாள். அவள் எட்டிப் பிடிக்காத அளவுக்குத் தூரமாக நகர்ந்து நின்றுகொண்டு குமார் சொன்னான். ''எதுத்த ஊட்டுப் பொம்பள நம்ப ஊட்டு ஆட்டுக்குட்டிய அடிச்சிக்கால ஒடச்சப்ப, அவ சீக்கிரம் சாவணும்னு நீ அய்யனார்கிட்டே வேண்டுனல்ல, மண்ணாப்போவணும்னு சாவம் கொடுத்தெல்ல அந்த மாரிதான்.''

இமையம்

இமையத்தின் இயற்பெயர் அண்ணாமலை, பள்ளி ஆசிரியர். இவரது நாவல்கள் கோவேறு கழுதைகள் (1994) ஆறுமுகம் (1999) நெல்சோறு என்ற சிறுகதை, தீராநதி (2003) இதழில் வெளிவந்தது. மண்பாரம் என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

# பதிமூணில் ஒண்ணு

- ச. தமிழ்ச்செல்வன்

மனிதர்கள் கை கொடுக்காதபோது தெய்வத்தின் துணையை நாடும் நம்ம ஊர் வழக்கப்படி நடராஜன் பிள்ளையார் கோவில் வாசலில் கிடந்த ஒரு பாறையின் மேல் உட்கார்ந்திருந்தான். ஆனால் அவன் கோபமாக இருந்தான். அந்த தெய்வமும் கைகொடுக்காவிட்டால் மனுசனுக்குக் கோபம் வருமா வராதா? பிள்ளையாரை முறைத்தபடி உட்கார்ந்திருந்தான். நடராஜன் கோபத்துடன் வீசி எறிந்த பரீட்சைப் பேப்பர் பிள்ளையாரின் காலடியில் அலங்கோலமாக விரிந்து கிடந்தது. கோபம் அழுகையாக மாறி அழுகை தண்ணீராக மாறி அவன் கன்னங்களில் வழிந்து மேல் சட்டை போடாத அவன் நெஞ்சிலும் வயிற்றிலும் தெறித்தது. பித்தான் இல்லாத பள்ளிக்கூடத்து ஊதா டவுசரை இறுக்கி வயிற்றில் சொருகியிருந்தான். பொழுது இருட்டிக் கொண்டு வந்தது. பக்கத்து ஆலமரத்துக்கு அடைய வந்த பறவைகள் கூப்பாடு போட்டுக்கொண்டு கிடந்தன. மேயப்போன ஆடுகள் ஊர் திரும்பிக் கொண்டிருந்தன. கால்பரீட்சை லீவு பூராவும் அவனும் இது மாதிரி பெரிய நாயக்கர் வீட்டு ஆடுகளை மேய்த்துக்கொண்டு தான் திரிந்தான். ஒவ்வொரு லீவிலும் காடுகளுக்கு ஆடுகளோடும் மேய்க்கத்தான் போகணும். அவனுடைய அப்பா பெரிய நாயக்கர் வீட்டில்தான் வேலைக்கு நின்றார். ஆகவே தட்ட முடியாது.

கண்ணீரைத் துடைக்கவும் கைவரவில்லை. அப்பாவையும் ஆத்தாவையும் நினைத்தால் கண்ணீர் இன்னும் பெருகியது. திரும்பிக் கொண்டிருந்த ஆட்டுக்கூட்டத்திலிருந்து ஒரு குட்டி ஆடு துள்ளிக்குதித்து வந்து இவன் மேல் விழுந்தது. ரொம்ப நாள் பழக்கம்போல அவன் மேல் உரசிக்கொண்டு நின்றது. ஆத்திரம் பொங்க நடராஜன் அதை ஓங்கி ஒரு எத்துவிட்டான். குட்டி ம்மே...என்று அலறியபடி கூட்டத்தில் போய் விழுந்தது. மறுபடியும் அவன் தன் கண்ணீருக்குத் திரும்பினான்.

வேறு சாமியே இல்லை என்று அவன் பிள்ளையாரிடம் வரவில்லை. அவனுடைய சொந்தத் தெருவான பள்ளத்தெருவிலேயே அந்தத் தெருவுக்கு (இப்போது மூன்று பெயர்ப்பலகைகள் வந்து விட்டன. அம்பேத்கார் நகர், தியாகி இம்மானுவேல் பாசறை, டாக்டர்அம்பா போர்ப்படை.) மூணு சாமிகள் இருந்தன. கருப்பசாமி, இடும்பன், மாரியம்மா என்று தெருவின் ஒவ்வொரு திருப்பத்திலும் ஒரு சாமி இருந்தது. நடராஜனுடைய சொந்த தாத்தா காயாம்புதான் இடும்பனுக்குப் பூசாரி. இதெல்லாம் போக, அவர்களுடைய குலதெய்வம் சுடலைமாடன் விளாத்திகுளம் பக்கம் காட்டுக்குள் நிற்கிறான். அத்தனை சாமியையும் விட்டு விட்டுத்தான் அவன் பிள்ளையாரிடம் வந்திருந்தான். அவர் மேலத்தெருக்காரர்களின் சாமிகளோடு பெருமாள் கோவிலுக்கு வடக்கே நிலை கொண்டிருந்தார். மூணு மாசமாக தினசரி பிள்ளையாரிடம் வந்துகொண்டிருந்தான். நடராசா..ஏ.....அய்யா நடராசு...என்று இப்போது அந்த மூணு தெருவையும் கடந்து அவனைத் தேடிக்கொண்டு அவனுடைய ஆத்தா வந்துவிட்டாள். அவசரமாக கண்ணைத் துடைத்தான். ஓடிப்போய் கீழே கிடந்த பரீட்சைப் பேப்பரை எடுத்து எட்டாக மடித்து டவுசருக்குள் திணித்தான். மறுபடி பாறையில் வந்து உட்கார்ந்து கொண்டான். ``இருட்டிப்போன பிறகு இங்ஙன உக்காரக்கூடாதய்யா. வா....வீட்டுக்குப் போவோம்`` என்று ஆத்தா அவன் கையைப் பிடித்துத் தூக்கினாள். ``நான்வல்லை...போ...`` என்று முதலில் திமிறினான். மூணாவது தடவை அவள் ``வாய்யா...`` என்று இழுத்த போது எழுந்து அவளோடு புறப்பட்டு விட்டான்.

நடத்திக்கூட்டிப் போகும்போதே ஆத்தாகேட்டாள். ``பரீச்சையிலே பெயிலாப் போயிட்டியாக்குமய்யா?`` அவன் கோபத்துடன் கையை இழுத்தான். கோபமும் அழுகையுமாக ``எந்த நாயி சொன்னான்? நான் ஒண்ணும் பெயில் இல்லை...`` என்று கத்தினான். ``சரிசரி... கோபப்படாதய்யா..வா...`` என்று இழுத்துக்கொண்டு போனாள்.அந்த நாய் ராமசாமிதான் ஆத்தாளிடம் சொல்லியிருப்பான். அவன் ஒரு மானங்கெட்ட நாயி. நாலு பாடத்திலே பெயிலானாலும் அவன் பாட்டுக்கு அலைவான். ``நடராசா....என்ன இங்கிலீசு மறுபடி புடுங்கிருச்சா`` என்று பல்லைக் காட்டிக்கொண்டு இவனிடம் பேசுவான்.

ஆத்தாளும் அவனும் வீடு வந்து சேரும்போது நடராஜனின் அய்யா குளித்துவிட்டுச் சாப்பிடத் தயாராக நடராஜனை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார். சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது அய்யா ``படிச்ச மட்டும் படிய்யா..அதுக்காகப் போட்டு. `` என்று பேச்சை ஆரம்பிக்கவும், ஆத்தா சத்தம் போட்டு அவரை மேலே பேசவிடாமல் அடக்கினாள். அன்று இரவு நடராசன் படிக்கவில்லை. பேசாமல் படுத்துவிட்டான். படிப்பு விசயத்தில் அவனுடைய அய்யாவுக்கு பெரிய ஆர்வம் கிடையாது. ஆறாவது வகுப்பு, ஏழாவது வகுப்பு ரெண்டிலும் அவன் பெயிலாகிப் பெயிலாகித்தான் அடுத்த வகுப்புக்கு போனான். பெயிலானதும் நல்லதாப் போச்சு என்று அய்யா அவனை நாய்க்கர் வீட்டுக்குக் கூட்டிப்போய்விடுவார். ஆடு மேய்க்க அங்கே எப்போதும் ஆள் தட்டுப்பாடு இருந்துகொண்டே இருக்கும். தூக்குச்சட்டி நிறைய கம்மஞ்சோத்தைத் தூக்கிக்கொண்டு, ஆடுகளுக்குப் பின்னால் ஓடுவான். அப்படியே ரெண்டு மாதம் ஓடும்.பட்டாளத்தில் இருக்கும் அவனுடைய தாய்மாமன் லீவில் வந்து கூப்பாடு போட்டு மறுபடி பள்ளிக்கூடத்தில் கொண்டு சேர்த்துவிடுவார். மறுபடி ஏழில் பெயிலானாலும் அதே படிக்கு ஆடு, மாமன் லீவு, சண்டை, மறுபடி ஏழு. அப்புறம் எட்டாம் வகுப்பு. ஆடும் படிப்பும் மாறிமாறி அலையடித்துக் கொண்டிருக்கும்.

தாய்மாமன், நடராசனை மட்டுமல்ல. தெருப்பிள்ளைகளில் யார் பள்ளிக்கூடம் போகாமல் இருந்தாலும் நேரடியாக அந்தந்த வீட்டுக்குப் போய் பெத்தவுகளோடு சண்டை போடுவார். பிள்ளைகளைத் தூக்கிக் கொண்டு போய் பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட்டுத்தான் மறுவேலை. அவர் லீவில் வருகிற ரெண்டு மாசமும் தினசரி எல்லாப் பிள்ளைகளும் குளித்து துவைச்ச சட்டை போட்டு ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போய் ஆகணும். காலையிலே பள்ளிக்கூடம் போகிற பாதையில் நின்று...ரைட்...லெஃப்ட்..போங்க...அவன எங்கே கிட்ணன் மகனை....சரி வந்துட்டியா... ஏ..... ராஜலட்சுமி... தலைக்கு ஏன் எண்ணெய் தேய்க்கலை..ம்..போ.....என்று எல்லாப் பிள்ளைகளையும் வழி அனுப்புவார். இந்தக் காரியத்துக்காகவே அவர் எப்போதும் ஜூன், ஜூலை மாதத்தில் லீவில் வருவது வழக்கம். இம்மானுவேல் சேகரனும் என்னைப்போல ஒரு பட்டாளத்துக்காரர்தான்டா என்று அவ்வப்போது அவர் சொல்லிக் கொள்ளும்போது அவர் கண்களைப் பார்க்க வேண்டும்.

ஆனால் மச்சினர் செய்வது நடராஜனின் அய்யாவுக்குப் பிடிக்காது. 'பிள்ளைகளை ஒழுங்கா ஆடுமாடு மேய்க்கவிடாம இந்த அழிம்பு பண்ணுகிறாரே' என்று கோபப்படுவார். மூணு தலைமுறைக்கு மேலாக பெரிய நாயக்கர் குடும்பத்துக்கும் நம்ம குடும்பத்துக்கும் உள்ள உறவு தன்னோடு முடிஞ்சி போகக்கூடாதே என்பது அவருடைய ஆத்திரமாக இருந்தது.

ஆனால் நடராஜனின் ஆத்தா தன் அண்ணன் கட்சிதான். மகனின் படிப்பை முன்னிட்டு ரெண்டு பேருக்கும் அடிக்கடி சண்டை நடக்கும். அதெல்லாம் நடராஜனை ஒரு போதும் பாதிப்பதில்லை. அவன் பிரச்சனை எல்லாம் அதுமட்டும் பொது மடங்கு, பின்னப்பெருக்கல், பிளஸ் மைனஸ்கள், ஸ்டோரிகள், பாராகிராப்புகள், ஆக்டிவ் வாய்ஸ், பேசிவ் வாய்ஸ்கள், கணக்கு வாத்தியார் கந்தசாமி மற்றும் ஆங்கில ஆசிரியர், அழகேசன் சார் இவ்வளவுதான்.

அவன் எட்டாம் வகுப்பில் நுழைந்த போதுதான் கந்தசாமிசார் புதுசாக அவர்களுடைய பள்ளிக்கு மாறி வந்தார். அரசு உயர்நிலைப் பள்ளியாக பத்தாம் வகுப்பு வரை உள்ள அவர்களுடைய ஐஸ்கூல் எனப்படும் ஹை ஸ்கூலுக்கு, ஆசிரியர்கள் மாறுவதும் போவதும் கம்பைண்டு கிளாஸ் என்று சொல்லப்படும் ஏ.பி.சி. எல்லாப் பிரிவு மாணவர்களையும் ஒன்றாக்கி, மரத்தடியில் ஒரே வாத்தியார் பாடம் நடத்துவதென்பதும் எல்லாம் சர்வ சாதாரண நிகழ்ச்சிகள் ஆனால் கந்தசாமி சார் வந்தது அப்படி சாதாரண நிகழ்ச்சியல்ல. நடராஜனின் வாழ்க்கையில் கந்தசாமி பெரும் பிரச்சனையாக வந்து சேர்ந்தார்.

நடராஜன் எல்லாப் பாடத்திலும் 70-80 மார்க் வாங்கிவிடுவான். ஆனால் கணக்கிலும் ஆங்கிலத்திலும் 20-30க்குக் கீழே விழுந்து கிடப்பான். எல்லாப் பாடத்திலும் பெயிலாகி எல்லாப் பாடத்திலும் 20 மார்க் வாங்குகிற பையன்கள் நிறைய பேர் இருந்தார்கள். அவர்களை எல்லாம் கந்தசாமி சார் ஒன்றுமே சொல்லமாட்டார்.

மத்த பாடமெல்லாம் ஒழுங்க படிச்சு 80 மார்க் வாங்கத் தெரியுதில்லே. என் பாடம்னா ஒனக்கு அவ்வளவு இளக்காரமாப் போச்சா என்று புளியவிளாறை வைத்து நடராஜனை மட்டும் முழங்காலுக்குக் கீழே விளாசித்தள்ளுவார். அடிப்பதிலும் அவர் ஒரு நெறிமுறையைக் கடைப்பிடிப்பவர். சிலர் தலையில் கொட்டுவார்கள். சில ஆசிரியர்கள் கைப்பிரயோகமாக கன்னத்திலும் முதுகிலும் அடிப்பார்கள். சிலர் அடி ஸ்கேல். சிலர் தன் கை வலிக்கப்படாது என்பதற்காக அடுத்த பையனை விட்டு 'அவன் தலையில் பதினாறு கொட்டு கொட்டுடா' என்பார்கள். ஆனால் கந்தசாமி சார் எப்போதும் பையனைத் தனியாக முன்னால் வரச்சொல்லி மைதானமாக ஒரு இடத்தில் நிறுத்தி அவன் சுற்றிச் சுற்றி வர முழங்காலுக்குக் கீழேதான் அடிப்பது.

அவருடைய அடிமுறைக்குப் பயந்த மாணவர்கள் அவரைத் தெருப்பக்கம் கண்டாலே ஓடி ஒளிவது வழக்கம். பெரும்பாலான ஆசிரியர்களைப் போலவே அவரும் மேலத்தெருவில்தான் குடியிருந்தார். அதனால் நடராஜன் தெருப்பக்கம் அவர் வர வாய்ப்பில்லை என்றாலும் அவர் அவனுடைய நெஞ்சிலே குடியிருந்தார். 'எந்நேரமும் என் பாடம்னா ஒனக்கு அவ்வளவு இளக்காரமா' என்று கேட்டுக் கொண்டே இருப்பார்.

ஒவ்வொரு பரீட்சை முடிந்து திருத்திய பேப்பர்களை வகுப்பில் கொடுக்கும் நாள்தான் துன்பகரமான நாள். பேப்பர் கட்டு கையில் இருக்க கந்தசாமி சார் ஒவ்வொரு பையனின் பேரை வாசித்து அவனிடம் பேப்பரை கொடுப்பார். நடராஜன் பேப்பர் கைவரும் போது தலையை நிமிர்த்தாமல் அவன் பெயரை வாசித்துவிட்டு பேப்பரைப் பார்த்தே, சத்தமாகப் பேசுவார். 'நீ ..திருந்தமாட்டே, திருந்தமாட்டே' என்று ஆவேசம் வந்தவர்போல கத்தியபடி புளிய விளாறை எடுப்பார்.

ஒரு முறை கணக்குப் பேப்பரில் நடராஜன் அவருக்கு மனம் உருக ஒரு கடிதம் எழுதியிருந்தான். 'வேண்டுமென்று நான் கணக்கில் பெயிலாகவில்லை. தன் குற்றம் எதுவுமில்லை. வச்சிக்கிட்டு நான் வஞ்சகம் செய்யவில்லை. தெய்வமே!' என்று அக்கடிதத்தை எழுதிக் கொண்டிருந்த போதே வழிந்த கண்ணீர் எழுதின மீது தெறித்து அக்கண்ணீரும் எழுத்தோடு பதிவாகியிருந்தது.ஆனால் அந்தக் கடிதமும் கந்தசாமி சாரின் மனதைத் தொடவில்லை. மாறாக அவருடைய ஆவேசம் மேலும் கூடி வெறி தலைவிரித்தது. 'கணக்குப் போடுடான்னு சொன்னா ராஸ்கல் கதையா எழுதிக்கிட்டு இருக்கே..' என்று கூட நாலு இழுப்பு.

ராவும் பகலும் புஸ்தகமும் நோட்டும் கண்ணீருமாகக் கிடக்கும் மகனைக் கண்டு மனம் பொறுக்காத அவனுடைய ஆத்தா எப்படித் தன் செல்ல மகனுக்கு உதவுவது என்று தெரியாமல் மறுகி மறுகி வந்தாள். அந்த மனுசனிடம் சொன்னால் போசாம 'ஆடு மேய்க்க அனுப்புவியா.. ஒங்கண்ணங்காரன் சொன்னான்னு ஆட்டம் போட்டுக்கிட்டு அலையுறே' என்பார். யோசித்து யோசித்து கடைசியாய் ரெண்டு வருசமாகக் குலதெய்வம் சுடலைமாடனுக்குக் கொடை கொடுக்கப் போகாததுதான் ஒரு குத்தமாக இருக்குமோ என்று அஞ்சித் தன் மகன் படிப்புக்காக ஒரு கிடாயை நேர்ந்துவிட்டாள். இந்த வருசம் கட்டாயம் கிடா வெட்டிப் பொங்க வைப்பதாக நேர்த்திக்கடன் போட்டாள். மகன் ராவும் பகலும் படிக்க அவன் ஆட்டுக்குப் புல் கொண்டு வந்து போட என்று எட்டாம் வகுப்பு இறுதித் தேர்வு வந்து சேர்ந்தது.

பரீட்சை முடிந்த மறுவாரம் வண்டி கட்டிக்கொண்டு எல்லோரும் விளாத்திகுளம் போனார்கள். பல காட்டுச் சனங்களும் மாடன் கோவிலில் கூடியிருந்தார்கள். ஆட்களின் சத்தத்தைவிட ம்மே...ம்மே..என்கிற ஆடுகளின் சத்தம் தூக்கலாகக் கேட்டது.குலதெய்வம் கோவிலுக்குப் போவது நடராஜனுக்கு ரொம்பப் பிடிக்கும். பொதுவாகவே நடராஜன் ரொம்ப பக்தியான பையன். அவனுடையஆத்தாளுக்கும் அது ரொம்பப் பிடிக்கும். நல்ல பையன்களைத்தானே ஆத்தாமார்களுக்கு பிடிக்கும்.

ஆகவே நடராஜன் பக்தி மிக்க நல்ல பையனாகவே வளர்ந்தான். அதிலும் குலதெய்வம் கோவிலுக்குப் போவது ரொம்பவும் பிடிக்கும். புளியோதரை கிண்டிக்கொண்டு ஒருநாள் பூராவும் வண்டியில் சாப்பிட்டுக்கொண்டே போவது ரொம்ப ஜாலியாக இருக்கும். அங்கே கோயிலிலும் ஏராளமாகப் புளியமரங்கள் இருக்கும். அவற்றில் அவனுடைய மரம் என்று ஒன்று உண்டு. எப்பவும் அதன் மீது ஏறி அதன் கிளைகளில் உட்காரத் தோதாக இருக்கும் ஒரு கொப்பில் ரெண்டு பக்கமும் காலைத் தொங்கப்போட்டபடி உட்கார்ந்து விடுவான்.அங்கிருந்து பார்த்தால் சாமியும் நன்றாகத் தெரியும். சனங்கள் வரிசையாக வந்து கிடாய்களை வெட்டுவதும், சாமி வந்து ஆட்கள் சங்குச்சாங்குன்னு ஆடுறதும் நல்லாத் தெரியும்.

சுடலைமாடனின் காலடியில் ரெண்டு வேட்டை நாய்கள் நாக்கைத் தொங்கப்போட்டபடி தயாராக நிற்கும். மாடனின் கையில் பெரிய அருவா. அவருடைய நாக்கும் வெளியே நீட்டியபடிதான் இருக்கும். சாமியைப் பார்த்தபடி மேலே உட்கார்ந்திருந்த நடராஜன் மூளையில் ஒரு மின்னல் வெட்டியது கிடாவெட்டுகளும் வேட்டை நாய்களும், ஆகோ அய்யாகோ என்ற கூப்பாடுகளும் கீழே அண்டாக்களில் கொதித்துக் கொண்டிருக்கும் கறிக்குழம்பு வாசனையும் புடைசூழ ஆவேசமாக நிற்கும் நம்ம சுடலை மாடசாமிக்கும் கல்விக்கும் என்ன தொடர்பு இருந்துவிட முடியும். கல்வித்துறையில் அவருக்கு செல்வாக்கு உண்டா? அவரால் நம்மைப் பாஸ் பண்ண வைக்க முடியுமா? என்கிற சந்தேகக் கோடுகள் ஒரு கணம் தோன்றி மறைந்தன.

அவனுடைய ஆத்தாவுக்கு எந்த சந்தேகமும் இல்லை. தொங்குவெட்டு விழாமல் ஒரே வெட்டி அவர்களுடைய கிடாதலை வேறு உடல் வேறாக விழுந்துவிட்டது. மாடன் கிருபை. பொங்கல் பானை கிழக்குத் திசையில் பொங்கிவிட்டது. இந்த வருசம் என் மகன் பாசாகிவிடுவான். சுடலைமாடன் வரம் கொடுத்துவிட்டான்.

கொடை முடிந்து ஊர் வந்து சேர்ந்த ராத்திரி வாசலில் மல்லாந்து படுத்தபடி வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான், நடராஜன். புளியமரத்தில் கிடைத்த ஞானம் மேலும் தர்க்கரீதியாக விரிந்துகொண்டு போனது. நம்ம சாமிகள் எல்லாமே கிடாவும், கறியுமாக படிப்பு வாசனை இல்லாமல் இருக்க மேலத்தெருவில் அவுக சாமியெல்லாம் எப்படி சாந்தமாக சர்க்கரைப் பொங்கல், நாமக்கட்டி என்று இருக்கின்றன. நம்ம ஆளுக ஏன் இப்படிச் சாமிக கிட்ட மாட்டிக்கிட்டாங்க?

அது போக கல்விக்குச் சாமி சரஸ்வதி என்றுதான் சொல்கிறார்கள். சரஸ்வதிக்கு எந்தக் கிராமத்திலும் கோயில் கிடையாது. கிடாய் வெட்டிப் பொங்கல் வைப்பதும் கிடையாது. அதனால்தான் கிராமத்துப் பையன்களுக்கு சரியாப் படிப்பு வரலையோ என்னமோ ஆனால் மேலத்தெருவில் பிள்ளையார் கோவில் இருக்கிறது. காலண்டர் படங்களில் பிள்ளையார் நோட் புக்கில் எழுதிக்கொண்டிருப்பதை நடராஜன் நிறைய பார்த்திருக்கிறான். மீண்டும் பளிரென ஒரு மின்னல் வெட்டியது.

அதற்கு மறுநாள் காலையிலிருந்து அவன் ஆளே மாறிவிட்டான். அதிகாலையில் குளித்து ஆளுக்கு முந்தி மூனுதெரு தாண்டி பிள்ளையார் கோவிலுக்குப் போய்விடுவான். பிள்ளையாருக்குப் பிடித்தமான எண் 108 என்பதால், தினசரி காலையில் 108 தோப்புக்கரணம் போட ஆரம்பித்தான். இரண்டே இரண்டு கோரிக்கைதான் வைத்தான்.

1) கணக்கிலும் ஆங்கிலத்திலும் பாஸ் பண்ண வேண்டும் (ஜஸ்ட் பாஸ் ஆனால் போதும்)

2) கணக்கு வாத்தியார் கந்தசாமியை வேறு ஊருக்கு மாற்றிவிடவேண்டும்.

நடப்பது நடக்கட்டும் என்று அவன் தினசரி 106,107,108 என்று மூச்சிரைக்க எண்ணிக்கொண்டிருந்தபோது ரிசல்ட் போட்டுவிட்டார்கள். நடராஜன் பாஸ். எட்டிலிருந்து ஒன்பதுக்கு ஒரே ஆண்டில் பாஸ் பண்ணிவிட்டான். ஆத்தா சுடலை மாடனை நினைத்துக் கும்பிட்டு மஞ்சள் துணியில் துட்டை முடிந்து வைத்தாள். நடராஜனுக்கு சந்தோசத்தில் கிறுக்குப் பிடித்துவிட்டது. நேராக பிள்ளையார் காலில் போய் விழுந்தான். ஒரு தேங்காயை வாங்கிக்கொண்டு தெருப்பையன்கள்

பத்துப் பேரை அழைத்துக் கொண்டு மறுபடி பிள்ளையார் கோயிலுக்குப் போனால் பள்ளத் தெரு ஆட்கள் தேங்காய் விடலை (சிதறு தேங்காய்) போட்டால் மேலத் தெரு பையன்கள் பொறுக்க வர மாட்டார்கள். எனவே கூடவே படை கொண்டுபோய் தேங்காயை எறிந்து முடிந்தான். பிள்ளையார் மீது பாசம் அதிகமானது. பெயிலானது கூடப் பெரிய துயரமில்லை. திரும்பவும் அதே வகுப்பில் புதுப்பையன்களோடு உட்கார்வதும் அவனுகள் அண்ணே..அண்ணே...என்று கூப்பிடுவதும்தான் பெரிய அவமானம்.

உற்சாகமாக ஒன்பதாம் வகுப்பு துவங்கியது. அவனுக்கு எப்பவும் பள்ளிக்கூடம் போவது ரொம்பப் பிடிக்கும். காலையில் முதல் ஆளாகப் போய்விடுவான். ஊரைவிட்டு நாலு கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது ஸ்கூல். ஆகவே மதியச்சாப்பாடும் எடுத்துக்கொண்டு போக வேண்டும். பள்ளிக்கூடத்தில் சாப்பிடுவதற்கு தனி இடம் எதுவும் கிடையாது. ஆனால் பள்ளியைச் சுற்றிலும் வேலிக்கருவை புதராக மண்டிக்கிடக்கும். பல ஊர்ப் பையன்களும் படிக்க வருவதால் ஒவ்வொரு ஊர்ப்பையன்களும் செட்டுசெட்டாக ஒரு குழுவாகி குழுவுக்கு ஒரு வேலிப்புதரை பிடித்துக் கொள்வார்கள். முள்ளை வெட்டி, குகை மாதிரி பாதை செய்து உள்ளே செதுக்கி வட்டமாக சமதளம் செய்து கொள்வார்கள். இந்த வேலையெல்லாம் ஞாயிற்றுக்கிழமைகளில் நடக்கும். மண்வெட்டி, அருவா சகிதம் போய் சுத்தம் செய்து வருவார்கள் சில குரூப்புகள் சாணியெல்லாம் கரைத்து தரையை மெழுகி பூஞ்சோலை மாதிரி ஆக்கி வைத்திருப்பார்கள். பையன்களுக்கிடையே சண்டை வரும்போது அடுத்தஊர்க்காரர்கள் சாப்பிடும் இடத்தில் யாருக்கும் தெரியாமல் மலம் கழித்து நாசம் செய்வார்கள். பொதுவாக மதிய உணவு நேரம் எல்லாப் பையன்களுக்கும் பிரியமான நேரம். புதருக்குள் சாப்பிட்டு பக்கத்து வயக்காட்டில் கிணற்றில் இறங்கி தூக்குச்சட்டிகளைக் கழுவி ஜல்காரர்டம் ஜஸ் வாங்கிச் சாப்பிட்டு என்று மதிய இடைவேளை வசீகரங்களுடன் கழியும்.

நடராஜன் ஒவ்வொரு ஞாயிறும் தங்கள் குழுவின் டைனிங்புதரைச் சுத்தம் செய்துவிட்டு வருவதோடு நிற்பதில்லை.தன்னுடைய நைன்த் சி வகுப்பறையை ஒட்டடை எடுத்து பெருக்கி சுத்தம் செய்து தரைக்கு சாணி தெளித்து ஊமத்தைப்பூவும், அடுப்புக்கரியும் தண்ணீர் விட்டு அரைத்து கரும்பலகையில் பூசிக் காய வைத்து விட்டுப்போவான். அவனுடைய சேவையை ஆசிரியர்கள் பாராட்டுவார்கள்.

ஆனால் கந்தசாமி சார் இதற்கெல்லாம் மசியமாட்டார். ஒன்பதாவது வகுப்புக்கும் அவரே கணக்கு எடுக்க வந்து கண்களில் ஜென்மப் பகையுடன் நடராசனைப் பார்த்துக்கொண்டிருந்தார். அடிக்கடி அவனிடமே கேள்வி கேட்டு அடிகளைக் கொடுப்பார். இந்த ஆண்டு அடியோடு நிறுத்தாமல் புதிய வசனம் ஒன்றும் சேர்த்துக்கொண்டார். வகுப்பிலேயே உசரமான ஆளு யாரு... என்று மாணவர்களிடம் கேட்பார். நடராஜன் என்று பதில் வரும்.."அந்த உயர்ந்த மனிதர் கொஞ்சம் இப்படி வந்து நில்லுங்க" என்று அழைப்பார். கையில் பிரம்பை ஆளு மட்டும் கொக்காங்கொக்கான்னு வளர்ந்தா போதாது. எது வரணும் சொல்லுங்க நடராஜன் சார். எது வரணும் எது வரணும்...என்று கேட்டுக்கொண்டே விளாசுவார்.Ill'என்னா என்னான்னு தெரியாம ஒம்பதாப்புக்கு வந்துட்டான் ராஸ்கல்.

ஆனால் பிள்ளையார் லேசாக கடைக்கண் திறந்தார். கணக்கு வாத்தியாரிடம் டியூசன் எனப்படும் டியூஷன் படித்தால் கணக்கில் பெயிலாக மாட்டார்கள் என்று ஒரு துப்பு நடராஜனுக்கு கிடைத்துவிட்டது அன்று மாலையே அவர் வீட்டு வாசலில் போய் நின்றான். வாயெல்லாம் சிரிப்பாக சார் வரவேற்றார். "மாசம் நாப்பது ரூவா குடுத்திருவியாலே" என்று கேட்டார். அன்று முதல் கணக்கு டியூசன் துவங்கியது. பாடம் புரிந்ததோ புரியவில்லையோ கந்தசாமி சார் ஒரே வாரத்தில் ரொம்ப திருந்தி வந்துவிட்டார். அதற்குக் காரணம் அவருடைய மனைவி. அந்தம்மாவுக்கு நடராஜனை ரொம்பப் பிடித்துவிட்டது. அவர்கள் வீட்டு ஆட்டுக்கும் அதன் குட்டிக்கும் அதை விட ரொம்பப் பிடித்துவிட்டது நடராஜனை தினசரி டியூசன் வரும்போது நோட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொள்ள மறந்துவிட்டாலும் வாத்தியார் வீட்டு ஆடுகளுக்கு குழை ஒடித்து வர மறக்கமாட்டான்.

ஆடுகளுடைய பாஷை ஏற்கனவே நடராஜனுக்குத் தெரியுமாதலால். ரெண்டே நாளில் நடராஜனைக் கண்டதும் குட்டி துள்ளிக் குதித்து கொண்டு ஓடி வந்து அவன் காலடியில் உரசிக்கொண்டு நிற்கும்படி செய்துவிட்டான். அவன் ஆடுகளுக்குப் புல் நறுக்கிப்போடும் லாகவத்தைக் கண்டு வியந்து போன கந்தசாமி சார் 'எ...எனக்கும் சொல்லி கொடப்பா.' என்று வேண்டிக்கொண்டார். அவனும் தினசரி அரை மணி நேரம் அரிவாளை எப்படிப் பிடிப்பதும், கட்டையை எப்படி வைப்பது இடது கையில் புல் எப்படி இருக்கவேண்டும் என்றெல்லாம் விளக்கினான். ஆனாலும் நடராஜனின் தொழில்நுட்ப நேர்த்தி சாருக்கு ஒரு மாதமாகியும் கைவரவில்லை. அவனும் அவரை அன்பாகக் கடிந்து கொள்வான். "ம்....அரிவாளை எப்படி பிடிக்கச் சொன்னா எங்க பிடிக்கிறீங்க சார்..விரல் போயிடும்." ஆனாலும் வாத்தியாரின் மர மண்டைக்கு அது கடைசிவரை ஏறவில்லை.

அடுத்த பரீட்சையில் கணக்கில் 60 மார்க் சொளையாக வந்து விழுந்தது. மாணவர்கள் யாருக்கும் நம்பிக்கையே வரவில்லை. ஏதோ பெரிய சூழல் நடந்திருப்பதாக தங்களுக்குள் பேசிக்கொண்டனர். நடராஜன் இல்லாத போது அவன் பரீட்சைப் பேப்பரை எடுத்துப் பார்த்தார்கள். எல்லாம் சரியாகவே இருந்தது.

108ஐ216ஆக ஆக்கிவிட்டான். அதனால் காலெல்லாம் உளைச்சல் எடுத்தது. ஒரு தடவை 216ஆக்கிவிட்டால் மறுபடி குறைக்க முடியாதே பிள்ளையாருக்கு சடவு வந்துவிட்டால் மார்க் போயிடுமே ஆனாலும்ரெண்டு மாசம் விடாமல் மொத்தம் 13176தோப்புக்கரணம் போட்டு முடித்தபிறகும் இங்கிலீசில் 9 மார்க் என்ற ஒத்தைப்படையிலேயே நின்றது. கேவலமாக இருந்தது.ஆங்கில ஆசிரியர் வழக்கம்போல ம்..என்று அவன் பெயரைக் கூட வாசிக்காமல் பேப்பரை அவன் மேல் எறிந்தார். நீயெல்லாம் படிச்சி..

அந்த ஆத்திரத்துடன்தான் அவன் பேப்பரை பிள்ளையார் மேல் வீசியது. ராத்திரி படுக்கையில் மீண்டும் ஒரு மின்னல் வெட்டியது. பிள்ளையார் என்றாலே கணக்குக்கு மட்டும்தானே? அவர் நம்ம ஊர்சாமி ஆச்சே? அவருக்கே இங்கிலீஷ் தெரியாதே. நமக்கு எப்படி உதவி செய்ய முடியும்? வெட்டியாக 216 போட்டுக்கிட்டு இருக்கமே என்று நினைத்ததும் கால் வலி அதிகமானது.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை காலையில் 'டாண்' என்று மணி அடிக்கிற போது அவன் 'சர்ச்' வாசலில் நின்றான்.நாலு கிலோமீட்டர் நடந்து நல்லம்மாள்புரம் போனால் தான் அந்த சர்ச் இருக்கும். முதலில் தயக்கம் இருந்தாலும் நாள்பட பழகி விட்டது.

ஞாயிறு தவறாமல் வந்து முட்டங்கால் போட்டு, பிளீஸ் ஜீசஸ்...ஹெல்ப் மீ இங்கிலீஷ் ஒன்லி..ஜஸ்ட் பாஸ் ஒன்லி... என்று அவருக்குப் புரிகிற மாதிரி ஆங்கிலத்திலேயே பிரே பண்ணுவான். சாமியார் வசனமெல்லாம் வாசிப்பார். ஆனால் அவன் நேரடியாக யேசுவானவரோடு பேசிக்கொண்டிருப்பான்.

வாராவாரம் வரும் அவன் யார் என்று ஒருநாள் ஃபாதர் பிடித்துக் கொண்டார். எல்லாம் கேட்டு மகிழ்ந்தார். நிறைய வேதப்புத்தகங்கள் கொடுத்து விட்டில் போய் படி மகனே என்று வாழ்த்தி அனுப்பினார். ராத்திரிவந்து பொறுப்பாக அந்தப் புத்தகங்களை எல்லாம் படித்தான். எல்லாமே ஆடு மேய்ப்பதைப் பற்றிய கதைகளாகவே இருந்தது. வெறுத்துப்போனது அவனுக்கு. எங்கே போனாலும் இந்த ஆடு நம்மளை விடாது போலிருக்கே. என்றாலும் பிரேயர்கள் தொடர்ந்தன. ஆனால் கர்த்தர் கண் திறக்க மறுத்தார். இங்கிலீஷ் 8-9 மார்க்கிலேயே நின்று சாதித்தது. SVO, SVOA இவ்வளவுதான் இங்கிலீஷ். 26 எழுத்துதான் என்றெல்லாம் வாத்திமார்கள் சொன்னாலும் ஒரு இழவும் மண்டையில் ஏறவில்லை.

இயேசுநாதருக்கே இங்கிலீஷ் தெரியாதப்பா..அவருடைய தாய்மொழி ஹீப்ரு அல்லவா? என்று ஒரு நாள் தற்செயலாகப் பேசிக்கொண்டிருந்த போது அவர்கள் தெருவைச் சார்ந்த குமரன் அண்ணன் சொன்னார். நடராசன் அன்று

மனம் உடைந்து போனான். முட்டி தேயக் கும்பிட்டது வலித்தது.

யாரைத்தான் நம்புவது? யார் துணையை தேடுவது என்பது புரியாமல் மனம் குழம்பியது. நடைப்பிணமாக சிலநாள் பிள்ளையார் கோயிலுக்கும் சர்ச்சுக்கும் என்று நடந்து கொண்டிருந்தான். பல இரவுகள் கண்ணீரில் கரைந்தன. நாட்கள் நிற்பதில்லையே. முழு ஆண்டுத்தேர்வும் நெருங்கி விட உயிரை வெறுத்து மனப்பாடம் செய்தான். எழுதிப் பார்த்தான். ஒரு வார்த்தை மறந்தாலும் முழு எஸ்ஸேயும் நின்று போனது. சாய்ஸ் கேள்வியை நம்பி படிக்காமல் விடும் பகுதியிலேயே கேள்விகள் வந்து கழுத்தை அறுத்தன. கிராமர் கடைசிவரை புரியவில்லை. கண்ணை மூடிக்கொண்டு A,B,C என்று வரிசையாக டிக் அடித்து வைத்தான்.

லீவுக்கு மாமா வந்தபோது ரிசல்ட் வந்துவிட்டது. அவன் பாஸ். ஒன்பதாம் வகுப்பு பாஸ். நிச்சயமாக பெயில்தான். கணக்கும் ஆங்கிலமும் கவுத்திடே தீரும் என்று இருந்தவனுக்கு பாஸான அதிர்ச்சி தாங்க முடியவில்லை. வெரிகுட் என்று மாமன் தட்டிக்கொடுத்தான்.

ஆனால் அந்த மகிழ்ச்சி ஒரு வாரம் கூட நீடிக்கவில்லை. பள்ளிக்கு புது ஹெட்மாஸ்டர் வந்து விட்டார். அவர் ரொம்ப ஸ்ட்ரிக்ட், யாருக்கும் பயப்படமாட்டார் என்று பேசிக்கொண்டார்கள்.

பத்தாம் வகுப்பில் எல்லாப் பையன்களையும் சேர்க்க முடியாது என்று சட்டம் பேசினார். ஒரு பதிமூனு பையன்கள் வெளியே நிறுத்தப்பட்டார்கள், நடராஜனும் அந்த லிஸ்டில் இருந்தான். அந்தப் பதிமூனு பேரில் எல்லா சாதிப் பையன்களும் இருந்தார்கள்.

கிரேஸ் மார்க்போட்டு தூக்கி விட்டதனாலதான் உங்க பையங்க பாஸ் பண்ணியிருக்காங்க. பழைய கதை எப்படியோ, நான் அப்படி இருக்க மாட்டேன் என்று அவர் பேசிய பலதும் வந்திருந்த பையன்களின் பெற்றோர்க்குப் புரியவில்லை. எப்படியாச்சும் பிள்ளைகளை சேர்த்துக்கிடணும் என்றனர். எல்லோரையும் சேர் போட்டு உக்கார வைத்து காப்பி கொடுத்து நயமாகப் பேசி இங்கே இடமில்லை என் கையில் ஒன்னுமில்லை என்று சொன்னதில் பலர் பாவம், அவர் என்ன செய்வார் வாங்கடா என்று பிள்ளைகளை பத்திக்கொண்டு போய்விட்டார்கள்.

நடராசன் வீட்டுக்கு வந்து படுத்துக் கொண்டு அழுதான் அம்மா போய் மாமனைக் கூட்டிட்டு வந்தார். அன்று இரவே மாமனுடன் புது ஹெட்மாஸ்டர் வீட்டுக்கே போனார்கள். மேலத்தெருவில் பெரிய நாய்க்கர் வீட்டை அடுத்து அவர் வாடகைக்கு வீடெடுத்து இருந்தார்.

எனக்கு ஸ்கூல்தான் முக்கியம் அரசுப்பள்ளிகளுக்கு இன்னைக்கி நாட்டிலே மரியாதை இல்லை. என்ன காரணம்? இறுதி வகுப்பு ரிசல்ட் தான். நல்ல மார்க் எடுத்த பையன்களை சேர்த்து தனியார் பள்ளிகள் ரிசல்ட் காமிச்சி நல்ல பேர் வாங்கறாங்க..நான் சமரசமே செய்ய மாட்டேன். உங்க பையனை வேற ஸ்கூல்ல கொண்டு போய் சேருங்க. நீங்க இவ்வளவு தூரம் சொல்றதுனாலே புளியம்பட்டி ஸ்கூல் ஹெட் மாஸ்டருக்கு லெட்டர் தாரேன். போய்ப் பாருங்க...என்று அனுப்பிவிட்டார்.

புளியம்பட்டிக்கு மாமனுடன் போனான். அந்த ஹெட் மாஸ்டர் அன்புடன் வரவேற்றார்.

ஏற்கனவே பத்தாம் வகுப்பில் 108 பேரை சேத்துட்டேன். இவனையும் சேர்த்தா 109. வாத்தியார்கள் கிடையாது. இங்கிலீஷ் பாடத்துக்கு ஒரே வாத்தியார்தான். மரத்தடியில் மைக் வச்சுத்தான் பாடம் நடத்துவோம். போர்டிலே எழுதிப்போட்டா பாதிப் பேருக்கு தெரியாது. ஆடு மேய்க்கிற மாதிரி மேய்ச்சுக்கிட்டிருக்கோம்.

நடராஜனுக்கு அந்த ஸ்கூலை பிடிக்கவில்லை. அது அவனுடைய ஸ்கூல் இல்லை என்று முதல் பார்வையிலேயே பட்டுவிட்டது. மாமனுக்கும் பிடிக்கவில்லை. மறுபடியும் உள்ளூர் ஸ்கூலுக்கே வந்தார்கள். புது ஹெட்மாஸ்டர் ரிசல்ட்டுக்காக ஆசிரியர்களையும் கசக்கி எடுப்பார். ரொம்பக் கடுசு என்று பேர் வாங்கி ஒரு பிரச்சனையாகத்தான் இங்க மாற்றலாகி வருகிறார் என்ற செய்தி முன்கூட்டியே வந்து ஆசிரியர்களின் வயிற்றில் புளியைக் கரைத்தது. புது ஹெட்மாஸ்டரை பார்க்க வராண்டாவில் காத்திருந்த போது நடராஜனின் மாமனிடம் ஒருஆசிரியர் ரகசியமாக வந்து பேசாம இதை சாதிப்பிரச்சனையாக மாத்துங்க. அப்பத்தான் இவன் சரிக்கு வருவான். சேர்க்க மாட்டேன்னு சொல்ல எந்த சட்டமும் கிடையாது என்று காதில் ஓதிவிட்டு வேகமாக மறைந்து போனார்.

மாமனுக்குச் சிரிப்பு வந்தது. ஆழமான வருத்தமும் கூடவே வந்தது. நம்மைப்பற்றி என்னதான் புரிந்து வைத்திருக்கிறார்கள் இவர்கள் என்கிற விரக்தியும் சிரிப்பு. சாதி எங்களுக்கு ஒரு மலிவான ஆயுதமல்ல. சுமை எம்மைக் கீழே கிடத்தி மேலேறி அழுக்கும் சுமை. மாமனின் கண்கள் கசிந்தன.

ஒவ்வொரு ஆண்டும் லீவில் வந்து இருபது பிள்ளைகளை பள்ளியில் சேர்த்து விட்டுப் போவார்...அடுத்த ஆண்டு வரும்போது அதில் ஆறேழு பிள்ளைகள் ஆடு மேய்க்கப் போயிருக்கும். தெருவில் உள்ள இளைஞர்களை அழைத்து சத்தம் போடுவார். போர்ப்படை பாசறைன்னு போர்டு மாட்டினா போதுமாடா ? நம் பிள்ளைக ஏன் பெயிலாகுது, என்ன உதவி தேவைன்னு கூட நீங்க பாக்க மாட்டீங்களா? கம்பு தூக்கறதிலே மட்டுமில்லை. அறிவிலேயும் நம்ம பிள்ளைக யாருக்கும் குறைஞ்சவங்க இல்லை..அதை இந்த உலகத்துக்கு காட்ட வேணாமா?

முகம் தொங்கிப்போன நடராஜனைப் பார்க்க மாமனுக்கு வேதனையாக இருந்தது. நேற்று வந்த 13பேரில் 12பேரை இன்று காணோம். நடராஜனும் அவரும் வராண்டாவில் ஒரு மணி நேரமாகக் காத்து நின்றார்கள். தன் பள்ளிக்கூடமே இப்போது நடராஜனுக்கு வேறுமாதிரித் தெரிந்தது.

மாமனை நிமிர்ந்து பார்க்க மனமின்றி தலைகுனிந்து நின்று கொண்டிருந்தான். சீட் கிடைக்குமா? கிடைக்காதா? ஏதாச்சும் ஒரு சாமியை வேண்டிக்கொள்ளத் தோன்றியது.எந்த சாமியை வேண்டுவது. பெருமூச்சுடன் மாமனை நிமிர்ந்து பார்த்தான். அவன் கண்களில் கண்ணீர் வழிந்தது. மாமன் அவனைச் சேர்த்துக் கட்டிக்கொண்டார். அவருக்கு வார்த்தைகளில்லை. ஹெட்மாஸ்டர் உள்ளே வரச்சொல்வதாக ப்யூன் வந்து அழைத்தார்.

ச. தமிழ்ச்செல்வன்

மதுரகவி பாஸ்கரதாஸ், மே.சு.சண்முகம், கோணங்கி, முருகபூபதி என்கிற எழுத்துக்கொடி வழியின் ஒரு கிளையாய் பிறந்த ச.தமிழ்ச்செல்வனின் எழுத்து பயணம் வெயிலோடு போய், வாளின் தனிமை, இருட்டு எனக்குப்பிடிக்கும், நான் பேச விரும்புகிறேன், இருளும் ஒளியும், ஜிந்தாபாத் ஜிந்தாபாத், ஆண்கள் சமைப்பது அதனினும் இனிது என்று தொடர்கிறது. நேருக்கு நேரான வார்த்தைகளில் நிகழ்வுகளை உடைறுத்து, மனங்களின் அடுக்குகளில் தத்தளித்து, வாழ்வை இழுத்து வந்து கேள்விக்குள் நிறுத்தும் கதைகள் இவருடையவை.

# பூக்கள் போலும் அருவிகள் போலும்

**- திருவையாறு எஸ். பாலகுமார்**

பச்சை அகலக்கரை போட்ட பன்னீர் வேட்டியில் இருந்தது யானை. விசாலமான அந்த அறையில் இங்கும் அங்குமாகச் சுற்றித் திரிந்துகொண்டிருந்தது. யானை மேல் ஆரோகணித்திருந்தாள், அபிநயா. இரண்டு முன் பற்களை இழந்து அதனால் மேலும் பொலிவாகச் சிரிக்கும் அபிநயா. அபிநயா சொன்னதையெல்லாம் அந்த யானை தட்டாமல் செய்து கொண்டிருந்தது. அபி இப்போது பாடத் தொடங்கினாள்.

"யானை யானை அழகர் யானை
அழகரும் சொக்கரும் ஏறும் யானை
கட்டுக் கரும்பை முறிக்கும் யானை
காவேரித் தண்ணியைக் கலக்கும் யானை
குட்டியானைக்குக் கொம்பு முளைச்சதாம்
பட்டணமெல்லாம் பறந்தோடிப் போச்சுதாம்."

"ஏ....யானை! மெதுவா போ! மகாராணி ஊரையெல்லாம் சுத்திப் பார்க்க வேணாமா..இப்பதானே அரண்மனை அகழியைத் தாண்டியிருக்கோம். இன்னும் ஒத்தைக்கால் மண்டபம் வரனும்.. குதிரை லாயம் வரனும், பசு மடம் வரனும், பொறுமையா போ யானை..."

யானை இடதும் வலதுமாகத் தலையாட்டியது. பிறகு தன் முன்னங்காலை நீட்டியது. முன்னங்காலை நீட்டினால் மகாராணி நகர்வலம் முடிந்தது என்று அர்த்தம். யானை மீதிலிருந்து முன்னங்கால்படி வழியாக இறங்கினாள் அபிநயா.

யானை மூச்சிரைக்க சுவரில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டது.

"போதுண்டி செல்லம்..யானைக்கு ரொம்ப களைப்பா இருக்கு." என்றது.

"போ தாத்தா! பெரிய பெரிய அரண்மனைக் கதவெல்லாம் யானை மோதினா திறந்துக்கும்னு நீதானே சொன்னே?"

"ஆமா"

"என்னைத் தூக்கிட்டு ஒரு ரவுண்டு வர்றதுக்குள்ளே புசுபுசு ன்னு மூச்சு வாங்கினா அது பேரு யானை இல்ல.. பூனை.."

"தாத்தாவுக்கு எழுபது வயசாச்சுடா குட்டி... இதுக்கு மேலே முடியாதுடா!"

அபிநயாவுக்கு வா.வி. சண்முகசுந்தரம் என்ற வி.வி.எஸ். நிறைய விளையாட்டுக்களைச் சொல்லிக் கொடுத்திருக்கிறார். கிச்சுக்கிச்சு தாம்பாளம், சாட்பூட்த்ரீ, ஒன்யாங் கன்டு என்று எத்தனையோ இருந்தாலும் அபிநயாவுக்குப் பிடித்தது. இந்த யானை விளையாட்டுதான். இருமருங்கிலும் நாட்டு மக்களெல்லாம் பார்த்திருக்க, கம்பீரமாக யானை மேல் லேசாக அசைந்தபடி ஊர்வலம் செல்வது ஒரு தனி இன்பம்.

"தாத்தா..ஒரே ஒரு தடவை.." என்று அபிநயா வி.வி.எஸ்.ஸின் தாடையைப் பிடித்துக் கெஞ்சம் நேரத்தில் கதவு திறந்தது. விரசேது மௌனமாக ''டை'' முடிச்சை நிரடியபடி தன் அப்பாவை ஒரு முறையும், மகளை ஒரு முறையும் பார்த்துவிட்டுத் திரும்பிச் சென்றான்.

இரவு சாப்பாட்டு மேஜையில் அப்பளம் நொறுங்கும் சத்தம் ஐம்பது டெசிபல் அளவுக்கு மேல் இருப்பதாகப் பட்டது. பாதி ரசம்சாதத்தில் வி.வி.எஸ். இருந்தபோது விரதேது மெதுவாக.

''ஸ்வீடன்ல ஒரு பையன். ஏழு வயதுதான். 'செஸ்'ல உலக சாதனை பண்ணியிருக்கான். எட்டு பேரை ஜெயிச்சு உலகத்தோட 'யங்கஸ்ட்' செஸ் சாம்பியன் ஆகியிருக்கான். நம்ம அபிக்குட்டி செஸ்ல எவ்வளவு புத்திசாலிங்கிறது உங்களுக்கே தெரியும்.''

வி.வி.எஸ். தலையை உயர்த்தினார்.

''அபிக்குட்டியை இன்டர்நேஷனல் செஸ் சாம்பியனா ஆக்கற முயற்சியில நானும் அவ அம்மாவும் ஈடுபட்டிருக்கோம் அந்த ஸ்வீடன் பையனோட சாதனையை முறியடிக்கனும்னா அபிநயா அதை ஆறு வயசுக்குள்ள பண்ணனும்..அபிக்குட்டிக்கு ஆறு வயசு முடிய இன்னும் எட்டு மாசம்தான் இருக்கு... அதனால..''

''அதனால?...

''நீங்கதான் உதவி பண்ணனும்''

''என்னன்னு?''

''அபிநயா இந்த சாதனையை அடையறவரைக்கும் நீங்க அவளைத் தொந்தரவு பண்ணக்கூடாது.''

''நான் என்ன தொந்தரவு பண்றேன்?''

''அதான் இந்த ஏய் அபி என்னடி விளையாட்டு அது?''

''யானை விளையாட்டு''

''யானை, குதிரைன்னு அவளைத் திசைதிருப்பாதீங்க...ஏன்னா செஸ்ஸீக்குநிறைய கான்சன்ட்ரேஷன் தேவைப்படும்.''

''ஏன்டா..செஸ்லே யானை, குதிரை விளையாட்டு தானே...?''

''அப்பா நான் சீரியஸா பேசறேன்...''

இதற்குள் சாப்பாடு முடிந்துவிட... திருமதி விரசேது மெள்ள அந்த இடத்தை விட்டு அகல, அபிநயா சாப்பாட்டு மேஜையில் ஏறி உட்கார்ந்து கொண்டு இரண்டு கன்னங்களிலும் கைகளைத் தாங்கிக் கொண்டாள்.

வி.வி.எஸ். பேசத் தொடங்கினார்..

''அபிக்குட்டி பெரிய சாதனைச் சிறுமியா ஆகட்டும். நான் வேணாம்னு சொல்லலை. ஆனா, ஒரு விஷயம்... அறிவு, புத்திசாலித்தனம், திறமை இதெல்லாம் தானா காலப்போக்கில் இயல்பா வர வேண்டிய விஷயங்கள். ஒரு பூ மலர்ற மாதிரி...சின்னச் சின்ன வாய்க்காலா ஓடி தடைகளைத் தாண்டி எல்லாம் ஒரு இடத்துல சங்கமமாகி 'ஓ'ன்னு பேரிரைச்சலோட

அருவி கொட்டுதே அப்படி.''

''இதெல்லாம் ஈவில்.''

''உன்னோட நிறைவேறாத ஆசையை அந்தப் பிஞ்சு மேல திணிக்கறதுக்கு என்ன பேரு?''

''ஓகே! வைத்தாதீங்க. நீங்க அபிக்குட்டியை டிஸ்டர்ப் பண்ணக்கூடாது. அவ்வளவுதான். முடியுமா...முடியாதா?''

''டிஸ்டர்ப் பண்றதுன்னா என்னன்னு எனக்கு விளக்கிச் சொல்லு.''

''அவளைப் பார்க்காதீங்க...அவளோட பேசாதீங்க...கண்ட கண்ட கதைகளையெல்லாம் சொல்லி அவளைக் கெடுக்காதீங்க..அவளோட அம்மா செஸ்ல காலேஜ்லெவல் சாம்பியன் நான் ஸ்டேட் லெவல் செஸ் பண்ணினவன். அபிநயா எங்களை செஸ்ல ஈஸியா ஜெயிக்கறா. உங்களப் பார்த்தா மட்டும் பட்டிக்காட்டு மாங்காத்தா மதிரி யானைங்கிறா .. பூனைங்கிறா..இது வேணாம்.. டெம்போ இருக்காது. கான்சன்ட்ரேஷன் இருக்காது. அவ்வளவுதான். அபி..வா..பிராக்டீஸ் இருக்கு.''

வீரசேது, அபிநயாவுடன் கிளம்ப,வி.வி.எஸ். கூறினார்.

''ஒரு விஷயம் மறந்துடாதே சேது.. குழந்தை குழந்தையாத் தான் இருக்கணும்னு நான் நினைக்கிறேன். இந்தப் பருவம் ரொம்ப நாளைக்கு நீடிக்காத ஒரு அற்புதமான பருவம்.. கடைசி விநாடி வரைக்கும் அதை அவங்க அனுபவிக்கணும். நம்ம அபி அதை இழந்துடக்கூடாதுங்கிறதுதான் என் கவலை..''

இதற்கு ஒரு அலட்சியப் புன்னகையைப் பதிலாகத் தந்து விட்டு வீரசேது போய்விட்டான்.

வி.வி. எஸ்ஸிக்கு விடியற்காலை நிரம்பப் பிடிக்கும். இருள் பிரியாத அரைகுறை வெளிச்சத்தில், நகரில் மிச்சமிருக்கும் பறவைகளின் ஒலியில், எங்கிருந்தோ காற்றின் ஈரத்தோடு ஈரமாக ஒட்டிக்கொண்டு வரும் பக்திப் பாடலில் கரைந்தபடி நடப்பது பிடிக்கும். வி.வி.எஸ் தன்னுடைய காலைநடையைத் துவக்க முயன்றிருந்த வேளையில் பிராக்டீஸ் ரூம் என்று சொல்லக்கூடிய அறையில் இருந்து அபிநயா பேசும் சத்தம் கேட்டது. வீரசேதுவின் அதட்டல் குரலும் கூடவே ஒரு நீண்ட பெருமூச்சுடன் அன்றைய தினத்தைத் துவக்கினார் வி.வி.எஸ்.

வழியில் எதிர்ப்பட்ட சாந்தி வனத்தின் மகிழம்பூ மரங்களை என்று மில்லாத ஒரு புதுப்பார்வை பார்த்துவிட்டுத் திரும்பினார். வீடு திரும்பி நெடுநேரம் வரையில் நாசியில் அந்த மகிழம்பூ வாசனை.

ஒரு வாரம் கரைந்தது.

அபிநயாவைப் பார்க்கவிடாமல் ஒரு சாமர்த்திய வியூகம் அமைத்திருந்தான் வீரசேது. பள்ளி நேரம் தவிர மற்ற நேரங்களில் பிராக்டீஸ் ரூமிலேயே அடைந்து கிடந்தாள் அபிநயா.

அன்றைய இரவு வீரசேது அலுவலகத்திலிருந்து வீடு திரும்பியபோது வி.வி.எஸ்ஸோ அவரது புத்தகங்களோ, உடைகளோ எதுவும் வீட்டில் இல்லை.

குஞ்சுகளால் பிய்த்தெறியப்பட்ட கோழி இறகுகளாலும், நீர் அருந்து விலகி விழுந்த நீர்த்திவலைகளாலும் நிரம்பியிருந்த சாந்தி வனம் என்று சொல்லப்படும் முதியோர் இல்லத்தில் இருந்தார் வி.வி.எஸ்.

சர்வதேச செஸ் போட்டியில் கலந்து கொள்ள அபிநயாவை ஆஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்லும் வரையில் வீரசேது சாந்திவனத்துக்கு வரவில்லை. அன்றொரு நாள் மாலை விமானம் ஏற இருப்பதாகக் கூறிக்கொண்டு அபிநயாவை அழைத்து வந்தான்.

அபிநயா ஓடி வந்து தாத்தா எனக் கட்டிக்கொண்டாள்.

''அபிக்குட்டி.. தாத்தாகிட்ட ஆசீர்வாதம் வாங்கிக்க...''

''ஜெயிச்சிட்டுத்தான் வரணும்''... என்றார்.

அவர்கள் போனபின் அந்த முதியோர் இல்ல நிர்வாகி கேட்டார்.

''ஏன் சார்? இவ்வளவு வசதி இருக்கு..பையனும் நல்ல மாதிரியாத்தான் இருக்காரு. அப்புறம் ஏன் இங்கே?''

''சின்ன விஷயம்தான் மாங்காய் பிஞ்சுல துவர்க்கணும். காயில புளிக்கணும். பழத்துல தான் இனிக்கணும்னேன். அவனுக்குப் புரியலே..புடிக்கலே.. வந்துட்டேன்.''

குழப்பமாகப் பார்த்த நிர்வாகியின் தோளில் தட்டிவிட்டுத் தூங்கச் சென்றார் வி.வி.எஸ்.

அடுத்த ஒரு வாரத்தில் தினசரிகளின் விளையாட்டுப் பக்கங்களைத் தன் பொக்கைவாய்ப் பற்களுடன் அலங்கரித்தாள் அபிநயா.

'இந்திய கிரீடத்தில் மற்றுமோர் சிறகு..'

'ஸ்வீடன் ராணியை வென்ற இந்திய ராணி.'

'அபிநயா! உலகின் இளவயது செஸ் வீராங்கனை'

வீடே கோலாகலப்பட்டது. எக்கச்சக்க விருந்தினர்கள், மாலைகள், பூங்கொத்துகள், பரிசுப் பொருட்கள் மையத்தில் வீற்றிருந்த அபிநயாவுக்கு எல்லாமே புதுசாக இருந்தது.

உற்சாகத்தின் உச்சியில் இருந்து வீரசேது அபிநயாவிடம் கேட்டான்.

''அபிக்குட்டி! இவ்வளவு பெரிய சாதனை பண்ணியிருக்கே..உனக்கு என்ன வேணும் கேளு. என்ன விலையானாலும் பரவாயில்லை. கேளு. இப்பவே வாங்கி பிரசன்ட் பண்றேன்.''

சிலர் அபிநயா காதில் கிசுகிசுத்தனர்.

''கம்ப்யூட்டர் கேளு.''

''நெக்லஸ் கேளும்மா...''

''சான்ட்ரோ கார் கேளுடி...''

உலகின் மிக இளவயது செஸ் சாம்பியன் செல்வி அபிநயா அப்பாவை நேருக்கு நேராகப் பார்த்துக் கேட்டாள்.

''தாத்தாவோட யானை விளையாட்டு விளையாடணும்..''

---

திருவையாறு எஸ். பாலகுமார்

தஞ்சை திருவையாறு அருகே அம்மான் என்ற கிராமத்தை சேர்ந்த எஸ்.பாலகுமாரின் சிறுகதைகள், குமுதம், விகடன் முதலிய இதழ்களில் கதைகள் வெளிவந்துள்ளன.

# மாறுவேடம்

திருவாழுத்தான்

பள்ளி ஆண்டு விழா ஆசிரியர்களும் பெற்றோரும் சிறுவர்களும் கூடி இருந்தனர்.

இந்த ஆண்டின் விழாவின் போது, நாடகம் எதுவும் வேண்டாம் என்று தலைமை ஆசிரியர் சொல்லி விட்டார். பொருளாதாரச் சிக்கனம் காரணம். பதிலாக,மாறுவேடப் போட்டியைப் பரந்த அளவில் வைத்துக் கொள்ளலாம். அது நூதனமாக இருக்கவேண்டும் என்று முடிவு மேற்கொள்ளப்பட்டது. பிற்பகலில் விளையாட்டு போட்டி நடந்து முடிந்ததும், பரிசுகள் வழங்குவதற்குச் சற்று முன்னர் மேடையில் மாறுவேடப் போட்டி நடைபெறும் என்ற ஏற்பாடு.

மாறுவேடப் போட்டி சீராக நடைபெறுவதற்கான பொறுப்பை அறிவியல் ஆசிரியை ஏற்றிருந்தார். மாறுவேடங்கள் எந்தவகையில் அமைந்திருக்கும் என்பது தலைமை ஆசிரியருக்குக்கூட தெரிவிக்கப்படாமல் இரகசியமாக ஒத்திகைகள் பார்க்கப்பட்டன.

விளையாட்டுப் போட்டிகள் முடிய மாலை மணி ஐந்தரை ஆகியது. ஆகவே, சிற்றுண்டிக்குப் பிறகு பரிசு கொடுப்பதற்கான கூட்டத்தை மணி ஏழு அளவில் ஏற்பாடு செய்தார்கள்.

அகன்ற மேடை, மேடையைச் சுற்றி வண்ண விளக்குகள் மினுமினுத்தன. நகர்ப்புறத்தை விட்டுக் காட்டுக்குள் வந்துவிட்டோமோ என்கிற பிரமையை உண்டாக்கும் வகையில் மரங்கள், செடி, கொடிகள், புதர்கள் கொண்ட பசுமையான திரை மேடைக்குப் பின்புலமாக அமைந்திருந்தது.

மேஜையைக் கொண்டு வந்து மேடை நடுவில் போட்டார்கள். நாற்காலிகள் வந்தன. மைக்குகள் நின்றன.

ஊராட்சித் தலைவர் தலைமை தாங்கினார்.உடனடியாக நிகழ்ச்சிகள் தொடங்கின. தமிழ்த்தாய் வணக்கம் பாடப்பட்டது. அதிகமாக பேசாத தலைவர், அடுத்தநிகழ்ச்சி மாறுவேடப் போட்டி என அறிவித்தார்.

அவையோர் காத்திருந்தனர்.

கர்ஜனை ஒலி கேட்டது கூட இருந்தோர் அதிர்ந்தனர். சிங்கம் ஒன்று, இரண்டு கால்கள், இரண்டு கைகளுடன் மேடையில் தாவி வந்தது. குழந்தை ஒன்று பயந்து அழும் குரலினை அனைவரும் கேட்டனர்.

''நான் சிங்கம்''

''தெரிகிறது'' கூட்டத்திலிருந்து ஒரு சன்னக் குரல் எதிரொலித்தது

சிரிப்பு.

காட்டுராஜா நான். என்னைக் கண்டால் மற்ற விலங்குகள் அனைத்துக்கும் அச்சம். பசி வந்தாலொழிய நான் விலங்குகளைக் கொல்ல மாட்டேன்!'' சிங்கம் மீண்டும் கர்ஜித்தது,கை கூப்பியது. திரும்பி நடந்து திரைக்குப் பின்னால் மறைந்தது. அடுத்து புலி வந்தது. உறுமியது. இங்கும் அங்கும் கம்பீரமாக நடை போட்டது. மேடையில் நின்றது.

''நான் புலி''

''தெரிகிறது''

''நான் தேசிய விலங்கு''

''இருந்து விட்டுப் போ!'' கூட்டத்தில் யாரோ சொன்னார் சிரிப்பு.

புலி விழித்தது. திரைக்குப் பின்னே சென்று மறைந்தது.

திரைக்கு இந்தப் பக்கத்திலிருந்து கரடி வந்து நடுமேடையில் குதித்தது. ஆடியது கரணம் போட்டது.

''நான் கரடி.''

''தெரிகிறது'' கூட்டமே முழங்கியது.

'' ஒரு சமயம் நான் காட்டுலே வந்துகிட்டு இருந்தேன். ரெண்டுபசங்கள் எதிரே வந்துக்கிட்டு இருந்தாங்க. என்னைக் கண்டதும் ஒருவன் மரத்தில் ஏறித் தப்பிச்சுகிட்டான். மற்றவன் தரையிலே செத்தவன் போல படுத்துக்கிட்டான், நான் பக்கத்துலே போய் குனிஞ்சு அவன் காதுலே, ஆபத்துலே உதவாத நண்பனோட சேராதேனுசொல்லிட்டுச் சென்றேன்'' என்று கூறிவிட்டுக் கரடி திரும்ப ஓடி மறைந்தது. பலத்த கைதட்டல்.

அடுத்த யானை வந்தது பிளிரியது.

''நான் யானை''

''யார் சொன்னது? யானைக்குட்டி நீ. சித்தானைக் குட்டி'' யாரோ சொன்னார். கூட்டம் சிரித்தது.

''உங்களுக்கு யானையைப் பார்த்த குருடர்கள் கதை தெரியுமா?''

யானை கேட்டது.

''தெரியும்''.

''அப்போ அந்தக் கதையை நான் சொல்லப் போவது இல்லை.''

''மகிழ்ச்சி.''

''யானையும் தையற்காரச் சிறுவனும் கதை தெரியுமா?''

''தெரியும்''

''அப்படின்னா வேறு என்ன கதை நான் சொல்றது?''

''ஒரு கதையும் வேண்டாம் நீ உள்ளே போ''.

சிரிப்பொலி. யானை திரும்பி அசைந்து அசைந்து திரைக்குப் பின்னே மறைந்தது.

நரி வந்தது. ஊளையிட்டது.

''சீ.சீ'' யாரோ விரட்டினார்.

சிரிப்பு

''நான் நரி''

''தெரிகிறது''

''நான் மகா தந்திரசாலி'' சிரிப்பு

''என்னை யாராலும் பிடித்து விட முடியாது.''

''அப்படிச் சொல்லாதே! நரிக்குறவர்கள் பிடித்துவிடுவார்கள். ஜாக்கிரதை!''

சிரிப்பு

மேற்கொண்டு என்ன பேசுவது என்பது நரிக்குத் தெரியவில்லை இங்கும் அங்கும் பார்த்தது.

''ஓடு'' யாரோ சொன்னார்.

ஓடிய நரி திரைக்குப் பின்னால் மறைந்தது.

"மா..."

மாடு யாரோ சொன்னார்.

உண்மைதான். மேடையில் இரு கால்களில் மாடு நின்றது.

"நான் காளை."

தெரிகிறது.

"எனக்கு ரெண்டு கொம்பு உண்டு."

"ஒரு வாலும் உண்டு" யாரோ சொன்னார்.

சிரிப்பு.

"வண்டி இழுப்பேன்," வண்டி இழுப்பது பாவனையுடன் மாடு மேடையில் இங்கும் அங்கும் நடந்தது.

கூட்டத்தினர் பார்த்துக்கொண்டிருந்தனர்.

"செக்கு இழுப்பேன்" மேடையில் மாடு வட்டம் அடித்தது

நிசப்தம்.

"கமலையில் நீர் இறைப்பேன்" முன்னும்பின்னுமாக மாடு மேடையில் நடந்து காட்டியது.

கூட்டம் கை தட்டியது. மாடு சென்றது. பெரிய கனைப்பு. கூட்டத்தினர் காதுகளை மூடிக்கொண்டார்கள்.

"கழுதை" யாரோ சொன்னார்.

மேடையில் வந்து நின்றது கழுதை.

"நான் கழுதை"

"சொல்லாதே!" யாரோ சொன்னார்.

சிரிப்பு.

"நான் பொதி சுமப்பேன்."

"நீ உப்பு மூட்டை சுமந்த கதை தெரியுமா?" கூட்டத்திலிருந்து ஒருவர் கேட்டார்.

"தெரியாது"

"உன்னைச் சந்தையில் விற்கச் சென்ற தந்தை, மகன் கதைதெரியுமா?"

"ஓ, தெரியுமே!" கழுதை சொன்னது.

"அந்தக் கதையின் முடிவில் நீ என்ன செய்தாய்?"

"பாலத்திலிருந்து ஆற்றில் விழுந்தேன்."

"இப்போது மேடையிலிருந்து கீழே விழு"

சிரிப்பு விண்ணை எட்டியது.

முட்டிக் கால்கள் தட்ட கழுதை ஓடி மறைந்தது.

"உர்...உர்..."

புரியவில்லை. என்ன மிருகம் அது? கூட்டத்தினர் மூச்சுவிட மறந்து காத்திருந்தனர்.

பன்றி வந்தது. இங்கும் அங்கும் ஓடியது தரையை முகர்ந்து பார்த்தது எதிரே மேடையில் நின்று, "நான் பன்றி" என்றது.

"இங்கே நாற்றம் அடிக்கிறது" என்றது ஒரு குரல்.

"மகா விஷ்ணுவின் மூன்றாவது அவதாரம் நான்".

"வராக அவதாரம்" யாரோ சொன்னார்.

"நான் மட்டும் இல்லை என்றால் இந்த நாடு என்ன ஆகும் தெரியுமா?"

" என்ன ஆகும்?" யாரோ கேட்டார்.

"நாடே கழிவறையாக ஆகும்". சிரிப்பு.

"சிரிக்காதீர்கள். வெட்கப்படுங்கள்" என்றது பன்றி. நிசப்தம்.

"நாட்டை நான்தூய்மைப்படுத்துகிறேன்".

கூட்டம் கேட்டுக் கொண்டிருந்தது.

"என் இனத்தவரால் தான் மூளைக் காய்ச்சல் மனிதர்களுக்கு வருகிறது என்றுசொல்லி எங்களைக் கொல்கிறார்கள். மூளைக் காய்ச்சலுக்கு நாங்கள் பொறுப்பல்ல. எங்களைக் கடிக்கும் கொசுக்கள் உங்களையும் கடிக்கிறது.அதனால் மூளைக்காய்ச்சல் வருகிறது".

ஓசை இல்லை.

"எங்களுக்கு நோய் வருவது கிடையாது. நாங்கள் ஆரோக்கியமானவர்கள். என்னைப் போல உடல் நலத்துடன் இருக்க உங்களை வாழ்த்துகிறேன்." பன்றி சென்றது. கரவொலி விண்ணைப் பிளப்பதாக இருந்தது. கூட்டத்தில் சலசலப்பு

அடுத்து நாய் வந்து குரைத்தது. பெருச்சாளி மேடையில் குறுக்கும் நெடுக்குமாக ஓடியது.மயில் வந்து நடனம் ஆடியது. ஊஹூம்! கூட்டத்தினர் கவனிக்கவில்லை. பன்றியைக் குறித்த பேச்சில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

மாறுவேடப்போட்டி முடிவடைந்தது. நடுவர்கள் கூடிப் பேசினார்கள்.

தலைவர் பரிசுகள் வழங்க எழுந்தார். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் பரிசுகள் பெற்றுச் சென்றனர். கடைசியாக "மாறுவேட;ப போட்டிக்கான பரிசுகள்" அறிவிப்பாளர் தெரிவித்தார்.

கூட்டம் காத்திருந்தது.

"முதல் பரிசு பெறுவது பன்றி"

கூட்டம் கை தட்டி ஆமோதித்தது.

சிவப்பான சிறுவன் வந்து நின்று பரிசைப் பெற்றான்.

"பொதுநலத்துறை அமைச்சராக வருவதற்கு உனக்குத் தகுதி இருக்கிறது" தலைவர் சிறுவனை வாழ்த்தினார்.

கூட்டம் கையொலி எழுப்பிக் கொண்டே இருந்தது.

அடுத்து இரண்டாவது மூன்றாவது பரிசுகளை முறையே காளை மாடும்,கழுதையும் பெற்றன.

---

திருவாழுத்தான்

இயற்பெயர் ம.ரு. ராமசாமி, டெப்டி மானேஜர் காவேரி எஞ்சினியரிங் இண்டஸ்ட்ரீஸ் லிட், திருச்சி.

# துரையின் நன்கொடை

சரஸன்

அந்தச் சிறுவன் தன் சேமிப்புத் தொகையை எண்ணிப் பார்த்தான். மொத்தம் பதினெட்டுக் காசுகள் இருந்தன. எல்லாம் இரண்டு நயா பைசாக்களும், ஒரு நயா பைசாக்களுமாக இருந்தன.

துள்ளிக் குதித்தான். ஆனந்தக் கண்ணீர் வடித்தான். அவனுடைய விருப்பம் நிறைவேற இனி யாதொரு தடையும் இருக்கப் போவதில்லை. சில்லறைகளை எடுத்துக் கொண்டு, ஓடினான் எதிர்வீட்டிலுள்ள சந்திரசேகரனிடம். ''மாமா மாமா?'' என்று குதூகலத்துடன் குரல் கொடுத்துக் கொண்டே அவருடைய அறைக்குள் வேகமாய் நுழைந்தான்.

அப்போது அவர் வியாபார விஷயமாக கணக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். ''என்னடா துரைசாமி! என்ன விஷயம்?'' என்றார் தன் பார்வையைக் கணக்குப் புத்தகத்திலிருந்து சற்று உயர்த்தி.

''மாமா இந்தாருங்கள்'' என்று கூறி அவர் முன்பு தன் கையிலிருந்த சேமிப்புத் தொகையைக் கொட்டினான்.

''என்னடா இது?'' வியப்புடன் அவனை நோக்கினார், சந்திரசேகரன்.

''மாமா! கிணறு வெட்டப் பணம்! நாளைக்கே ஆரம்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்று கூறி அவரை ஆவலுடன் உற்று நோக்கினான் சிறுவன்.

சந்திரசேகரன் வாய்விட்டு பலமாக சிரித்தார்.

''என்ன மாமா சிரிக்கிறீர்கள்?''

''ஒன்றுமில்லையடா? உன் புத்திசாலித்தனத்தை எண்ணினேன் சிரிப்பு வந்தது'' என்று மழுப்பினார் அவர்.

'' மாமா! நான் புத்திசாலியா? இல்லவே இல்லை..சுத்த அசடு மாமா! புத்திசாலியாக இருந்தால், இந்தப் பணத்தை என் அம்மா செத்துப் போனபின் சேமித்திருப்பேனா? அவள் உயிருடன் இருக்கும்போதே சேர்த்து, ஊர்க்கோடியிலுள்ள பிள்ளையார் கோயிலுக்குப் பக்கத்தில் கிணறு வெட்ட ஆரம்பித்திருக்க மாட்டேனா?'' சிறுவன் கண்களிலிருந்து நீர் குபுகுபு வென்றுப் புறப்பட்டுத் தரையில் விழுந்து சிதறியது. சந்திர சேகரன் இதனைக் கண்டு கலங்கினார். சிறுவனைச் சமாதானம் செய்து, ''துரை அழாதே! நாளைக்கே உன் பணத்தைக் கொண்டு கிணறு வேலையை ஆரம்பித்து விடுகிறேன்'' என்றார்.

''மாமா! இன்னும் சரியாக ஒரு வாரத்திற்குள் கிணறு பூர்த்தியாக வேண்டும். கோடிவீட்டுக் காமாட்சிப் பாட்டி இந்தத் தள்ளாத வயதில் இரண்டு கிலோ மீட்டர் நடந்து போய்த் தண்ணீர் கொண்டு வருவதைப் பார்க்க எனக்கு அழுகையாய் வருகிறது'' என்றான் துரை.

''ஆகட்டும்! நீ போய் வா'' என்று அவனை அனுப்பினார் சந்திரசேகரன்.

துரைக்குப் பத்து வயதுதான் ஆகிறது. அவனுடைய விதவைத் தாயார் சில தினங்களுக்கு முன்புதான் இறந்து போனாள். தான் எப்பாடு பட்டாயினும் மகனை நன்கு படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வர வேண்டும் என்று ஆசைப்பட்டாள். ஆனால் விதி சதி செய்து விட்டது. இரண்டே நாள் காய்ச்சல் அவள் உயிரைக் குடித்து விட்டது.

தினமும் காலையில் எழுந்ததும் அவள் தான் ஒரு குடத்தை எடுத்துக் கொண்டு ஊருக்கு அப்பால் இரண்டு மைல் தொலைவிலுள்ள குளத்திற்குச் செல்வாள். குடிநீர் கொண்டுவர அவளுடன் துரையும் செல்வான். ஒரு சிறு சொம்புடன் வயல் வரப்பிலே நடந்து முள்ளும் கல்லும் பாதங்களைப் பதம் பார்க்க அவர்கள் பட்ட சிரமம்.!

''அம்மா ஏன் இவ்வளவு தூரம் நடக்க வேண்டும்?'' என்றான் துரை ஒருநாள்.

''ஊருக்குப் பக்கத்தில் ஒரு கிணறு இருந்தால் இந்தத் தொல்லையே இல்லை. எந்த மகானுபாவன் அந்தப் புண்ணியத்தைக் கட்டிக் கொள்ளப்போகிறாரோ? ஊரில் பணம் படைத்தவர்களுக்குப் பஞ்சமில்லை.

ஆனால், நல்ல மனம் படைத்தவர்களைத்தான் காணோம்?''

சிறுவனுக்கு அம்மா சொன்னது ஒன்றும் விளங்கவில்லை. ஆனால் ஒன்று மட்டும் விளங்கியது. ஊருக்குப் பக்கத்தில் ஒரு கிணறு இருந்தால், தண்ணீருக்காக இத்தனை தூரம் கஷ்டப்பட்டு நடக்கத் தேவையில்லை என்பதுதான்.

அன்று துரையின் தாயார் தண்ணீர் சுமந்து வருகையிலே காலில் முள் தைத்துத் தடுமாறிக் குடத்துடன் கீழே விழுந்து விட்டாள். 'ஓ' வென்று அலறினான் துரை. அதே காரணமாய்ப் படுத்த அவனது தாயார் ஜீரம் கண்டு இரண்டே நாட்களில் நெடும் பயணம் எய்தினாள்.

அம்மா தான் போய்விட்டாள். அவள் மாதிரி துன்பம் இனி யாரும் அந்த ஊரில் அனுபவிக்கக் கூடாது என்று அவன் பிஞ்சுமனத்தில் உதித்தது எண்ணம்.

எதிர்வீட்டுச் சந்திரசேகர் அவனிடம் சற்றுப் பிரியமும் அனுதாபமும் காட்டினார். திக்கற்ற அவனுக்குத் தம் வீட்டில் ஒருவேளை சோறுபோட்டார். அவருக்குக் குழந்தைகள் இல்லை. எனவே துரையிடம் அவர் சற்றுச் சரளமாகவே பேசினார். பரிவு காட்டி நடந்து கொண்டார்.

அன்று துரை அவரையணுகி, ''மாமா ஒரு கிணறு வெட்ட எத்தனைப் பணம் வேணும்?'' என்று கேட்டான்.

அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஏன் கேட்கிறாய்? என்றார்.

''இல்லை. சொல்லுங்க மாமா'' என்று வற்புறுத்திக் கேட்டான்.

''பத்துக் காசு இருந்தால் போதும்'' என்றார் சிரிப்பை அடக்கிக் கொண்டு.

''சரி'' என்று ஓடிவிட்டான் துரை.

தாயில்லாப்பிள்ளை என்ற காரணத்தினால் அவன் மீது இரக்கம் கொண்டு சிலர் அவனுக்குக் காசு கொடுத்தனர். துரை தனக்குக் கிடைக்கும் சில்லறைகளைச் சேர்த்துவைத்தான். சந்திரசேகரன் குறிப்பிட்ட ''பத்துக் காசு போதும்!'' என்ற சொற்கள் அவன் செவியிலே தாரக மந்திரமாய் ஒலித்துக் கொண்டிருந்தன.

பணம் கிடைத்துவிட்டது ஆம். தேவைக்கும் மேல் எட்டுக் காசுகள்! பணத்தை எதிர்வீட்டு மாமாவிடம் ஒப்படைத்து விட்டான். இன்னும் சில தினங்களிலே கிணறு தோன்றிவிடும். தன் அம்மாவைப் போல இனி யாரும் தண்ணீருக்காகக் கஷ்டப்பட வேண்டாம். ஊருக்குப் பக்கத்திலேயே அதிக தூரம் நடக்காமல் தண்ணீர் எடுத்துச் செல்லலாம்! பிஞ்சு மனம் பூரிப்படைந்தது.

மறுநாள் பிள்ளையார் கோயிலருகே கிணற்று வேலை ஆரம்பமாயிற்று. துரை உணவையும் மறந்து அருகில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

காமாட்சிப் பாட்டி அந்தப் பக்கம் சென்றாள். ''பாட்டி உன் கஷ்டம் இனி தொலைந்தது! இதோ. கிணறு வெட்டுகிறார்கள்'' என்றான் துரை உற்சாகத்துடன்.

கட்சிகளில்லாத ஊர் இருக்க முடியாதல்லவா? சந்திரசேகரைக் காட்டிலும் செல்வாக்கிலும், செல்வத்திலும் மேம்பட்ட சிலர் கூடிப் பேசினார்கள். இத்தனை பெரிய ஊரில் மக்களுக்கு நல்ல குடிநீர் வசதி பக்கத்திலேயே கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற எண்ணமே அவர்களில் யாருக்கும் உதித்ததில்லை. அந்தத் தேவையை அவர்கள் உணர்ந்திருந்தாலும், தங்கள் கையைக் கடித்து விடுமே என்று பயந்து போய்ச் சும்மாயிருக்க முடிவு செய்து விட்டனரோ என்னவோ? யார் கண்டது ?

இன்று சந்திரசேகரனுக்குப் பெயரும் புகழும் கிடைக்கின்றன என்றால் அவர்களால் எப்படிச் சும்மாயிருக்க முடியும்?

பிள்ளையார் கோயிலுக்குச் சற்று தொலைவில் பஞ்சாயத்துபோர்டு பள்ளிக்கூடம்.அதன் பக்கத்திலேயே பெரிய கிணறு. சந்திரசேகரின் முயற்சியில் தோன்றும் கிணற்றை விட இருமடங்கு பெரிய அளவில் தோண்டப்பட்டது. வேலை வெகுவேகமாக நடந்தது. ஊர்ப்பிரமுகர்கள், முனைந்து தொடங்கிய வேலைதான் அது.

ஊருக்கு என்ன? கொண்டாட்டம் தான்.ஒன்றுக்கு இரண்டு கிணறுகள் அல்லவா தோன்றுகின்றன.

சிறுவன் துரை சந்தோஷப்பட்டான். ''மாமா நம் ஊரில் இன்னொரு கிணறும் தோண்டுகிறார்கள். அடிசக்கை!'' என்று கூவினான் போட்டிக் கிணறு தோன்றும் வரலாற்றை அவனால் எப்படி அறிய முடியும்?

கிணறு வேலை பூர்த்தியடைந்தது. துரையின் தூண்டுதலினால் வெட்டப்பட்ட கிணறு நீர் அருமையாய் இருந்தது. ஆனால் போட்டிக்காக வெட்டப்பட்ட கிணற்றின் நீர் வாயில் வைக்க முடியவில்லை. அவர்கள் மனம் போலவே அமைந்தது தண்ணீரும்.

''மாமா நம் கிணற்றின் அடியில்தான் ஜனங்கள் எப்போதும் கூட்டமாய் இருக்கிறார்கள். பள்ளிக்கூட கிணற்றடியில் யாரையுமே காணோமே?'' என்றான் துரை.

''ஆமாம் அந்தக் கிணற்று நீர் ஒரே உப்பாம். நம் கிணற்று நீர் கற்கண்டு மாதிரி இருக்கிறது அல்லவா? அதனால்தான் எல்லோரும் நம் கிணற்றுக்குப் போகிறார்கள்'' என்றார் சந்திரசேகரன்.

பெருமை பிடிபடவில்லை துரைக்கு. ''மாமா இன்று காலை காமாட்சிப் பாட்டி நம் கிணற்றில் தண்ணீர் மொண்டு கொண்டிருந்தாள். அவள் வாய் முணுமுணுத்தது. மகராசன் சந்திரசேகரன் நல்லா இருக்கனும். அவருடைய நல்ல மனதுக்கு அவருக்கு சீக்கிரம் ஒரு குழந்தை பிறக்கனும். உங்கள் பேரில் அவளுக்கு எவ்வளவு அன்பு மாமா''

சந்திரசேகரனின் மனம் நெகிழ்ந்தது. அவர் ஊரில் அன்பையும் வாழ்த்தையும் பெற்றார். ஆனால் அவர் செய்த பணிக்குத் தூண்டு கோலாய் இருந்தவன் யார்? உலக விவரமேயறியாத ஓர் ஏழைச் சிறுவன் அல்லவா?

ஊருக்குத் தேவையான அந்தக் கிணறு அவனுடைய தூண்டுதலில்லாமல் இப்போது ஏற்பட்டிருக்குமா? தன் காசில்தான் கிணறு வெட்டப்பட்டது என்று அந்தப் பிஞ்சுமனம் எண்ணியது. ஆனால் என்ன? சந்திரசேகரன் செலவு செய்த எழுநூறு ரூபாய்கள் அந்தச் சிறுவன் அளித்த பதினெட்டு நயா பைசாக்களுக்கு ஈடாகுமா? ஒருக்காலும் ஆகாது இப்படித்தான் சந்திரசேகரனின் உள்ளம் எண்ணிக் கொண்டது.

சிறுவனின் சேவை உணர்ச்சியை ஊரறியச் செய்ய வேண்டும் என்று அவர் விரும்பினார். ஊர் தமக்களிக்கும் கௌரவமும் பாராட்டுக்களும் உண்மையில் சேர வேண்டியது அந்த ஏழைச் சிறுவன் துரைக்குத்தான் என்று அவர் கருதினார்.

''துரை...''

''ஏன் மாமா''

''இன்று மாலை பிள்ளையார் கோயிலில் ஜனங்கள் கூடப் போகிறார்கள்.''

''எதற்காக மாமா?''

''உன்னைப் பாராட்டத்தான்''

''என்னையா?''

''ஆம்!''

''நான் என்ன செய்தேன்?''

''அந்தக் கிணறு வெட்ட நீதானே பணம் தந்தாய்''

சிறுவன் துள்ளியெழுந்தான்.

''மாமா, மாமா! வேண்டாம். நான் வரமாட்டேன்''

''ஏன்டா?''

''த்லோ நான் கிணறு வெட்டப் பணம் கொடுத்தது யாருக்கும் தெரியக்கூடாது! என் அம்மா சொல்லியிருக்கிறாள்'' என்றான் துரை.

சந்திரசேகரன் திடுக்கிட்டார் ''என்னடா சொன்னாள் உன் அம்மா?''

''உள்ளன்புடன் தர்மகாரியம் செய்கிறவர்கள் தாங்கள் செய்யும் தர்மங்களை மற்றவர்கள் அறியாவண்ணம் தான் செய்வார்களாம். அது போல நான் செய்த தர்மமும் யாருக்கும் தெரியக்கூடாது!'' என்றான் துரை.

சந்திரசேகரன் செயலற்று நின்றார்.

சரஸன்

இயற்பெயர் ஸ்ரீநிவாசன், ஆல் இண்டியா ரேடியோ சென்னை.

ஆகஸ்ட்

**1.8.08, 2.8.08** – நாட்டுப்புறக்கலைகள் குறித்த குழந்தைகள் மாநாட்டு நிகழ்ச்சியின் ஒளிப்பதிவு திரையிடப்பட்டது.

**3.8.08** – தொண்டர் சு.கார்த்திக் கனவுகள் அரங்க குழந்தைகளுக்கு 'செப்புக செந்தமிழ்' என்ற நிகழ்ச்சியை நடத்தினார்.

**4.8.08** – புதுயுகம் படைப்பரங்க வகுப்புகள் நடைபெற்றன. அனைவருக்கும் புதுயுகம் இதழ்கள் விநியோகிக்கப்பட்டன.

**5.8.08** – நாட்டுப்புறக் கலைகள் குறித்த சீடு குழந்தைகள் மாநாடு பற்றிய கட்டுரையை கூாந முனோர நாளிதழ் லுடிரபே றுடிசடன பகுதியில் வெளியிட்டிருந்தது.

**6.8.08** – படிப்பதை எளிமையாக நினைவில் கொள்வது குறித்து கனவுகள் அரங்க குழந்தைகள் கலந்துரையாடலை நிகழ்த்தினர். நிகழ்வை நிர்வாக அறங்காவலர் கார்த்திக் பாரதி ஒருங்கிணைத்தார்.

**8.8.08** – அமெரிக்கன் கல்லூரியில் ஆதிவாசிகள் தினவிழா கலைநிகழ்ச்சிகளைப் பார்வையிட நிர்வாக அறங்காவலர் கார்த்திக் பாரதி தலைமையில் குழந்தைகள் சென்று பங்கேற்று பயனடைந்தனர்.

**10.8.08** – சீடு – இல் நண்பர்கள் தினம். சீடு ஆலோசகர் திருமிகு. முத்துக்குமார் சீடு தொண்டர்களுக்கு புதூர் அரசன் ஹோட்டலில் விருந்து வழங்கி மகிழ்ந்தார்.

**12.8.08** – இன்று சீடு தொண்டர், பணியாளர் கூடுகை நடைபெற்றது.

**13.8.08,14.8.08** – இன்று வாண்டுகள் மற்றும் வேர்கள் அரங்க குழந்தைகளுக்கு நடனப் பயிற்சி வகுப்புகள் தொண்டர்கள் மோகன், முனியசாமி மற்றும் முருகபாண்டி அவர்களால் நடத்தப்பட்டன.

**15.8.08** – இன்று மதுரை சீடு நிகழ்ச்சி அலுவலகத்தில் இந்திய சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் மன்சூர் தேசியக் கொடியை ஏற்றி வைத்து சுதந்திர தின செய்தி வழங்கினார்.

**16.8.08** – சுதந்திர தினவிழா கொண்டாட்டமாக மாலை சீடு இளைஞர் கலைக்குழுவினர் சார்பில் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**17.8.08** – தமுக்கம் மைதானத்தில் நடைபெற்ற தினமலர் பொருட்காட்சிக்கு சீடு இளைஞர்கள் சென்று வந்தனர்.

**18.8.08** – மதுரை சீடு சார்பாக வாண்டுகள் அரங்க குழந்தைகள் 75 பேருக்கு நோட்டுபுத்தகங்கள், பென்சில் பெட்டிகள் முதலியன வழங்கப்பட்டன. விழா ஏற்பாட்டினை சீடு நிர்வாகக் குழு செய்திருந்தது.

**19.8.08** – இன்று அமெரிக்கன் கல்லூரியில் ஞஉாடிடிட நுஒவநளேடிைே ஞசடிபசயஅஅந தொடக்க கூட்டத்தில் கருத்தாளராக நிர்வாக அறங்காவலர் கார்த்திக்பாரதி பங்கேற்றார்.

**23.8.08** – இன்று வான்முகில் கலைக்குழுவின் கலைநிகழ்ச்சிகள் சமுதாயக் கூடத்தில் நடைபெற்றன. சுமார் 60 குழந்தைகள் நடன நிகழ்ச்சிகளை வழங்கினார். மதுரை கிராமியம் என்ற தலைப்பில் நிகழ்ந்த இந்நிகழ்வை ஊநுஞஊஐ மைய நண்பர்கள் ஞ.சர்புதீன், மதுமேனன் (கேரளா), ஹரி நாராயணன் (பீகார்) ராஜேஷ்குமார் (ஹரியானா) போன்றோர் மற்றும் பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த ஊாசளைவடியீடந பசபைசை, ஏனைஉநவே உாயளளைே, குடிசநஉந டுயளளயரளளந, ஆடிஎய, ஞயனேசளைநே, ஊயவாநசளைநே உடிரசளடிே, சுடிரளடிள, ஊயஅயீயயே டுடிரளை போன்றோரும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சீடு குழந்தைகளை வாழ்த்தினர்.

**25.8.08,29.8.08** மாதாந்திரத் தேர்வு தயாரிப்புப் பணிகள் துவங்கின.

**30,8,08** – கனவுகள், தேடல்கள் அரங்க குழந்தைகளும், இளைஞர்களும் தசாவதாரம் திரையிடலையும், குழு விவாதத்தையும் நிகழ்த்திக் கொண்டனர்.

செப்டம்பர்

**1.9.08** – சீடு தொண்டர், பணியாளர் கூட்டம் நடைபெற்றது.

**2.9.08** – இன்று முடிநேல றுநடட நிறுவனம் வழங்கிய கல்வி உதவித்தொகைகளை ஒன்பது கல்லூரி இளைஞர்களும், பத்து பள்ளிக் குழந்தைகளும் பெற்று பயனடைந்தனர். உதவித் தொகை ரூ 60,000. முடிநேல றுநடட நண்பர்கள் திருமிகு. அன்னமரியாள், திருமிகு. பரத், திருமிகு. தண்டபாணி, திருமிகு. கணேஷ் ராமரத்தினம், திருமிகு. இலெட்சுமி நாராயணன் போன்றோருக்கு மதுரை சீடு – இன் நெஞ்சார்ந்த நன்றிகள்

**3.9.08** – சீடு மூத்த தொண்டர் ஆசிரியர் மனுவேல் – மெர்லின் திருமணவிழாவில் சீடு தொண்டர்கள்

ஐவர் பெரியகுளம் சென்று மணமக்களை வாழ்த்தினர். மதுரை சீடு சார்பாக மணமக்களுக்கு வாழ்த்துகள்! வாழ்க! வளமைகள் பெறுக!.

சீடு – இன் மூத்த மாணவி, முன்னாள் நிதி அறங்காவலர் தொண்டர் கிருஷ்ண வேணி, அண்ணாத்துரை திருமண விழாவில் (ஐராவத நல்லூர்) சீடு சார்பில் அண்ணன் கார்த்திக்பாரதி, அன்பரசன், மோகன், மன்சூர், பிரேம் குமார், சுல்தான் கலந்து கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தனர். மணமக்கள் வாழ்க! வளமைகள் பெறுக.!

மாலை சீடு தொண்டர் பிரகாஷ் அவர்களின் தங்கை உமாராணி, அசோக் திருமண முன் வரவேற்பில் சீடு இளைஞர்கள், தொண்டர்கள், பணியாளர்கள் திரளாகக் கலந்துகொண்டு வாழ்த்துகள் தெரிவித்தனர். இடம்: அய்யர் பங்களா.
மணமக்கள் வாழ்க! வளமைகள் பெறுக.!

விநாயகர் சதுர்த்தி நாளையொட்டி குழந்தைகள் கொண்டுவந்த தின்பண்டங்கள் மலையாய் குவிந்தன அதனை அனைத்து குழந்தைகளும் பகிர்ந்து உண்டு மகிழ்ந்தனர்.

**4.9.08** – கார்த்திக் பாரதி அவர்களின் மாணவி உமாராணி திருமண விழாவில் சீடு தொண்டர்கள் பங்கேற்றனர். இடம் – அய்யர்பங்களா. புதிய வெளிச்சங்கள் விநியோகிக்கப்பட்டன.

சீடு தொண்டர் முருகபாண்டியின் சகோதரி மற்றும் சீடுமாணவி பாண்டிமீனா – முனியாண்டி (வத்தலக்குண்டு, ரெங்கநாதபுரம்) திருமண விழாவில் சீடு சார்பாக கார்த்திக் பாரதி அண்ணன், மற்றும் டி.மணிகண்டன் பங்கேற்றனர். மணமக்கள் வாழ்க! வளமைகள் பெறுக!

**5.9.08** – சகோதரி பாண்டிமீனா – முனியாண்டி திருமண வரவேற்பு (சாத்தமங்கலம், ஜானகியம்மாள் மண்டபம் ) நிகழ்ச்சியில் 6 ஆம் வகுப்பு முதல் கல்லூரி வரையிலும் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் திரளாக பங்கு கொண்டனர். புதிய வெளிச்சங்கள் இளைஞர்இதழ்கள் விநியோகிக்கப்பட்டது.

**6.9.08** – மக்கள் தொலைக்காட்சி 3 ஆம் ஆண்டு விழாவில் (ராஜா முத்தையா மன்றம்) சீடு குழந்தைகளும், இளைஞர்களும் பங்கு கொண்டனர்.

இன்று ஆசிரியர் தினவிழா மையத்தில் கொண்டாடப்பட்டது. சீடு குழந்தைகள் தங்கள் ஆசிரிய அண்ணன், அக்காகளுக்கு அழகிய பரிசுப்பொருட்களை வழங்கி மகிழ்ந்தனர்.

**7.9.08** – வாண்டுகள் அரங்கம் – வெளியரங்க விளையாட்டுகள் – ஞ. மணிகண்டன் வேர்கள் அரங்கம் – ஓவிய வகுப்புகள் – ஞ. பாண்டியராஜன் கனவுகள் அரங்கம் – சமையல் வகுப்பு – பைசர்கான் (பிளம்கேக் செய்வது எப்படி)
மேற்கண்ட நிகழ்வுகள் நடைபெற்றன.

**8.9.08** – சீடு தொண்டர் சரண்யாவின் சகோதரர் நு.சதீஸ்குமார் – ஞ.ஆனந்தி திருமண வரவேற்பு விழாவில் (மு.சண்முகம் ஞானகிரி மகால், காமராசர் சாலை) 8 முதல் கல்லூரி வரை பயிலும் குழந்தைகளும், இளைஞர்களும் மணமக்களுக்கு பரிசுகள் வழங்கி, வாழ்த்துகளை தெரிவித்தனர். மணமக்கள் வாழ்க! வளமைகள் பெறுக!

**10.9.08** – சீடு தொண்டர்கள் டீ. மோகன் டீ. மணிகண்டன், மாணவர் டீ. வீரபாண்டி இல்ல புதுமனைப் புகுவிழா சிறப்பாக நடைபெற்றது. சீடு குழந்தைகளும், இளைஞர்களும் பங்கு கொண்டு மகிழ்ந்தனர்.

**12.9.08**

**24.9.08** – குழந்தைகளுக்கு காலாண்டுத் தேர்வுகள் நடைபெற்றன.

**15.9.08** – சீடு தொண்டர் மு. அன்பரசன் ஞடயஉநஅநவே வசயபேைப காரணமாக நிலக்கோட்டை சென்றார்.

அண்ணா பிறந்தநாள் என்று விடப்பட்ட திடீர் விடுமுறையை சீடு அரங்கங்களை தூய்மை செய்யும் பணிகளுக்கு குழந்தைகளும், இளைஞர்களும் பயன்படுத்திக் கொண்டனர்.

**18.9.08** – இன்று தொண்டர், ராம்குமார் எளியவர் ஒருவருக்கு இரத்ததானம் செய்தார். அவரை மற்ற தொண்டர்கள் பாராட்டினர்.

**21.9.08** – சீடு நிர்வாக அறங்காவலர் ஹ.ளு. கார்த்திக் பாரதியின் பிறந்தநாளையொட்டி 8 பெண் தொண்டர்கள் மற்றும் 19 ஆண் தொண்டர்களுக்கு வண்ணமிகு உடைகள் திரு.கார்த்திக் பாரதி அவர்களால் வழங்கப்பட்டன

**22.9.08** – மிக எளிமையாக தங்கள் அண்ணன் ஹ.ளு.கார்த்திக் பாரதியின் பிறந்த நாளை சீடு குழந்தைகளும், இளைஞர்களும் கொண்டாடி மகிழ்ந்தனர். ஒன்றாம் வகுப்பு முதல் கல்லூரி மூன்றாமாண்டு வரை உள்ள குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் அனைவரும் உற்சாகமாகப் பங்கு கொண்டு பரிசுகளும், வாழ்த்துகளும் வழங்கினர்.

# மதுரை சீடு

காலாண்டுத் தேர்வு விடுமுறையையொட்டி நடைபெற்ற சிறப்பு நடவடிக்கைகள்

## வாண்டுகள் அரங்கம்

| தேதி | காலை | பொறுப்பு | மதியம் | பொறுப்பு | மாலை | பொறுப்பு |
|---|---|---|---|---|---|---|
| 25.9.08 | நாடகம் போடு ! தயாரிப்பு | K. அழகிரி<br>M.சிவகுருநாதன் | நாடகம் போடு ஒத்திகை | K. அழகிரி<br>M.சிவகுருநாதன்<br>R.பாஸ்கர் ராஜா | நாடகம் போடு ! அரங்கேற்றம் | M.சிவகுருநாதன்,<br>O.மோகன் K. அழகிரி<br>R.பாஸ்கர் ராஜா,<br>M.மருது பாண்டி<br>M. மாரிமுத்து |
| 26.9.08 | உள்ளரங்க விளையாட்டுகள் | O.மோகன் | அறிவோம் சீடு வரலாறு | O.மோகன்<br>K. அழகிரி | சீடு பாடல் பயிற்சி | M.சிவகுருநாதன்,<br>O.மோகன்<br>M.மருது பாண்டி<br>M. மாரிமுத்து |
| 27.9.08 | Finding Nemo குழந்தைகள் திரையிடல் | R.பாஸ்கர் ராஜா<br>O.மோகன் | ஓய்வு | --------- | தானம் அறக்கட்டளை குறும்பட விழாவில் பங்கேற்பு, சுற்றுலா திரைவிழா பங்கேற்பு | O.மோகன்<br>R.பாஸ்கர் ராஜா,<br>M. மாரிமுத்து<br>S.சுல்தான் அலாவுதீன் |
| 28.9.08 | ஜாலி விளையாட்டுப் போட்டிகள் வண்டியூர் பூங்கா | | | M.சிவகுருநாதன்,O.மோகன்<br>R.பாஸ்கர் ராஜா,<br>S. சுல்தான் அலாவுதீன்,<br>M.மருது பாண்டி | ஓய்வு | --------- |
| 29.9.08 | சீடு பாடல்கள் பயிற்சி | M.சிவகுருநாதன் | சீடு பாடல்கள் நடனம் | M.சிவகுருநாதன் | சீடு பாடல்களும் நடனமும் அரங்கேற்றம் | M.சிவகுருநாதன்,<br>O.மோகன்<br>M.மருது பாண்டி<br>M. மாரிமுத்து<br>S.சுல்தான் அலாவுதீன் |
| 30.9.08 | ஓய்வு | --------- | வண்ணம் தீட்டுக | M. மாரிமுத்து<br>M. மருதுபாண்டி | ரம்ஜான் விழா<br>சூழலியல் பூங்கா பார்வையிடல் | பணியாளர்கள்<br>R.பாஸ்கர் ராஜா,<br>M.மருது பாண்டி |

# மதுரை சீடு

## காலாண்டுத் தேர்வு விடுமுறையையொட்டி நடைபெற்ற சிறப்பு நடவடிக்கைகள்

## வேர்கள் அரங்கம்

| தேதி | காலை | பொறுப்பு | மதியம் | பொறுப்பு | மாலை | பொறுப்பு |
|---|---|---|---|---|---|---|
| 25.9.08 | காந்தி மியூசிய நூலக பார்வையிடல் | C. ஈருண்குமார் | "முனபே முடிபே" திரையிடல் | S. முருகபாண்டி | குறும்படவிழாவில் பங்கேற்பு (VI), (V) | M.சுரேஷ் ராஜன் N.ராமச்சந்திரன் |
| | | | | | உரைவீச்சு (VII), (VIII) A.S.கார்த்திக் பாரதி | வேர்கள் அரங்க தொண்டர்கள் |
| 26.9.08 | வாழ்த்து அட்டைகள் தயாரிப்பு | P. முனியசாமி | நீச்சல் பயிற்சி பெண்கள், ஆண்கள் | M.அமுதா M.சுரேஷ் ராஜன் | குறும்பட விழா, சுற்றுலா தினவிழா பங்கேற்பு (VI), (V) | P.முனியசாமி M.சுரேஷ்ராஜன் |
| | | | | | உரைவீச்சு மாரிவேல்ராஜன் (VII), (VIII) | வேர்கள் அரங்க தொண்டர்கள் |
| 27.9.08 | சத்திரப்பட்டி சிற்றுலா (எ), (எஜ),(எஜஜ) | P. முனியசாமி, C. அருண்குமார், M. மாரிமுத்து, M.சிவகுரு, N. ராமச்சந்திரன் | ஓய்வு | --------- | குறும்படவிழா, சுற்றுலா தினவிழா பங்கேற்பு (IV), (எ),(எஜ), (எஜஜ) | P.முனியசாமி, C.அருண் குமார் S.முருக பாண்டி, M.அமுதா, R. கௌசல்யா பெரியசாமி |
| | அழகர் கோயில் சிற்றுலா (VIII) | S.முருகபாண்டி | | | | |
| 28.9.08 | ஒரு நிமிட குறும்பட தயாரிப்பு வண்டியூர் பூங்கா | S.முருகபாண்டி, P.முனியசாமி, C.அருண்குமார் | குறும்பட ஒலி/ ஒளி பதிவு | S.முருகபாண்டி, P.முனியசாமி, C.அருண்குமார் | குறும்பட வெளியீடு | வேர்கள் அரங்க தொண்டர்கள் |
| 29.9.08 | ஜாலி விளையாட்டுப் போட்டிகள் வண்டியூர் பூங்கா | | | S.முருகபாண்டி, R.கௌசல்யா, C.அருண்குமார் | சுற்று சூழ்நிலைப் பூங்கா (VI),(V) | P.முனியசாமி N.ராமச்சந்திரன் |
| | | | | | உரைவீச்சு கேப்ரியேல் (VII),(VIII) | வேர்கள் அரங்க தொண்டர்கள் |
| 30.9.08 | ஈகை நாளாம் இரம்ஜானையொட்டி பசுமலை "இன்ப இல்லம்" செல்லல் மற்றும் கலைநிகழ்வு | | | C.மோகன், S.முருகபாண்டி, R.பாஸ்கர், M.சிவகுரு, C.அருண்குமார் | இரம்ஜான் கொண்டாட்டம் | பணியாளர்கள். |

# மதுரை சீடு

## காலாண்டுத் தேர்வு விடுமுறையையொட்டி நடைபெற்ற சிறப்பு நடவடிக்கைகள்

## கனவுகள் அரங்கம்

| தேதி | காலை | பொறுப்பு | மதியம் | பொறுப்பு | மாலை | பொறுப்பு |
|---|---|---|---|---|---|---|
| 25.9.08 | கேரம் போட்டிகள் | N.ராமச்சந்திரன் | நீச்சல் பயிற்சி பெண்கள், ஆண்கள் | P.சரண்யா தேவி R. கார்த்திக்ராஜா | சிறப்பு சொற்பொழிவு பாரதிதாசன் பாடல்கள் A.S.கார்த்திக் பாரதி | கனவுகள் அரங்க தொண்டர்கள் |
| 26.9.08 | ஹாரி பார்ட்டர் திரையிடல் | N. ராம்குமார் | புதுயுகம் படைப்பரங்கம் | C.அருண்குமார் | "சமூகப் பணியில் குழந்தைகளின் பங்கு" மாரிவேல் ராஜன் சட்டக்கல்லூரி மாணவர் | கனவுகள் அரங்க தொண்டர்கள் |
| 27.9.08 | மதுரை வேளாண்மைக்கல்லூரி பார்வையிடல் | | | P.சரண்யா தேவி விஜய் | குறும்படவிழா சுற்றுலா தின விழா பங்கேற்பு | கனவுகள் அரங்க தொண்டர்கள் |
| 28.9.08 | கோலப்போட்டி | M.மன்சூர்அலி O.மணிகண்டன் | "பொய் சொல்லப் போறோம்" திரையிடல் | M.மன்சூர் அலி | "கனவுகளும் விளக்கங்களும்" பேரா. அனுராமா, அமெரிக்கன் கல்லூரி | கனவுகள் அரங்க தொண்டர்கள் |
| 29.9.08 | திரையிடல் "காமராஜர்" | M. மன்சூர்அலி | நீச்சல் வகுப்புகள் | P. சரண்யா M. மன்சூர்அலி | "மதமும் அறிவியலும்" கேப்ரியேல் மாணவர் அமெரிக்கன் கல்லூரி | கனவுகள் அரங்க தொண்டர்கள் |
| 30.9.08 | ஈகை நாளாம் இரம்ஜானையொட்டி பசுமலை "**இன்ப இல்லம்**" செல்லல் மற்றும் கலைநிகழ்வு | | | O.மோகன், M.சிவகுருநாதன், R.பாஸ்கர் ராஜா, S.முருகபாண்டி, C.அருண்குமார் | இரம்ஜான் கொண்டாட்டம் | பணியாளர்கள் |

நிகழ்ச்சிப் பதிவு : **C.அருண்குமார், M.மன்சூர்அலி**

## Madurai SEED10th year special activities
## SEED NOTES - 2008
## (25th September to 2nd October)

It's un fortune that, The school education system is not favor to the children. Schools are the planting field of the future's excellent citizens. Schools conduct 3 mid-term exams, 4 monthly exams and quart yearly, half yearly, annual exams. Likewise, They conduct ten exams in all ten months, so they are in the situation of making preparation for the children for exams in a whole year. In this circumstance, SEED is making the dynamic way of teaching as an educational tune up from within the children and youth, it has.

As SEED youth have taken part and after some discussions, we've done the quarterly exam holidays scheduling.

### Madurai SEED special food festival:

On 25th, September, 2008, Evening, As a result of SEED youth's well-preplanning and preparation, Karumpalai East street was decorated with colorful lights and coconut tree leaves. Yes! This is the special food festival by Karumpalai SEED children and youth, which is a part of SEED 10th year celebration. The children, who are from first standard to twelfth standard, with the help of volunteers took responsible and prepared a variety of dishes. Besides these, College youth and Staff made separate stalls .Wall posters with the prices list of all dishes (which are from Rs 1 to Rs 3) Were pasted all over the streets. The children and youth informed that profit gained from this food festival to be spent to an old age home.

About 800 children and parents gave their great presence to the food festival. The children prepared some issues and advertisements for their dishes. We could see the kid's creativity skill and well understanding situation in this festival. With Rs 800 as capital, they earned profit of Rs 585. the kids from first to twelfth standard, sold the dishes respectively such as Chapatti, Idly, Puttu, Boori, Gulab jamun, Dosa, Bread roast, Kesari, Pani poori, Jigarthanda, Boli, Jeera dosai and College youth sold Vada and Tomato rice by staff and These are all served very hot and tasty.

Based on taste, Jeera dosa (12th ), Boli(11th ),Dosa(6th ),Bread roast(7th )and Kesari(8th ) secured the first three places. In accordance with selling, Pani Boori (9th), Puttu (3rd), bread roast (7th), respectively got the first three places.

The kids and youth enjoyed this grand food festival very artistically. Mr.Parthiban from Student Federation of India, secretary American college branch Participated as a chief guest.

**Special speeches and discussions:**

**In Madurai SEED holistic educational centers, children and youth from ninth standard to college third year students participated in various discussions and special speeches from 26th September, 2008 to 2nd, October, 2008.**

Miss.Anu Rama Professor of sociology department in the American college gave her speech on, "Dreams and their explanations ". She made her speech with the explanation of what is dream? How does the dream come? And what are their explanations?

Mr. Marivel Rajan, assistant Secretary of Students Federation of India Madurai and the last year law college student, kindled the children and youth by his speech on "The importance of children's part in the development of the society". He told about what is society? What is our place in our society? How to live with social integration and social values. And he said many historical events as the examples. This emotionally and knowledge filled. Speech gave enthusiasm to all.

Mr. Cabriel of physics department of the American college gave his speech on," science and religion". He explained about what is science and religion? The conflicts of the both in the history, the advantages, when these two joined together he explained all these by songs and awareness games.

SEED managing trustee A.S. karthik Bharathi spoke on various topics. The children and youth learnt about the vast development of thamizh and its pride and some songs and Education through the medium of the mother tongue.

As this continuation, they heard and enjoyed numerous intellectuals' speech and debated. They enjoyed 2 debates under prof.K.Gnana sumbanthan as the judge, prof. Salamon pappaiya's debate, Mr. Mohan's debate and speeches of Mrs.ilambirai Manimaran and Mr.sundara Avudaiyappan when they hear; they will get a broad mind about the stage speaking and manners.

**International Tourism day:**

Tamilnadu tourism department has conducted the world tourism day festival on 26th and 27th, September. SEED children participated in that festival. The children enjoyed through seeing and hearing the music Programme, bharathanattiyam and photographic session. It was very useful to the children to know about the arts, tourist places and tourism department's activities.

**Ramzan celebration:**

As Ramzan celebration, 75 children went to old age home near pasumali. Biscuits and snacks were provided to grandmas and grand papas in that home, Those are bought with money gained as the profits from the special food festival. Cultural programs were conducted to those people for 2 hours. The children returned from the home, shares their feelings wonderfully. We could feel that they've got the sense about the aged people's welfare and their necessity as the social values.

There are 2 Muslim volunteer and 15 Muslim children as SEED members Ramzan is celebrated very grandly in our centre, where there is mostly Hindus. The message like Islam principles, why is there Ramzan? We provided special gifts to Muslim children and youth. All children hugged other and said their Ramzan wishes. This function was well planned by seed staff group. All ate bajji and biscuit as the Ramzan dish.

**Kottansoru (*mixing up all vegetables and rice*):**

One Sunday morning was very amazing. About 80 children and 20 youth took part. Each and everyone took any one kind of things for cooking from their home like rice. SEED is slightly filled with rice, and vegetables. Then many groups were divided such as food preparation committee, water supply committee, food serving committee, sweeping committee and the committee for creating songs for kootanchoru and they did their respective works with in two hours, a mixture of sampar and pulikulambu rice is prepared .All sang sweet songs and ate that rice. Seed remained as a superb family on that day.

**Gandhi jayanthi:**

SEED Vandugal arangam and Vergal children took part in Gandhi jayanthi (*birthday of father of our nation*). The children put up flowers to the statues of Gandhi. Then they sang songs which are speaking the greatness of Gandhi. Dinamalr daily recorded the children's beauty of singing near the Gandhi statue and Dinamani recorded the beauty of kid's respect to Gandhi. They saw a postage stamps exhibition in Gandhi museum and enjoyed it.

---

Like wise, The programs in SEED from September 25 to October 2 (*8 days*) remained as the activities to create sense about the leadership and educational system. The children feel very happy about that they spent their holidays in a combination of entertainment and meaningful.

The volunteers also got interest and enthusiasm as the SEED activities were very helpful to make the education interesting and easy. Because, They are the only people to get spirit to work well. Isn't it?

On 6th, October, 2008, karthik Bharathi gave simple gifts to 22 volunteers as the way to say his thanks to their great service. SEED volunteers have taken the oath of that. They will work well to the children, as they enjoyed this quarterly exam holidays.

# MADURAI - SEED

SINCE 1999

## மதுரை சீடு

குழந்தைகள், இளைஞர்கள் மேம்பாட்டுப் பணிகள்

10ஆம் ஆண்டுகளில்

2008–2009

| | | | |
|---|---|---|---|
| வாண்டுகள் அரங்கம்<br>வேர்கள் அரங்கம்<br>கனவுகள் அரங்கம் | மதுரை சீடு குழந்தைகள் பேரவை<br>செந்தமிழ் நூலகம்,<br>வான்முகில் கலைக்குழு, தேன்கூடு வங்கி,<br>புதுயுகம் சிற்றிதழ் | தேடல்கள்<br>அரங்கம் | மதுரை சீடு இளைஞர்கள் பேரவை<br>ஆசிரியர் குழு, தொண்டர் குழு,<br>கலைக்குழு, இளைஞர் வங்கி,<br>புதிய வெளிச்சங்கள் காலாண்டு இதழ் |

**புதிய மனிதர்களாகத் தலையெடுக்கும் வாய்ப்பைச் சமூகம் பெற்றோரின் வறுமை காரணமாகவும், சாதி காரணமாகவும் சிறுவர்களுக்கு மறுப்பதன் விளைவாக வரும் செயல் சுதந்திரமின்மை, சுயமரியாதை இழப்பு ஆகியவை பற்றி அரசியல் ஆரவாரமுள்ள இசம் எதுவும் தமிழ்ச் சமூகத்தில் இல்லை. எனவே, இமையத்தின் கதைகளில் வரும் சிறுவர்களின் வாழ்க்கைப் பிரச்சினை பற்றிய - உரிமைப் பிரச்சினை பற்றிய - கவனம் இலக்கிய விமர்சகர் யாருக்கும் வராமல் போனால் ஆச்சரியமில்லை. மார்க்சியம், பெண்ணியம் போன்று இலக்கியத்தை வாசிக்க சிறாரியம் எனும் தத்துவம் அவர்கள் கைக்கு கிடைக்கவில்லை என்றே அதை விளங்கிக் கொள்ள வேண்டும்.**

இமையம் எழுதிய மண் பாரம் என்னும் சிறுகதைத் தொகுப்பின் முன்னுரையில் : Dr. **இ.அண்ணாமலை** யேல் பல்கலைக்கழகம் USA


**புதுயுகம் இதழ் வெளியீட்டுக் குழு**

C. கற்பக ஜோதி (XII), V. திவ்ய பாரதி (X), M. மணிகண்டராஜ் (IX) S.முத்துகணேஷ் (VIII)

தொண்டர் பொறுப்பாளர் : C.அருண்குமார்,B.Sc.,

**குழந்தைகளின் புதுயுகம் தனிச்சுற்று சிற்றிதழ் வெளியீட்டு முயற்சிக்கு உதவியோர்**

Dr. வெல்லியம் அண்ணாமலை (ஆஷா) சென்னை ஆஷா, திருமிகு. வே. மாரியம்மாள், M.A.M.Ed.,

திருமிகு. A.S.கார்த்திக் பாரதி, M.A.,M.Phil., திருமிகு. K.அன்பரசன் M.A.,

மதுரை சீடு நிர்வாகக்குழு



For Contact : **PUDUYUGAM JOURNAL**

Madurai SEED Children Federation(MSCF)

**SEED TRUST**

Arjun Shanmuga illam, 439/1, East Street, Karumpalai, Madurai - 625 020.

Ph : 9894895446, 0452-6456503, 9244556503, E-mail : mdu.seed1999@yahoo.co.in